[illegible] 1[illegible]

கடவுட்டுணை.

பகாபகோபாத்யாய, [illegible]

[illegible] தயார் நூல் [illegible]

[illegible], செல[illegible]

# பஞ்சதந்திரப்பாடற்கதை.

சென்னை. பெரியமேட்டு

ஷண்முகம்பிள்ளையவர்களால்

அச்சிடப்பட்டது.

MADRAS.

PRINTED AT ST. JOSEPH'S PRESS,

BY M. S. YAGA[illegible]PILLAY,

BROADWAY.

1891.

Registered Copy Right.

Dr. U.V. S[illegible] Library
BESANT NAGAR. MADRAS-600 090.

C-, INSa, I
C1

## ஆக்கியோன் பெயர்.

### வெண்பா.

வயவீர சொன்பான் வழியுற்ற மேன்மையான
செயவீர மார்த்தாண்ட தேவன் — பெயரார்
பன்னூலி னுண்ணூலாம் பஞ்சதந்திரத்தை
மன்னூலாச் சொற்றான் மகிழ்ந்து.

# பாயிரம்.

## கடவுள்துதி.

சீர்பெறுமுலகோர்யாருஞ்செயத்தொடர்கருமமுற்றப்
பேர்பெறுபெரியோரெல்லாம்பேணியேதுதித்தல்செய்யும்
நேர்பெறுமனைத்துநாதனாய்நின்றமுன்னோனைப்போற்றிப்
பார்பெறுதமிழினாலேபஞ்சதந்திரஞ்சொல்வேனே. (௧)

## அவையடக்கம்.

வானமொழியமுதமயாவர்மனையினங்களைத்தூற்றாலும்
மீன்பயில்கங்கைசேரின்மிக்கநற்றீர்த்தமாகும்
தேனடுமாகவிஞர்செஞ்சொலசிறியன்வாயுற்றதேனும்
தானபெரியோரைச்சேரிற்றண்டமிழ்க்கவிதையாமே. (௨)

## இதுவுமது.

தன்மமேயாதிநான்குதகுதியின்பகுதியெல்லாம்
பன்முறைதமிழ்நூலாலேபாரமிசைவிளக்குமேலோர்
சொன்முன்யான்றந்திரத்தைச்சொல்லல்வான்சுடரின்முன்னே
மின்மினிதானுமாங்கோர்விரிசுடராதல்போலும். (௩)

பாயிரமுற்றிற்று.

# முகவுரை.

கடல்சூழ்ந்த நெடிய வுலகத்தின்கண் உன்னத பர்வதஞ்சூழவிளங்கும் இவ்வுத்தம இந்துதேசத்திலே பற்பலகதைகளுளவாயினும் அவைகளுக்கெல்லாம் தாயகமாய்ச் சிறந்து லௌகீகத்துக்கு வேண்டிய அநேக விஷயங்களை யாவர்மனதிலும் பதியச்செய்வதாய் நிலைபெற்ற கதையும ஒன்றுண்டு அதைத தான் கற்றுவல்ல பலரும் கவனமாய் "பஞ்சதந்திரம்" என்று புகல்வர். இந்நூலின்றலை நன்குணர்ந்த ஆங்கிலேயர் சென்னை சர்வகலாசாலைகளிலும் உபயோகித்துவரக் கட்டளையிட்டனர். இப்புத்தகம் யாவர்க்கும எளிதிற் கிடைக்கப் பெறின், உறுதியும், ஊக்கமும், பகுத்தறிவும், அபாயங்களிலே மனத் தளர்ச்சியின்றி அவைநீங்கும் உபாயத்தையும், பெரியோரிடத்தும் பலர் ஒன்றுகூடும் பேரவையின் கண்ணும் கற்றோரும மற்றோரும் பெரிதுவக்கப் பிரியமாய் நடக்கும் பேற்றையும, தனக்குநேரிட்ட பகைவன் மலைபோலுற்றாலும பனிபோலாக்கும் பராக்கிரம திறத்தையும் இன்னுமிவைபோன்ற பலவித கருத்துகளையும் பாங்காயடைந்து பயன் பெற்று பலராலும் புகழ்வுற்று வாழ்வரெனக்கருதி செய்யுள் ரூபமாயெல்லா மதத்தருக்கும் அநுகுண்ணிய முற்றதும் யாவரும் எளிதில் உணரத்தக்க லேசான தமிழ் நடையுள்ளதுமான விக்கதை நெடுநாண் முன்னரே (அதாவது:— 60-௵த்துக்கு முன்னம்) சில வித்துவான்களால் பரிசோதித்து அச்சிட்டதும் அச்சிடாமல் வைத்திருந்ததுமான காப்பிகளைக் கொண்டுஇப்போது பலருக்கு முபயோகமாம் பொருட்டு நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றது.

☞ இதை நம்மதேசத்துக் கனவான்களும், தனவாகன்ளும், சிறுவர் சிறுமிகளும், நன்றாய்வாசிக்கக்கற்றோரும மற்றோரும் கையாண்டு களிப்புற விரும்புகின்றோம்.

1392

கடவுள் துணை.

# பஞ்சதந்திரக்கதை.

## கதைவரலாறு.

பாடலிபுரத்துமன்னன்சுதரிசனன்றன்பாலர்
மூடராய்த்திரிதலாலேயவர்கண்மேன்மோகநீங்கி
வாடியிங்கிவர்களாலேபலனென்னமலட்டாவோபபாம
பீடிலார்பிறந்தாரன்றேபிள்ளையெண்ணிக்கைக்கென்றான். ()

கல்வியுங்குலத்தைக்காக்குங்கருத்துமில்லாதமைந்தர்
செல்வமுங்குணமுமிக்கசெவ்விசேருருவும்பெற்றென்
நல்வினையிலாவாபெற்றநங்கைதான்பூத்தகாலை
யிலவருக்கருவிலாமற்கருவழிந்திடலுநன்றே. (௨)

ஆயிரமகவைப்பெற்றுமாவதென்னம்மாமிக்க
தூயநல்லறிவனானசுதனொருவனையேபெற்றால
தாயொடுதந்தையென்னதவமியற்றினரோவென்று
மாயிருஞாலம்போற்றுமரபெலாந்தழைக்குமன்றே. (௩)

எவ்வனஞ்செல்வமிக்கவிராசதமவிவேகத்துள்
ஒவ்வொன்றேகேட்டுக்கெல்லாமுறுதுணையாகிநிற்கும்
இவ்வகைநான்குங்கூடியொருவன்பாலிருந்தவென்றால
எவ்வகையாலன்னோனுக்கிகபரங்கிடைப்பதென்றான். (௪)

அங்கவன்சபைபின்மிக்கவறிஞரைநோக்கிமைந்தர்
தங்களைமடமைநீக்குந்தகைமையரில்லரோவென்னத்
துங்கமாமறையோனானசோமசன்மாவெழுந்தே
இங்கிவர்க்கறிவாலொப்பாரிலரெனச்செய்வேனென்றான் (௫)

விஞ்சுமாமறையோன்மாற்றம்வினவியேயரசர்கோமான்
நெஞ்சகமகிழ்ந்துமிக்கநிதியொடுமக்கடம்மைக்
கொஞ்சமில்களிப்பினோடுங்கொடுத்தனன்சோமசன்மா
பஞ்சதந்திரத்தினாலேபாலரைத்திருத்தவெண்ணி. (௬)

மன்னவன் குமாரர் தங்கண் மனங்களுக்கேற்குமாறு
நன்னயம்பெறுசொற்பேசிநண்புகொண்டிருக்குநாளில்
பொன்னணிமார்பிரின்பம்பொழிகதையொன்றுண்டென்னப்
பன்னுமக்கதையேதென்றூர்பஞ்சதந்திரமென்றூனே. (எ)

பஞ்சதந்திரங்களென்னும்பான்மையேதுரைத்தியென்ன
வஞ்சமாமித்ரபேதமருவியசுகிர்லாபஞ்சீர்
விஞ்சுமாகிலத்திற்சந்திவிக்ரகமர்த்தநாம்
அஞ்சலிலசம்பிரேக்ஷ்யகாரித்வமாமவற்றுள். (அ)

மித்திரபேதநட்பைவிலக்கியேபகையுண்டாக்கல்
ஒத்தவர்நட்புக்கூட்டலோதியசுகிர்லாபந்தான்
மெத்தவும்பகைத்துளாரைவிரும்பிநட்பாக்கிப்பின்னச்
சத்துருநாசம்பண்ணல்சந்திவிக்கிரகமாமே. (கூ)

கிடைத்ததையழியப்பண்ணல்கெழுமியவர்த்தநாசம்
திடப்படவிசாரியாமற்செய்யுங்காரியத்திறமம்
கடைப்படுமசம்பிரேக்ஷ்யகாரித்வமென்பதாகும்
தடப்பெருந்தோளீரென்றான்சதுமறைக்குரியகோமான். (க0)

மாதவனுரைக்குஞ்சூழ்ச்சிமன்னவன்குமாரர்நெஞ்சில்
காதலைவிளைத்தலாலேகமலைமார்பினைநோக்கி
ஈதியாமறியவேண்டுமெமக்கிதைவிரித்துநன்று
ஓதுகபெரியோயென்னவுயர்மறையவன்சொல்வானுல். (கக)

கதைவரலாறு முற்றிற்று.

# பஞ்சதந்திரக் கதையின் அட்டவணை.


| கதையின் பெயர். | பக்கம். | பாட்டு. |
|---|---|---|
| **1-வது:—மித்திரபேத தந்திரம்.** | | |
| சிங்கத்தோடிடபம்வாழ்ந்திறந்தகதை … … | 1 | 1 |
| குரங்கு குறிசுங்கியகதை … … … | 3 | 14 |
| பேரொலிகேட்டஞ்சிப்பேரிகைகண்டகதை … | 6 | 40 |
| தமக்குத்தாமேகேடுசெய்துகொண்டகதை … | 7 | 48 |
| காகம்நாகத்தைக்கொன்றகதை … … … | 11 | 73 |
| சிங்கத்தைமுயல்கொன்றகதை … … … | 11 | 76 |
| நண்டுகொக்கைக்கொன்றகதை … … … | 13 | 83 |
| சீலைப்பேன்மூட்டுப்பூச்சியாலழிந்தகதை .. … | 18 | 118 |
| காக்கை ஒட்டகத்தையழித்தகதை … … | 22 | 151 |
| கடலைச்சிட்டுவென்றகதை … … … | 26 | 174 |
| ஆமைசொற்புத்திகடந்துஇறந்தகதை … … | ,, | 179 |
| மும்மீன்கதை … … … … … | 27 | 181 |
| இடைச்சிசோரபுருடனைக்காத்தகதை … … | 28 | 183 |
| துட்டபுத்திகெட்டகதை … … … | 31 | 195 |
| இரும்பெலிதின்றதென்றகதை … … … | 33 | 202 |
| **2-வது:—சுகிர்லாப தந்திரம்.** | | |
| காகம்-எலி-ஆமை-மான்-வேடனைவென்ற கதை … | 36 | 2 |
| புலியால்பிராமணன்மரணமடைந்தகதை… … | 37 | 9 |
| நரியால் மான் வலையிற்பட்டகதை … … | 40 | 28 |
| பூனைக்கிடங்கொடுத்துக் கழுகிறந்தகதை… … | ,, | 33 |
| எலிதன்வரலாறுசொல்லியகதை… … … | 46 | 70 |
| விதிசெய்தகதை… … … … … | 47 | 77 |
| **3-வது:—சந்திவிக்கிரகதந்திரம்.** | | |
| காக்கை கோட்டானைவென்றகதை … … | 54 | 3 |
| வாய்க்குற்றத்தாற்கழுதைகெட்டகதை … … | 57 | 25 |
| முயல்யானையைவென்றகதை … … … | 58 | 33 |
| மைனாவும்முயலும்மோசம்போனகதை … … | 61 | 51 |
| அந்தணனைவஞ்சித்தகதை … … … | 63 | 67 |
| கோமுட்டிக்குக்கள்ளனுதவிசெய்தகதை… … | 66 | 89 |
| தச்சன்கதை … … … … … | 68 | 103 |
| ரகசியம்விட்டுப்பாம்புகளிறந்தகதை … … | 69 | 111 |

| கதையின் பெயர். | பக்கம். | பாட்டு |
|---|---|---|
| வேடனகதை ... ... ... ... ... | 70 | 118 |
| பொன்னெச்சமிடுபறவைக்கதை... ... ... | 71 | 123 |
| நரி சிங்கமோசமறிந்தகதை ... ... ... | 72 | 128 |
| எலிக்கதை ... ... ... ... ... | 73 | 133 |
| பாம்புதவளையைச்சுமந்தகதை ... ... ... | 76 | 157 |
| 4-வது:—அர்த்தநாச தந்திரம். | | |
| முதலைகுரங்கைவிட்டுநாணமடைந்தகதை. ... | 79 | 3 |
| தவளைபாம்பைவஞ்சித்தகதை ... ... ... | 82 | 24 |
| கழுதையிறந்தகதை ... ... ... ... | 83 | 29 |
| குயவன்கதை ... ... ... ... ... | 85 | 47 |
| நரிக்குட்டிக்கதை ... ... ... ... | 86 | 53 |
| கணவனைவஞ்சித்தகதை... ... ... ... | 87 | 61 |
| மகளிர்சொற்கேட்டுமானமிழந்தகதை ... ... | 89 | 66 |
| நரிசிரித்தகதை ... ... ... ... ... | 90 | 73 |
| குரங்குகுருவிக்கூண்டைக்கலைத்தகதை ... ... | 91 | 81 |
| நரிநால்வர்க்கும்நான்குபாயஞ்செய்தகதை ... | ,, | 86 |
| நாயைக்கடித்தகதை ... ... ... ... | 92 | 92 |
| 5-வது:—அசம்பிரோட்சியகாரித்வ தந்திரம். | | |
| கீரிப்பிள்ளைகதை ... ... ... ... | 94 | 3 |
| பொரிமாத்தோண்டியையுடைத்தகதை ... ... | 95 | 8 |
| கீரிப்பிள்ளையைக்கொன்றகதை ... ... ... | 96 | 17 |
| நாவிதனிறந்தகதை ... ... ... ... | 97 | 24 |
| செட்டிகதை ... ... ... ... ... | 99 | 36 |
| பேராசைகொண்டுபேதுற்றகதை ... ... | 102 | 60 |
| சிங்கத்தைப்பிழைப்பித்துச்செத்தகதை ... ... | 104 | 71 |
| அறிவின்மிக்கமீன்களிறந்தகதை ... ... | ,, | 75 |
| இசைபாடிக்கழுதையிடருற்றகதை ... ... | 105 | 79 |
| தகாவரம்பெற்றுச்சாலியனிறந்தகதை ... ... | ,, | 82 |
| குரங்குபழிவாங்கியகதை ... ... ... | 106 | 88 |
| குரங்குதுன்புற்றகதை ... ... ... ... | 108 | 103 |
| குருடன்முதன்மூவர்குணப்பட்டகதை ... ... | 109 | 108 |
| நண்டின்வழித்துணையாற்பிழைத்தகதை... ... | 110 | 117 |

## முதலாவது.

# மித்திரபேததந்திரம்.

சிங்கமொன்றிடபமொன்றுசேர்ந்துவாழ்ந்திருந்தகட்டை
அங்கொருநரிதானெய்தியழித்ததாலென்றுகூற
இங்கிதுபுதுமைதானேயிடபமேதரிமாவேது
வெங்குறுநரியழித்தவிவரமேதருள்கவென்றார். (௧)
நலந்திகழ்தெற்குநாட்டின்மகிழாருப்யத்தினண்ணி
இலங்கியவர்த்தமானனெனுமொருவணிகன்றன்பால்
துலங்கியநிதிமிக்குற்றுந்தூரவாணிபஞ்செய்திந்தத்
தலமவாலவேண்டுமென்றுதன்மனத்தெண்ணலுற்றான். (௨)
பொருளிலார்க்கின்பமில்லைபுண்ணியமில்லையென்றும்
மருவுறுகீர்த்தியில்லைமாந்தருட்பெருமையில்லை
கருதியகருமமில்லைகதிபெறுவழியுமில்லை
பெருநிலத்திடைநடக்கும்பிணமெனப்படுவரன்றே. (௩)
நற்பொருளறத்தையின்பநலத்தைஞானத்தைமிக்க
சொறபெறுபுகழையென்றுந்துகளறுபெருமைதன்னைப்
பற்பலருறவைநட்பைப்பகைதவிர்த்திடுந்திறத்தைப்
பொற்புறுகதியையெல்லாம்பொருளலாற்றருவதின்றே. (௪)
ஆதலாற்றருமவாற்றாலரும்பொருளீட்டிமேலும்
ஊதியங்கொண்டறஞ்செய்துரியவப்பொருளைக்காத்தல்
நீதியிவ்வாறுசெய்யார்நிதியமுந்தேய்ந்துமற்றும்
ஓதுமெங்கலமுமின்றியுறுதுயரடைகுவாரே. (௫)
இன்னனபலவுநெஞ்சிலெண்ணியேவணிகன்றன்பால்
மன்னியசரக்கைச்சூலவண்டியிலேற்றிக்கொண்டே
தென்னமர்நந்தகன்சஞ்சீவகனெனும்பேருற்ற
தன்னெருதிரண்டும்பூட்டிச்சதுரொடேத்திறனே (௬)

நடத்திடுநாளிலோர்கானனிபெருங்காட்டிலோர்காட்
டிடத்திற்சஞ்சீவகன்காலிடறியேநொண்டியாக
எடுப்பருஞ்சரக்கையாளாலெடுப்பித்தவ்வெருதைக்காட்டில்
விடுத்தொராள்வைத்துப்போனான்விளிந்ததென்றவனும்போனான். ()
போனபின்னெருதுக்கின்னம்பொன்றுநாள்வராமையாலுந்
தீனிமிக்கருந்தலாலுந்திணிந்துமுன்னொடிந்தகாலில்
ஊனமுமாறிவேறோரொப்பிலாவிடமாகிக்
கானகமுழுதுமேய்ந்துகளிட்புடன்றிரியுநாளில் (௮)

வேறு.

பொங்குகதிர்திங்களொளிபுகுதவரிதாகிக்
கங்குல்குடிதங்கிவளர்கானமதையாளும்
பிங்கலனெனப்படுமொர்பேருடையதாகுஞ்
சிங்கவரசன்யமுனைசேர்கரையடைந்தே. (௯)

கோதறுநதிப்புனல்குடித்திடநடக்கும்
போதிடபமப்புறமொர்பொற்புறுமிடத்தில்
காதுமுகவீற்றெழுகடற்பெருமுழக்கே
ஈதெனநடுக்குறவிடிக்குரல்செய்தன்றே. (௰)

இங்கிதையறிந்திலமிதேதுபுதிதென்று
சிங்கவரசங்கமொடுசிந்தையுநடுங்க
அங்கிருநரிக்குருளைகண்டவவைதம்பேர்
வெங்கரடகன்றமனகன்னெனவிளங்கும். (௰௧)

அந்தவரசன்முதலமைச்சுநரிசேய்கள்
வந்தவவையாதலின்மடங்கலெனுமன்னன்
சிந்தைதளர்வுற்றதெனசெய்தியெனவோயுன்
னுந்தமனகன்கரடகன்றனையுசாவ. (௰௨)

கரடகனமக்கிதெனகாரியமிதாலே
இரைபெறுதுமோபெருமையெய்துவதுமுண்டோ
கருமமலதானவொருகாரியமியற்றின்
பெருமுளைபிடுங்கியகுரங்குபெறுபேறே. (௰௩)

### (குரங்கு குறி நசுங்கிய கதை.)

பெரியமுளையேதுகுரங்கேதுபெறுபேறே
துரையெனவொர்தொன்னகரமுண்டதையடுக்க
மருவுமொருகோயிலதன்மன்னியபணிக்கோர்
பரியமரமிருபிளவுபடமுளைகடாவ! (௰௪)

பாதிபிளவாகியொருபாதிபிளவாமல்
ஏதமறுசோலையினிடத்ததுகிடப்ப
மாதுளவனத்திலுறைமந்திசிலவந்தே
தாதவிழ்மலர்ப்பொழிலிருவிவிளையாட. (௰௫)

அங்கொருகுரங்குபிளவாமரவிடர்க்குள்
தங்குகுறிவைத்துமுளைதனைவறிதசைத்தே
செங்கைகொடெடுப்பவிடர்சிக்கெனநெருக்க
அங்குறிநசுங்கியுயிர்மாய்ந்ததுவன்றே. (௰௬)

காரியமலாதவொருகாரியமியற்றின்
பேருயிரிழப்பதவர்பேறெனவுரைத்தே
தேருமிரைநென்னல்சிலதின்றகுறையைத்தின்
றூர்வதுநமக்குறுதிவாவெனவழைக்க. (௰௭)

கரடகனைநோக்கியிரைகருதுவகைநமக்கேன்
அரசர்கருமம்பெருமையாவையுமளிக்குந்
திரமுடையவரசர்பணிசெய்துலகிலதனால்
பெரியரவர்கண்புகொடுபெறுகுவர்சகாயம் (௰௮)

மிக்கவவர்சீவனமெவர்க்குமிகுமுதவி
திக்குலவுகீர்த்திபெறுசீவனமதல்லால்
கொக்குமுதலானபறவைக்குலமனைத்துந்
தக்கவிரைகொள்ளுமதுதான்பெருமையன்றே (௰௯)

வன்பசிகொள்சிங்கமதயானையலதியாதுந்
தன்பசிதனக்குநுகராதுதளர்நாய்கள்
என்புசிறிதீரமிலவேனுமிரையாக
அன்பினொடுகௌவியெயிறழியினும்விடாவே. (௨௰)

## மித்திரபேத தந்திரம்.

ஆனைபசிகொள்ளினுமதற்குரியபாகன்
தான்வலியவேயிரைதரத்தாவருந்தும்
ஈனமொடுநாயுதரமெக்கிமுகநோக்கி
வானுனிகுழைத்துதவவாங்கியுணுமெச்சில். (உக)

இந்தவகைதமனகனியப்புதலுநாமோ
மந்திரிகள்கூறெனமறுப்பவொருகருமம்
தந்திரமொடேபுரிதலாற்றலைமையெய்துஞ்
சிந்தையினிலூகமிலையேற்சிறுமைசேரும். (உஉ)

கல்வினைதெரிந்துயர்நலம்பெறுதலரிதே
அல்வினைபுரிந்திழிவடைந்திடுதலெளிதே
செல்வமுதவேரிகரைசெய்தன்மிகவரிதே
ஒல்கியிடவேயதையுடைத்தன்மிகவெளிதே. (உங)

ஏறிவரைமேலொருகலேற்றன்மிகவரிதே
சாறிவிழவேயொருகறள்ளிவிடலெளிதே
தேறியிதுபெருமையீதுசிறுமையெனவெண்ணிக்
கூறுபெரியோரிவைகுறித்திடுவரன்றே. (உச)

ஒருகணமதானபொழுதேனுமுரவோர்கள்
பெருமைபுகழ்ஞானமுளபேரொடுமிருப்பார்
கருமையுருவானகொடிகட்டமுடனெச்சில்
பருகிவெகுநாளளவுபாரிடையிருக்கும். (உரு)

பெருமையொடுசிறுமைதருபெற்றியவரவரால்
வருவதலதியாதுமிலைமன்னுமிவைதம்மில்
அருமையுணர்வோர்பெறுவரரசில்வருபெருமை
ஈடகவெனத்தமனகனைவினவுமதுவே. (உசு)

இன்னவகைநீதிகளியம்புதமனகநீ
உன்னுவகையென்செயவுரைத்திடுதியென்ன
மன்னவன்வருத்தினைதவியன்னெனமதித்தே
அன்னவன்மனத்துயரகற்றிடுவனென்ன. (உஎ)

அந்தமொழிகேட்டகரடகனரசனுள்ளச்
சிந்தைமெலிவெப்படிதெரிந்தனனக்கென்ன
புந்தியில்விசாரமொடுபோயினனதைத்தான்
முந்துமரசன்றிருமுகஞ்சொலியதென்றான். (௨௮)

வேறு.

சிங்கமன்னனையடைந்தவன்செய்தியைவினவி
ஆங்கவன்றனதகத்துயரகற்றியேயவன்பால்
துங்கமந்திரத்தலைமைபூண்டிவ்வனஞ்சூழ
நங்குலங்களுக்கினியவாழ்வளிப்பனுனென்றான். (௨௯)
வேந்தருங்கொடுந்தீயும்வெவ்விடம்பொழிபகுவாய்ப்
பாந்தளுஞ்சரியாதலினன்னவன்பக்கல்
போந்துநண்புகொண்டடவிநீபுரக்குமாறென்னும்
மோந்திடும்படிகடிப்பதுமன்னர்தம்முறையே. (௩௰)
மன்னவன்குணங்கொடிதெனவகுத்தலுமதற்குத்
துன்னுபைங்கொடியடுத்தகொம்பதனையேசூழுங்
கன்னிமாதருமன்னருந்தங்களைக்காத்தே
பன்னுமிங்கிதஞ்சொலுமவர்பாற்செய்வர்பரிவு. (௩௧)
என்னவெப்படிபேசுவாயிறையிடத்தெனக்குப்
பன்னுகென்னவெண்வாயினின்றுமழைபொழிபாரில்
துன்னும்வித்திடைமுளையெனவுத்தரந்தோன்றும்
மன்னவன்வினாவினுக்கெதிரெனநன்குமதிக்க. (௩௨)
என்றலுங்கரடகன்றமனகனுரைக்கிசைந்து
ன்றுநீயவன்பக்கல்போயவன்குணநாடி
வென்றியெய்தெனநரியரியேந்தனைச்சேர்ந்து
ன்றுகைதொழுநோக்கியேசிங்கமாநிருபன். (௩௩)
ற்றைநாள்வரைக்காண்கிலென்றமனகவென்ன
ற்றகாரியங்கண்டபோதெய்துவனுன்பால்
கொற்றவாவெனைச்சிறியனென்றுன்மனங்கொள்ளேல்
வெற்றியும்பெருமையுமுனக்கெய்திடவிளைப்பன். (௩௪)

அங்குரத்தினிலறிகுவர்விளைபயிரதுபோல்
இங்குநீயறிகுவையினியென்குணஞ்செயலால்
துங்கவாளிசையாழ்புவிதோலகையர்சான்றோர்
தங்குநூல்கள்காப்பாற்றுவோர்தங்களாற்றழைக்கும். (௩௫)

நலங்கொண்மன்னவரடைந்தவர்தங்களுணூடிப்
புலன்கொள்பேரறிவாளரைநம்பியேபொருந்தில்
இலங்குநீதிகளியற்றுவரவரரசெங்குக்
துலங்குமென்னலுமனமகிழ்ந்தரசனுஞ்சொல்வான். (௩௬)

உரிமைமந்திரிக்குமரனீயாதலினுனக்குப்
பெருமைமந்திரப்புத்திகள்வந்திடப்பெற்றாய்
வருகவென்றருகழைத்துநம்பிக்கையும்வழங்கி
ஒருமையாகநங்காரியம்பற்றெனவுரைக்க. (௩௭)

அந்தமன்னனைநோக்கநின்னகத்தொருதுளக்கம்
வந்தபோலுநீயுளாயெனமன்னனிவ்வனத்தில்
எந்தநாளுநானறிகிலாமுழக்கமின்றெழுந்த
திந்தமாமுழக்கென்னெனத்துளங்கியதிதயம். (௩௮)

முழக்கிற்கேற்பதாயிருக்குமன்றேமுழங்குயிரும்
வழுக்கிவீழ்கையிலூன்றுகோலென்னநீவந்தாய்
இழுக்கமாறநீயெனக்கதையுணர்த்தெனவியம்பத்
தழைக்குமன்பொடுதமனகனொருகதைசாற்றும். (௩௯)

(பேரொலிகேட்டஞ்சிப் பேரிகைகண்டகதை.)

நரியொன்றெய்தியபசியினுளிரைதனைநாடித்
திரியும்போதசதியிலொருபேரொலிசெவிகேட்
டரியநெஞ்சகந்துணுக்கெனவச்சமுற்றோய்ந்து
தெரிவமீதெனச்சென்றதுதிடங்கொடுபின்னர். (௪௰)

அன்னவோரிதான்சிறிதுதூரத்தமர்க்களம்போய்ப்
பின்னரோர்மரத்தடியுறுபேரியைநோக்கி
முன்னர்மேவுமத்தோலையுங்கோலையுமுறையால்
உன்னியேதனதுளத்தினிலுணர்ந்ததிவ்வாறு. (௪௧)

தங்குமிம்மரச்சினையினிற்றாழ்ந்தகோடொன்று
பொங்குகாற்றினாற்றாக்கலாற்பொம்மெனுமொலிதான்
இங்குமேவுமிப்பேரியிலெழுந்துளதென்று
சிங்கமன்னனீயஞ்சுகைதகாதெனச்செப்பி. (௪௨)

சென்றுநானதைவிரைவினிற்றெரிந்திவண்மீள்வே
னென்றதன்விடைகொண்டுசஞ்சீவகவெருதை
நன்றுகண்டுநண்புற்றுமீண்டரசனைநண்ணி
ஒன்றுபேரொலிக்கேற்றதவ்வுயிரெனவுணர்த்தி. (௪௩)

நினதுநட்பினைவிரும்பியததுவெனநிருபன்
அனையதேலதையழைத்துவாவென்னலுமதுபோய்த்
தனைநிகர்த்திடுமெருதினைத்தலைவன்முன்விடுத்தே
இனியநண்பொடுமிருந்திடவிருத்தியதன்றே. (௪௪)

சிங்கமன்னனுமிடபமுமுயிரெனச்சிறந்தே
அங்கிருந்தரசாளுநாள்பழையதன்னமைச்சர்
தங்கணண்பெலாமறந்துசஞ்சீவகன்றனையே
பொங்குமந்திரியெனக்கொளப்போயதுகெடுகோள், (௪௫)

பரிசனங்களுமந்திரிக்கூட்டமும்பார்த்தே
அரசனுந்தனையடைந்தநம்மிடத்திலன்பற்றான்
இரையருந்துவதேதுநாமினியெனவிளங்கக்
கரடகன்றனைநோக்கியேதமனகன்கழறும், (௪௬)

காட்டிலேதனித்திருந்தசிங்கத்துடன்கலந்த
மாட்டைவங்கணமாகநாங்கூட்டியமாண்பு
கோட்டுவெங்களிற்றனைதன்மத்தகங்கொத்தத்
தோட்டிபாகனுக்கீந்தவாறுமெனச்சொல்லி. (௪௭)

## தமக்குத்தாமே கேடுசெய்துகொண்ட கதை.

முன்புதங்களாற்றாங்களேகெட்டனர்மூவ
ரொன்பதோர்கதையுண்டெனத்தமனகனியம்ப
அன்பொடக்கதையாதெனக்கரடகன்வினவச்
சம்புவோடுசெக்யாசிதூதியதெனச்சாற்றும். (௪௮)

சன்னியாசியோர்தேவசன்மாவவன்றனே
முன்னியாசகத்தனேகநாடேடியமுதலைத்
துன்னுகந்தையுட்பொதிந்துதோன்றாதுவைத்திருந்தான்
அன்னசெய்தியாஷாடபூதியுமுளத்தறிந்து. (௪௯)

சந்ததந்திருடாமனுஞ்சன்னியாசியின்மேற்
கந்தையொன்றினையெவ்வகையாகிலுங்கவர்ந்தால்
நந்தம்வேசியர்க்கனேகநாணடக்குமென்றெண்ணிப்
புந்திகூர்ந்தொருபிரமசாரியினவண்பொருந்தி. (௫௰)

அன்னவன்றனையடிபணிந்தடியனேன்றனக்கு
மன்னுநற்கதிபெறுவழியருளெனவழுத்திப்
பன்னுமிங்கிதத்தொண்டுபணிவிடைபலவியற்றித்
துன்னுநாளிலோரந்தணனமுதிடத்துய்த்தே. (௫௧)

இருவருமொருபெருவழிநடந்தனரிவன்றன்
ஒருதுரும்புதன்றலைமிசைக்கொண்டுணவளித்தோற்
குரியநன்மனைத்துரும்பிதோவொட்டிவந்ததுபார்
குரவவாங்கிதைச்செலுத்துவனென்றுகொண்டோடி. (௫௨)

அந்தவீட்டிலுய்த்தவனெனமறைந்திருந்ததன்பின்
வந்தசீடனைநம்பியேதேவசன்மாதன்
கந்தையன்னவன்கைக்கொடுத்தொருகுளக்கரையில்
மூந்துநீர்ச்சௌசாதிகண்முடித்துமீள்காலை, (௫௩)

பொருகடாவிரண்டங்கெதிர்பாய்ந்திடப்பொழியும்
குருதிபாரினில்வீழ்ந்ததுபருகிடக்குறுகி
நரியத்தாக்கிடைப்பட்டுயிரிழந்ததுநாடிப்
பரிவினோடவன்பார்த்துநின்றேநினைதற்குள். (௫௪)

இந்தவேளைபோலெய்தரிதென்னவச்சீடன்
கந்தைதான்கொண்டுடன்றொருகாட்டினிற்கரந்தான்
சிந்தைநைந்துசந்யாசியுந்தேடியோர்நகரில்
தந்துவாயன்வீட்டிடையிராத்தன்னில்வந்தடைந்தான (௫௫)

## வேறு.

தேடியபொருளிழந்ததேவசன்மா தன்னெஞ்சம்
வாடியங்கிருப்பத்தந் துவாயன்றன்மனைவியோடே
கூடியசோரனுனைகொழுநன்றான்வந்தானென்றே
நாடியதூதியானநாவிதன்றேவிசொன்னாள். (௫௬)

கேட்டலுந்தந்துவாய்ச்சிகெழுமுதன்கொழுநன்றங்கள்
வீட்டிலில்லாதிருக்கும்வேளைபார்த்தவள்பின்சென்று
கோட்டிசோதந்துவாயன்குறுகிடக்கண்டுநெஞ்சில்
வாட்டமாய்த்திரும்பிவீட்டில்வந்தவளவனுங்கண்டான் (௫௭)

கண்டவன்கண்கள்சேப்பக்கடுஞ்சினங்கொடுசெந்தீயை
உண்டவன்போலச்சீறியுதாசினம்பலவும்வாயால்
விண்டவடன்னைத்தூணில்வெருவுறக்கட்டித்தாக்கங்
கொண்டனன்றாதிதானுங்குறுகிவின்றிதனைக்கண்டாள் (௫௮)

என்னைநீகட்டிவைத்தேயேகியங்கவனைக்கூடிப்
பின்னைவாவென்றத்தூதிபேசினள்கட்டிவைத்து
மின்னனுடந்துவாய்ச்சிவிளக்கினையிறுத்திப்போட்டே
அன்னவனருகிற்சென்றேயணைந்துபோகித்திருந்தாள். (௫௯)

விழித்தனன்றந்துவாயன்வேண்டியவாறுவைதே
பழித்தனனதற்குச்சற்றும்பகர்ந்திடாதிருத்தலாலே
கழித்தனனுறையைச்சூரிக்கத்தியைக்கொண்டுகற்பை
அழித்தவண்மூக்கைப்பற்றியரிந்துபோட்டுறங்கும்போதில். ()

தந்துவாயன்மடந்தைதான்சுகங்கண்டுமெள்ள
வந்தனடூதிக்குற்றவண்ணங்கண்டவளைவிட்டு
முந்தவன்கட்டிவைத்தமுறைமைதப்பாள்போனின்றாள்
அந்தவேளையில்விழித்தானவனையேபழிக்கலுற்றான். (௬௧)

ஐயையோபாதகாநீயரிந்தமூக்கும்வளர்ந்து
துய்யவளானேனென்றன்றுகளறுகற்பினாலே
வெய்யவுன்றன்னைப்போலவேறொருவரையான்றீண்டில்
வையகம்பழிக்குமெங்கணமரபுக்குமீனமாமே. (௬௨)

என்னனுமவன்பயந்தேயெழுந்திருந்தவனைநோக்கித்
தன்னைத்தான்பழித்துக்கொண்டுதாளிணைதன்னில்வீழ்ந்தே
அன்னவள்கட்டவிழ்த்திட்டாரவேமோர்ந்துபுல்கி
மின்னிழைபொறுப்பாய்நீயென்பிழையெனவேண்டிக்கொண்டான்.

அரிந்துமுன்விழுந்தமூக்கையவள்கையிலெடுத்துக்கொண்டே
விரைந்துபோய்க்கணவன்றூங்கும்வீட்டினிற்படுத்துக்கொண்டே
யிருந்தனள்விசாரமிட்டேயிவனுக்கென்சொல்வோமென்று
பொருந்தியகங்குற்போதுபுலர்ந்துபுள்ளெழுந்ததார்த்தே. (௬௪)

நாவிதனெழுந்திருந்துநண்ணியகத்திக்கூட்டைத்
தாவெனக்கத்தியொன்றுதன்னையங்கெடுத்துப்போட்டாள்
தேவிமேற்கோபமாகித்திரும்பியங்கவனும்போட்டான்
பாவிநீகெடுத்தாய்மூக்கைப்பதைத்திடச்சிதைத்தாயென்றாள்

கையினிலெடுத்தமூக்குங்கத்தியுங்காட்டிக்காட்டி
ஐயகோவிந்தவூரிலரசன்கேளாரோவென்ன
வெய்யவன்றூதர்கண்டுவிசித்துநாவிதனைக்கொண்டு
தையலும்பின்னேசெல்லத்தரணிகாவலன்முன்போனார். ()

மன்னவன்றானுமிக்கமந்திரிமாருநீயார்
உன்னைமூக்கரிந்தவாறேதுரையெனப்பரத்தைவீட்டில்
பொன்னணிமார்பாபோனான்புலந்திருந்தேனிப்பாவி
என்னையோர்கத்தியாலேயறிந்துமூக்கரிந்தானென்றாள். ()

நாவிதன்றன்னைக்கேட்கனானொன்றுமறியேனென்றான்
நீவிரிங்கிவனைச்சூலமிலைக்கழுவேற்றுமென்றான்
கூவியங்கவனைமூக்கைக்குறைத்தவன்வேறேயென்று
தேவசன்மாவிதெல்லாஞ்செப்பினான்வலியவந்தே. (௬௮)

தேவசன்மாவினாலேதெளிந்துமந்திரியோடாய்ந்து
நாவிதன்றனைவிடுத்துகரபதிதந்துவாயன்
தேவியைமுலையுமூக்குஞ்சிதைத்தனன்றாதியான
பாவியைப்புரியைச்சுற்றிப்படரெரிகொளுத்திவிட்டான். ()

இவ்வகைசொல்லக்கேட்டேகரடகனிதற்குநாஞ்செய்
துய்வகையேதிங்கென்னத்தமனகனுபாயத்தாலே
அவ்விருவரையும்வெவ்வேறாகநட்புடைத்துக்காட்டைக்
கைவசமாக்கிக்கொள்ளக்கருதுவதுறுதியென்றே. (எ௰)

நந்தியகாரியத்தைநாடியேயெடுத்துக்கூட்டல்
வந்துறுமிடரைதகம்பால்வராமலேதடைபடுத்தல்
முந்துறவருஞ்செல்வத்தைமுயற்சியாற்றேடிக்கொள்ளல
மந்திரவிசாரமூன்றும்வல்லவனமைச்சாமென்றான். (எக)

ஏகமாயிருக்குஞ்சிங்கவிடபநட்புடைக்கநம்மால்
ஆகுமோவென்னவோகோவருமையோவுபாயத்தாலே
காகமோரரவைக்கொன்றகதையறியாயோவென்ன
தாகமோடுரைநீயென்னத்தமனகன்சொல்லலுற்றான். (எஉ)

காகம் நாகத்தைக்கொன்றகதை.

கோடுறுசினையிற்காகங்கூடுவைத்தனேககாலம்
பேடொடுகூடிவாழும்பெருமரப்பொந்தில்வந்தே
ஆடியகரும்பாம்பொன்றங்கதுபெறுமுட்டையெல்லாம்
நாடியேகுடித்துப்போடநலிந்துளமெலிந்துவாடி. (எங)

தன்னுயிர்ப்பாங்கனனசம்புகனருகுபோயிங்
கென்னசெய்குவனுனென்னவினைதக்கொலவரிதோநீபோய்
மன்னவன்றேவியாடுமஞ்சனச்சாலைபுக்குப்
பொன்னணிகொண்டுவந்துபோடுகபொந்திலென்ன (எச)

காகமப்படியேசெய்யக்காவலனேவலாளர்
ஏகிமாமரத்தின்பொந்தையீர்ந்தனரீருமபோதில்
நாகமங்கிருந்துசீறநறுக்கினரிருதுண்டாக
ஆகையாலுபாயத்தாகாதிலையெனவறையும்பின்னும். (எரு)

சிங்கத்தை முயல்கொன்றகதை.

குறுமுயல்சிங்கந்தன்னைக்கொன்றதொன்றுண்டேதன்னிற்
செறியுமோர்காட்டிலேயோர்சிங்கமுண்டந்தக்காட்டில

உறுவிலங்கனைத்தும்வேட்டையாடியூன் மிகவுந்தின்று
வெறிகொடுதிரியுநாளில்விலங்கெலாமொருங்குகூடி. (எசு)

ஆணிளஞ்சிங்கமேயுன்னடவியில்விலங்கையெல்லாம
வீணிலேகொல்லவேண்டாமவிதத்தினிற்றினமொன்றாக
ஊணுனக்களிப்போமென்னவுண்மையாக்கொண்டுசிங்கம்
ஆணையுமிட்டொவ்வொன்றாயருந்தியங்கிருக்குநாளில். (எஎ)

தனிமுயலொன்றுக்கோர்நாடன்முறைவருதலோடும்
இனியதுவிடாதுநம்மையெனினுமோரெடுப்பெடுத்து
வினையையிப்போதுசெய்துவென்றுநாமுய்ந்தோமாகில்
நனிவிலங்கனைத்துமுய்யுநமக்குநற்புகழுண்டென்றே. (எஅ)

கருதியச்சிங்கத்தின்றன்கடும்பசிவேளைதப்பி
வருதலுமுயலைநோக்கிமன்னனம்பசிவேளைக்குப்
பெருமதவேழமேனும்பிந்துவதில்லைபிந்தி
வருவதென்னுரைநீயென்றுமனந்தனிற்சினந்துகூற, (எகூ)

ஐயநின்பசித்தவேளைக்கடியனேன்வந்தேனங்கோர்
வெய்யசிங்கத்தைக்கண்டுவெருவியங்கொளித்திருந்தேன்
பையவேசிங்கமாங்கோர்பருமுழைபுகுந்தபின்னர்
தூய்யவுன்பக்கல்வந்தேன்சுவாமியென்றிறைஞ்சிநிற்க (அ௰)

சிங்கநாமல்லால்வேறோர்சிங்கநீகண்டாயாகில்
அங்கதைக்காட்டுவாவென்றழைத்தலுமழைத்துப்போயோர்
பங்கமும்புனலுஞ்சேர்ந்தபாழ்ந்துரவதனைக்காட்ட
அங்கதையெட்டிப்பார்த்ததனிழலுருவந்தோன்ற. (அக)

தன்னுருவிழலைத்தானேசத்துருவென்றுபாய்ந்து
துன்னுபங்கத்தழுந்தித்துளங்கியேயுயிரிழந்த
தென்னலாலுபாயத்தாலேயாவையும்வெல்லலாமென்
பின்னுமோர்நண்டுகொக்கையீர்த்ததோர்கதையுஞ்சொல்லும்,

(வேறு-நண்டு கொக்கைக் கொன்றகதை.)

மீனொன்றையுமேதின்றுடல்மிகவேவளர்கொக்கு
தானங்கொருபானண்டுதனைக்கண்டிரைகொள்ள
ஞானந்தருமோனங்கொடுகண்ணுறும்படிகண்டப்
பானண்டிதைதீயிங்குறைபண்பேதுரையென்ன (௮௩)

என்னென்றுரைசெய்வேனினியானெங்ஙனமுய்வேன்
கொன்னுந்தியவலைகாரர்கள்கூடிக்குளமேசி
மன்னுந்தடமெல்லாமிகவளைந்தேவலைவீசிச்
சின்னஞ்சிறுபொடிமீன்முதற்சேரப்பிடித்தாரே. (௮௪)

இந்தக்குளநாளைக்கெனவெண்ணிக்கொடுபோனார்
அந்தப்படிவந்தேபிடித்தவர்காவிலெடுத்தே
சந்தைக்கடைதொறுமீன்கடைதானேயெனவிற்பார்
எந்தப்படியிவர்தப்புவதெனவெண்ணியிருந்தேன். (௮௫)

அந்தப்பழிகாரர்வருமுனமேயொருபாயஞ்
சிந்தித்தனனப்படிசெய்தாலவையுய்யும்
எந்தப்படியானும்மழைத்திங்கேவருவாயேல்
இந்தக்குளம்விட்டோர்குளமெய்தும்படிசெய்வேன். (௮௬)

என்றேபகராசன்சொலவியனண்டதைநம்பிச்
சென்றேபலமீனோடுரைசெயவேயவைகூடி
நன்றேயெனவரவொவ்வொருநடைக்கொன்றுகொண்டேகிக்
கொன்றேசிலதின்றேசிலகொடும்பாறையிலுலர்த்தி. (௮௭)

அலவன்றசைதனையுண்டிடவதையுங்கொடுசெல்வங்
நிலமெங்கணுமீனென்புகணிறைகொண்டதுகண்டே
நலதிங்கிதுபலமீனையுநனிதின்றதுகைமையுங்
கொலைவந்ததுநாமும்மிதுகொளுமுன்கொளுவோமே. (௮௮)

நம்மால்வருபிழையேயிதுநாளும்மந்தமீன்போல்
சும்மாவிருந்தனமேற்கொளுமதிலேயொருசூழ்ச்சி
எம்மால்வகைவருமாதினிசெய்வோமெனவெண்ணி
அம்மாபகன்கழுத்தைக்கவையடியானெருக்கியதே. (௮௯)

நெருக்குண்டறவீழ்ந்தேகொக்குநீங்கிற்றுயிரலவன்
இருக்குந்தலமேகித்தனதினத்தோடிருந்ததுவே
செருக்கும்பகைபெரிதாகிலுஞ்சிலதந்திரவகையால்
முருக்கும்படிநினைந்தாலதின்முடியாததுமுளதோ. (௧௰)

எனவேதமனகனோதிடவிசைந்தேகரடகனிம்
மனமேகமதெனவேதினம்வாழும்மிவர்நட்டோர
கனமானதந்திரத்தாலன்றிக்கலையாததற்கேற்ப
வினைவாய்தமனகநீயெனநிகழ்த்தக்கரடகனே. (௧௧)

வேறு.

இன்னனபலவுபாயமியம்பியேதமனகன்றான்
தன்னிகரிலாதசிங்கந்தனித்ததோர்வேளைபார்த்தங்
கன்னவன்பக்கற்சென்றேயடிபணிந்திருகைகூப்பி
மன்னவோர்தீங்குகண்டுவெந்தனனின்பாலென்ன. (௧௨)

யாதுதீங்கினைநீகண்டிங்கெய்தினையுரைத்தியென்ன
ஓதருகருமஞ்சொல்லினுனதுசித்தத்தில்வைத்த
காதலான்மெய்யும்பொய்யாக்காணுமோதெரியாதென்றே
ஈதுநான்சொல்லவஞ்சியிருந்தனனின்றுகாறும். (௧௩)

அவ்வகையெண்ணினாலுமல்லதுகோபித்தாலும்
எவ்வகைதண்டித்தாலுமிறைவருக்கிடர்வராமல்
செவ்வைதேர்புத்திசொல்லிச்செய்கருமஞ்செய்வித்தால
வௌவியதெவ்வராவிமாய்ந்திடுந்திண்ணமன்னா. (௧௪)

மந்திரவிசாரத்தாலேமன்னவன்மயக்கநீக்கல்
தந்திரவுபாயத்தாலேசத்துருநாசம்பண்ணல்
முந்தியசெங்கோனூலின்முறைதவறாதியற்றல்
இந்தவாறமைச்சர்நீதியிவைசெயார்நரகில்வீழ்வார். (௧௫)

ஐயநின்பழையசேனையமைச்சரைநீக்கிவிட்டே
வெய்யகோட்டிடபந்தன்னைவிரும்பிநீயுறவுகொண்டு
மையலுற்றிருத்தலாலம்மாடரசாளவெண்ணிப்
பையவேயதற்குவேளைபார்த்திருக்கின்றதென்ன. (௧௬)

'ம' க்லுநகைத்திதென்னவார்த்தைநீசொன்னாய்நம்மை
யுடைந்தழுன்னமக்குச்சொன்னவாணையும்வார்த்தைப்பாடு
டந்துநம்மரசையாளக்கருதுமோகருதாதென்னத் [ங்
மதாடார்ந்துநாம்விசாரியாமற்சொல்லுவதில்லையென்றே.(கஎ)

என்னெதிராகத்தானேயிகழ்ந்துநின்சத்தியெல்லாந்
தன்னதுசத்திக்கீடுதானலவென்றுமற்றும்
பன்னுவாய்மதங்கள்பேசிப்பகைநினைத்திருந்ததென்றால்
பின்னையுமிதிற்சந்தேகம்பேசில்யான்சொல்வதென்னே.(கஅ)

அரசரையிழந்துவாழுமமைச்சரையமைச்சர்தம்மைப்
புரைபடத்துரத்திவாழும்புரவலர்தம்மையென்றுந்
திருமகளெனுமடந்தைசேர்ந்தினிதிருந்துவாழாள்
இருநிலக்கிழத்திதானுமிவரைவிட்டகலப்போவாள். (கசு)

கொற்றவர்காரியத்திற்குலமதியூகந்தன்னால்
உற்றவர்தம்மைநீக்கியொருவனைமுதலாவைப்பின்
மற்றவரரசையெல்லாம்வெளியேகொண்டுபின்னுஞ்
செற்றமுங்கூர்ந்துவேந்தைச்செறுத்திடநினைப்பரன்றே. (௨௰)

மூடருக்குபகாரந்தான்முந்துறச்செய்துதம்மைப்
பீடுசெய்தவர்க்குத்தாமும்பெரிதுகைம்மாறுசெய்யார்
நீடியவுபகாரங்கணிகழ்த்தியேதமக்குத்தாமே
கேடுகேடேடிக்கோள்வார்கேண்மையையினைக்கொண்டே. ()

நஞ்சொடுகலந்தசோற்றைநடுக்குறவசைந்தபல்லை
வஞ்சகர்நட்பைமிஞ்சுமந்திரிதன்னைச்சற்றும்
மிஞ்சிடவைத்திடாமலெடுக்கவேவேண்டும்வைத்தால்
அஞ்சியதுன்பமெல்லாமாக்குமென்றறையக்கேட்டு. (௨௰௨)

யாதுசஞ்சீவகன்னம்மிடத்தினிற்செய்தகுற்றம்
ஓதுநீயென்னச்சிங்கத்தமனகனுரைக்குமோர்நின்
போதனையன்றியேதன்புத்திமேற்கொண்டுசொல்லுந்
தீதுடனுனையிகழ்ச்சிசெய்தல்போதாதோவென்ன. (௨௰௩)

தஞ்சமென்றடைந்தபேர்க்குத்தானபயங்கொடுத்தே
வஞ்சகனினைத்துக்கோறல்வண்மையன்றுலகிற்சொலலும்
பஞ்சபாதகத்தின்மூன்றும்பாதகமிதுவேமேலுங்
கொஞ்சமினிரையங்கோறுங்குளிப்பவரிவரோகண்டாய். (௰௪)

நாமதைவிரும்பிக்கொண்டநட்பலாற்பிறிதொன்றில்லை
தீமையங்கதுசெயாதுசெய்யினும்பொறுப்பதன்றி
யாமிடர்செய்தறீதேயென்றுபிங்கலன்றன்சொல்லச்
சாமியிங்கிதுவேந்தற்குத்தகாதெனப்பின்னுஞ்சொல்லும். ()

அன்னியரோனுந்தொல்லையமைச்சர்களேனுமற்றும்
மன்னியசுற்றமேனுமைந்தர்களேனும்வேந்தன்
முன்னியேயொருவர்மீதின்மோகம்வைத்திடிலவன்பால்
துன்னியவரசுமிக்கசுகமுந்தாங்கொள்வர்மன்னோ. (௰௬)

செல்வத்திலாசையில்லார்செகத்தினிலொருவருண்டோ
நலவினையில்லாவேற்றைநம்பியுன்செல்வமான
பல்வகைவிசாரிப்பெல்லாம்பரிந்துநீயளித்தாயுன்னைக்
கொல்வகையுபாயநெஞ்சிற்குறித்திருக்கின்றதன்றே. (௰௭)

நல்லறிவமைச்சர்புத்திநஞ்சுபோலிருந்துபின்னர்
எல்லையில்செல்வமாவியின்பமுமுதவுநல்லோ
ரல்லவர்புத்திமுன்னமமுதெனத்தோன்றிப்பின்னர்
ஒல்லையிற்செல்வமின்பமுயிரையுமிழக்கப்பண்ணும். (௰௮)

தனக்குரியாரைவிட்டுத்தான்பிறர்க்கமைச்சுநல்கு
மனத்தனுமரசன்பின்னைவறுமையாம்பரவைவீழ்ந்து
கனக்கவெந்துயரமானகராவின்வாய்ப்பட்டுமாழ்கி
இன்த்தாரம்புணைகாணுமவிழப்பனுருயிராமன்னோ (௰௯)

நச்சுமாமரத்தைவைத்துநனிகடலமிர்தம்பெய்தும்
பச்சிலைமுதலாக்கொல்லும்பாம்புபால்பெய்திட்டாலுங்
குச்சிதவிடத்தைநல்குங்குவிதசர்க்கரைமேனட்டு
மிச்சமாத்தேன்பெய்தாலும்வேம்புதன்கசப்புமாறு (௨௰)

இன்னவைபோலுந்துஷ்டர்க்கிதம்பலவிதஞ்செய்தாலும்
பின்னுமங்கவர்தன்மார்க்கம்பெருகுநற்குணத்தராகார்
அன்னைமூலத்தீதாடேயழிக்கினுஞ்சயமாந்துஷ்டர்
மன்னுயிரழித்தாலேதன்மார்க்கமுமழியுந்தானே. (௧௧௧)

வேந்தனுக்கபாயம்வந்தால்விளையுமுன்னறியப்பண்ணல்
போந்தவவ்வபாயந்தன்னைப்புத்தியினாலேநீக்கல்
ஏந்தமேலாமபோகத்தாலேயெண்ணமற்றிருந்தானேனு
மாந்தகவுறுதிசொல்லலமைச்சர்கணீதியாமே. (௧௧௨)

எத்தனைவிதஞ்சொன்னாலுமெள்ளளவேனுநின்றன்
சிந்தமுமயியவில்லைசெய்வதொன்றறியேன்வேந்தர்
மத்தவெங்களிறுபோலமனஞ்செலும்வழியேசென்று
மெத்தவும்விளைந்ததென்றால்வெறுப்பர்மந்திரியையென்ன. ()

ஆயினிவ்வாறுசஞ்சீவகனைநான்கேட்பேனென்று
சீயமங்குரைப்பநல்லசிந்தனைசெய்தாய்சூழ்ச்சி
ஏயுமந்திரிவிசாரமிதயத்தில்வைப்பதல்லால்
வாயுறப்புறத்திற்சொன்னான்மரணமேதிண்ணமாமால் (௧௧௪)

குருவுபதேசமாதர்கூடியவின்பந்தன்பால்
மருவியநிதியங்கல்விவயதுதான்செய்யுந்தன்மம்
அரியமந்திரிவிசாரமாண்மையிங்கிவைகளெல்லாம்
ஒருவருமறியவொண்ணாதுரைத்திடலழிந்துபோமே. (௧௧௫)

கடன்படிற்கொடுத்தசேடங்கனல்படில்விடுத்தசேடம்
விடந்தொடின்மீட்டசேடமேவலர்ச்செற்றசேடம்
படர்ந்துபின்கெடுக்குமுன்னேபற்றறக்களைந்துபோட்டால்
திடம்பெறச்செல்வத்துய்த்துச்செருக்கிவாழ்ந்திருக்கலாமே()

என்பனசொல்லக்கம்மையிடபமென்செய்யுமென்றே
வன்பொடுசிங்கங்கூறமாட்டைகாநம்பப்போகா
தன்புடனருகிற்சேர்க்கிலழிவதேதிண்ணமையா
முன்பொருசீலைப்பேனூர்முகட்டினாலழிந்தவாறே. (௧௧௭)

2

(சீலைப்பேன்முட்டுப்பூச்சியாலழிந்தகதை)

இக்கதையாதுசொல்வாயென்றுபிங்கலனார்கேட்க
மிக்கதோர்நகரின்மந்தவிசர்ப்பணியரசன்மெத்தை
புக்கொளித்தன்றன்மின்னார்புணர்ச்சிசெய்துறங்குயந்த
பக்குவம்பார்த்திரத்தம்பருகியங்கிருக்குநாளில். (௧௧௮

கொள்ளிவாயடியிட்டாற்போற்குறுமுகடொன்றுசேர்ந்தங்
குள்ளுறைசீலைப்பேனையுறவுகொண்டெனக்குநானே
தெள்ளியநண்பனாகிச்சேர்ந்தினிதிருப்பேனென்ன
முள்ளெயிற்றினிற்றுடுக்காமுன்னைநீகடிப்பாயென்ன. (௧௧௯

துடுக்குநான்செய்கிலேனீசொன்னதுகேட்பேனென்று
பொடுக்கெனக்காலில்வீழப்புந்தியிலிரங்கிநீதான்
வெடுக்கெனக்கடிக்கவேண்டாம்வேந்தனுமனையாடானும்
படுக்கையிலுறக்கவேளைபார்த்துநீபசிதீரென்ன. (௧௨௦

நல்லதென்றடைந்துபின்றிண்டிபனெனுநாமமூடு
மெல்லியலுடனேதானும்விழித்திருக்கின்றபோதில்
பல்லினாற்கடிக்கவேந்தன்பதைத்தெழுந்தேதீதென்று
சொல்லலுந்தீபங்கொண்டுசோதனைக்காரர்பார்க்க. (௧௨௧)

முகடனுமொளித்துப்போனான்முன்னமங்கிருந்துவாழும்
விகடமில்லாதவந்தவிசர்ப்பணிதன்னைக்கண்டே
அகடுசெய்தாயென்றங்கதனுயிரழித்துப்போட்டார்
வகையறியாமற்செத்துமாய்ந்ததுசீலைப்பேனே. (௧௨௨)

என்றொருகதையுஞ்சொல்லியொருதனைப்பொரவருங்கால்
துன்றியமழையுங்காற்றுஞ்சூழ்ந்திடுவேளைதன்னில்
தன்றனிவான்முறுக்கித்தலையொடுகொம்பசைத்து
மன்றகநடுங்கவந்துமார்பினிற்பாயுமன்றே. (௧௨௩)

சீயமாமரசனேநான்செப்பினேனுனக்குநன்மை
நீயிதைவெளியிடாமனெஞ்சில்வைத்திடமுன்னைப்
பாயவந்துற்றவிபதைத்திடவதைத்திநானும்
போயிவண்வருவேன்பின்னர்ப்புனிதவென்றேகிற்றம்மா. ()

ஏகியேதமனகன்றானிடபசஞ்சீவகன்பால்
போகவங்கதுவுங்கண்டுபுகழுடன்சுகமோவென்ன
காகிளங்காளைவேந்தேநமக்குமோர்சுகமுமுண்டோ
ஆகமேதுயிரோதென்றுமரசனைச்சேவிப்பார்க்கே. (கஉரு)

செல்வமுஞ்செல்வமல்லசிந்தையுஞ்சிந்தையல்ல
சொலவதுஞ்சொல்வதல்லசுகிப்பதுஞ்சுகிப்பதல்ல
கலவியுங்கல்வியல்லகடுங்கொலைப்பாம்புபோலக்
கொல்வளரரசர்சேவைகுறித்துவாழ்பவர்க்குத்தானே (கஉசு)

எனத்தமனகனுஞ்சொல்லவிறைவர்நெஞ்சேற்குமாறு
மனத்தில்வஞ்சகமிலாமன்மகிமையாநடந்துகொண்டால்
சினத்தமன்னவராலுஞ்சினேகமாய்நமக்குவேண்டும்
இனத்தினிலினத்தாராகவெண்ணியேநடத்துவாரே (கஉஎ)

எனவிடைகூறச்செல்வமெய்தினின்புறாதாரில்லை
வனிதையர்காமந்துய்த்துவலியிழவாதாரில்லை
அனகவெஞ்சமனைத்தப்பியாவியுற்றிருப்பாரில்லை
பனதொடுவேந்தர்சித்தம்வரநடப்பாருமில்லை. (கஉஅ)

துச்சனருடனேகூடிச்சுகமடைந்தாருமில்லை
இச்சையாசகத்திலேயிடருறாதவருமில்லை
குச்சிதக்களவினாலேகொழுநிதிபடைத்தாரில்லை
அச்சமிலரசராலேயழிபடாவாழ்வுமில்லை. (கஉகூ)

கல்விடநல்லகாலநற்பொருணல்லதோழர்
சொல்லுமிவ்வகையுஞ்சற்றுந்துளக்கமில்லாதநெஞ்சும்
இல்வயின்யாவும்பெற்றோய்துவர்சிலநாள்வாழ்க்கை
அல்லவரின்னாளிலழிவொன்றறியலாகா. (கஙய)

இவைக்ணீசொல்லவந்ததென்னபிங்கலன்றானுன்பால்
தவறுதானினைந்ததுண்டோசாற்றெனவிடபங்கூறக்
கவடமாய்ச்செயுமிராசகாரியந்தன்னைச்சொன்னால்
அவமதிவேந்தன்சற்றேயறியினுநமைக்கொல்வானே. (கஙக)

என்னினுநீயுநானுமிதயமொன்றாகையாலே
உன்னதுகருமஞ்சொல்லவுற்றனன்மற்றொன்றல்ல
மன்னவன்சேனைக்கெல்லாமகிழ்விருந்தளிக்கநாளை
நின்னையேகொல்லுமாறுநினைந்தனன்மனத்திலென்ன (௯௨)

அஞ்சியேமிகவுஞ்சஞ்சீவகனுமெய்கலங்கிவேந்தன்
நெஞ்சினிலென்னைக்கொல்லநினைத்தகாரணமேதென்ன
எஞ்சினோர்மீதிற்கோபமியாவர்க்குமெய்துமென்பார்
வெஞ்சினவேந்தர்க்குற்றவெகுளியாரறியவல்லார் (௯௩

பரவையையளவிட்டாலும்பாரெலாமளவிட்டாலும்
வரைமுழுதளவிட்டாலுமாதர்நெஞ்சளவிட்டாலும்
இ[illegible]ாதனைக்கருதித்தன்பாலெய்தினர்தம்மைக்கொல்லும்
அரசர்நெஞ்சொருவராலுமளவிடமுடியாதென்ன (௯௪)

மின்னனார்தங்கணெஞ்சம்விடரையேவிரும்பிநிற்கும்
பொன்னெலாமுழுத்தர்தேடுமபொருளையேசேர்ந்துநிற்கும
மன்னியமழையுமோதவாரியிற்பெய்துநிற்கும
அன்னபோல்வேந்தர்தாமுமபாத்திரம்விரும்பிநிற்பார் (௯௫)

காரணத்தலேவேந்தன்கனன்றனனாகில்மற்றோர்
காரணத்தாலேயன்னான்கருத்தினைத்திருத்தலாகும்
காரணமியாதுமின்றிக்கனன்றனனாகின்மற்றோர்
காரணத்தாலேயன்னான்கருத்தினைத்திருத்தலாகா (௯௬)

(வேறு)

என்றுசஞ்சீவகனியம்பமன்னவன்
அன்றுனையழைத்ததுமாணையிட்டதும்
இன்றுனைத்தனக்குளார்க்கிரைவழங்கவே
கொன்றிடநினைத்ததுங்கொடியபாவமே (௯௭)

மந்திரிபண்டிதர்மருத்துவஞ்செய்வோர்
சிந்தையுமன்னவன்சிந்தைக்கேற்றிடில்
தந்திரவுபாயமுந்தருமநீதியும்
அந்தமின்பமுமவனுக்காகுமே (௯௮)

துட்டர்பானன்றியேதொடர்ந்துசெய்யினும்
மூட்டாபாற்சுபாஷிதமொழிகள்பேசினும்
ஒட்டியபழுகைமுன்னுசிதஞ்சொல்லினும்
நட்டமேயல்லதுநன்மையில்லையே (கஙகூ)

நல்லறிவசேதனற்குரைப்பதுங்கொடும்
புலவாமுன்றன்கவிபுகன்றிரப்பதும்
அலலனேயாக்குமாதனையளிப்பதும்
கலவினைமேலெறிந்திடுகெழுங்குக்கொக்குமே. (கசய)

பெருங்களாநிலத்திளிற்பெய்தமாரியும
இருந்திலாச்செவிடர்பாற்செயுபதேசமும்
அருங்கொடியோர்களுக்களித்ததானமும்
ஒருங்குறவோர்ந்திடிலொக்குமென்பவே. (கசக)

சந்தனமரங்களைச்சலசவாவியைப்
பந்திகொடாழையைப்பாயபுவெங்கரா
நந்துமுட்சூழ்வபோனட்டுவோகதைத்
தொக்குமாய்விடாமலேதுட்டர்சூழ்வரோ. (கசஉ)

ஆதலின்மன்னவருநல்லமெய்ப்
போதமேயடைந்தவர்பொருந்திடின்மிகப்
பேதகமாக்கியேபின்னுங்கொலவும
சூதுகண்ணிப்பதுதுட்டர்நீதியே. (கசங)

(வேறு)

அரசனின்சொலுமபயவார்த்தையும்
பரவுமிங்கிதப்பார்வையின்பமுங்
கிரமதாமெனச்சிந்தையாரவே
கருதினேமதுகனிட்டமானதே. (கசச)

ஐயையோவிவனபயவார்த்தையும்
மெய்யதாமெனவிரும்பினேங்கொலோ
செய்யவெண்ணினன்சிங்கமன்னவன்
கையிலாவதுகருதனீதியோ. (கசரு)

தூரக்கண்டுநீதொழுமுனேதொழு
தாரப்புல்லிமோந்தருகில்வைத்துப
சாரத்தாலுனைத்தருக்கச்செய்ததும்
சேரத்தான்கொலைசெய்யவெண்ணியே. (கசசு)

இருளைநீந்தவிளக்குமெழுதிரைப்
பரவைநீந்தப்புணையும்படைத்துமிக்
காவர்நெஞ்சினில்வஞ்சங்கடக்கவே
உரியதொன்றையுண்டாக்கிலன்வேதனே. (கசஎ)

ஆனைவேகமடங்கிடுந்தோட்டியால
வேனில்வெம்மையடங்குமவிசிறியால்
ஈனர்வேகமியமபிலவருயிர்
போனபோதடங்கும்புவிமீதிலே. (கசஅ)

வண்டுபூமதுவிட்டுக்கரிமதம்
உண்டுகாதடிபட்டுயிர்மாய்வபோல்
தண்டைவேந்தர்நல்லோர்சொன்மறுத்துமால்
கொண்டுதீயர்சொற்கொண்டுயிர்மாய்வரோ. (கசகூ)

துட்டநண்புதொடங்கினல்லோர்களும்
கட்டமெய்துவர்நன்மையவர்க்கிலை
இட்டமாகவிருந்தொருகாக்கையோர்
ஒட்டகத்தினுயிரையழித்ததே. (கருய)

(காக்கைஒட்டகத்தை அழித்தகதை.)

உரைசெயக்கதையென்றெருதோதலும்
இருள்செய்காட்டின்மதோற்கடனென்னுமோர்
அரசுசிங்கமதற்குளமந்திரி
நரியும்வேங்கையுங்காக்கையுநண்ணுநாள். (கருக)

ஒட்டகம்வழிதப்பியங்குற்றிடக்
கிட்டிவாயசமாரெனக்கேட்டலும்
ஒட்டையுண்மையுரைத்திடவானையும்
இட்டுவாயசந்தானழைத்தேகியே. (கருஉ)

மன்னனுமதோற்கடன்முன்விட
அன்னவேந்தனபயங்கொடுத்துநீ
இன்னலின்றிமகதானகனென்றுபேர்
மன்னிமந்திரிமாரொடுவாழ்கென. (௧௫௩)

சம்புவும்புலியுங்கொடியும்மெமை
நம்புகென்றுசொலிச்சிலநாளெலாம்
தம்புலத்திற்சகோதரராமென
இம்பர்போற்றவிருந்துடன்வாழ்ந்தவே. (௧௫௪)

உறைசெய்சிங்கமொருதினநோய்கொடு
விறைசெய்வேட்டையின்மேற்செல்வேமிருக்
திறைசெய்வேட்கையையெய்தியமைச்சரைப்
புறைசெயன்பொடுநோக்கிப்புகலுமால். (௧௫௫)

பொங்குவெம்பசியேற்கிரைபோய்க்கொணர்ந்
திங்குநல்குமினென்றுரைசெய்திட
அங்குநான்குமடவியெலாந்திரிந்
தெங்குமில்லையிரையெனவந்தவே (௧௫௬)

உற்றநான்கினிலொட்டகமொன்றலான்
மற்றிரண்டையும்வம்மினென்றுதான்
கற்றபாடையிற்காகமழைத்துப்போய்க்
கொற்றவேந்தன்சமுகங்குறுகியே. (௧௫௭)

மன்னனேயிவ்வனங்களெலாந்திரிந்
தின்னலுற்றுமிரையொன்றுமில்லையால்
உன்னருட்கொடுபோய்ப்பிழைப்போமென
முன்னிவந்தனமென்றுமொழியவே. (௧௫௮)

யாதுநுங்கருத்தென்றுசங்கஞ்சாலக்
கோதில்வேந்தமந்தானகற்கொன்றிடிற்
போதுமென்றுபுகலச்சிவசிவா
ஈதுபாவமெனச்செவிமூடவே. (௧௫௯)

வாயசம்மதுகண்டடன்மன்னகேள்
ஆயமன்னவர்செய்கையிதாகுமி
யாயமென்றுநவிலகுவன்யானமுனம
மாயவன்சொலும்வாய்மையிவ்வாறரோ. (௧௯௰)

ஒருவனைக்கெடுத்தோர்குடிகாக்கலாம்
ஒருகுடிகெடுத்தோர்நகர்காக்கலாம்
ஒருநகர்கெடுத்தோர்பெருநாடெலாம
ஒருபெருந்துன்புறுவகைக்காக்கலாம். (௧௯௧)

என்றுபஞ்சவர்முன்னமியம்பவே
நன்றிதென்றவாநன்மகன்றன்னையும
கொன்றுகின்றுகளப்பலிகூட்டியே
வென்றியெய்தினரொன்றுவிளம்பவே. (௧௯௨)

அபயம்வாங்கியடைக்கலம்புக்கதை
அபயமாற்றியழிப்பர்களோவென
அபயமீந்தவனுலழியாமலும்
அபயங்காத்ததனுலதைக்கொல்வமால். (௧௯௩)

என்றுகாசமியம்பமதோற்கடன்
ஒன்றுமுத்தரமோதிலனுலதை
நன்றிதென்னநயந்தநெஞ்சொட்டகம்
நின்றதோரிடகேடிவந்துற்றதே- (௧௯௪)

அரசன்வெம்பசியால்வருந்துற்றனன்
இரைமற்றியாதுமினிக்கிடையாதுநாம்
உரைசெய்வோமெனநான்குமொருமையாய்
அரசன்முன்சென்றடிகள்வணங்கியே. (௧௯௫

மன்னனேயிவ்வனத்திலிரையிலை
என்னைக்கொன்றிரையருந்தென்றுமுன்
சொன்னகாகத்தைநோக்கிமதோற்கடன்
என்னினின்னுடல்சின்னதென்றேசொல (௧௯௬)

ஆயினென்னை யருந்தெனச்சொன்னகோ
மாயுமோவா தவவ்வாறுமறுத்திடப
பாயுமவெமபுலிதன்னைப்பாருகென
நீயுமேறகுகிரமபினாயோவென (கசுஎ)

கதனகன்னிதைக்கண்டுகமைக்கோல்
விதனமவைத்தனனொன்றுவினும்பூதனான்
அதிகனென்னையருநதிகட்டாபிசொலலுமுன
ரத்தம்வெமபுலிப்பாய்நதிடடாய்நததே. (கசுஅ)

சிங்கமெண்ணியுயிநதுசெனறேநணாத
துங்கவெமபுலிமுளையைத்துய்ததிட
எஙகள்சம்புகனீரலவிருநதுணாத
தங்குகாகநதசைகளயினறமேத. (கசுக)

கொடியரோடேவாகூடிலுயாஙகவா
மடிவாதிண்ணுமிவ்வாறெனறுசொலலுவார
கொடியவேநதாகையிறகொலையுண்ணவின
கெடியபோரிலுயிாவிடநீகியே. (கஎ0)

போரிலாவியைப்போககிற்சுவாக்கமும
பொரிலவெனறுபிழைத்திடிற்பூமியுஞ்
சேருமவீணிலுயிர்விடிறசொாக்கமும
யாருமிலலைகிளாயமபடிவரோ. (கஎக)

பொருநரோடுபொருதுயிாமாய்பவா
இருவிலத்துளிறங்குமிறங்கிலார்
வெருவியாவிவிருமபியிருப்பவர்
தனாயின்மேவுசஞ்சாரப்பிரேதமே. (கஎஉ)

அறிவிலார்தமதாணைமையிறைற்பிறர்
சிறியவொன்றுத்ஞ்சிக்லைதகினைப்பது
மறிதிலைக்கடனமன்னவன்முன்னையோர்
குறியசிட்டைக்குறித்ததுபோலுமால். (கஎங)

Dr. U. V. S… LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

(கடலைச் சிட்டுவென்ற கதை.)

விடையதேதக்கதையெனவேலையின்
புடையின்மெய்கதிடுஞ்சிட்டுப்பொருந்திய
பெடையுநதானுமபிரிவின்றியாங்கொரு
செடியினகிழிற்சிலநாளிருந்ததே. (கஎ௪)

அனனாளிற்பெடைசினையாய்ஞ்ழகிர்த்
தென்னபுத்தியெனக்கிடமேதென
மன்னுமிவ்விடமன்றிமற்றோரிடம்
பின்னையிலலெனச்சேவலும்பேசவே. (கஎ௫)

பொருகடற்கரைதன்னிற்பொருந்தியே
அருகுமுட்டையையிட்டுவைத்தாலதைத்
திரையெடுத்துக்கொண்டேகிலென்செய்குவோம்
உரையெனச்சிறுபேடுகின்றேதவே (கஎ௬)

பேடிபோவெனப்பெண்புததியிக்கரை
நாடியக்கடனம்மையென்னுமலே
ஆடிமுட்டைகொணடேகிலதுபடும்
பாடுநாயுமபடாதென்றுசாற்றவே. (கஎஎ)

என்னபுத்திநீயெண்ணியுரைத்தனை
அனனமுற்படச்சொன்னதைவிட்டுயிர்
தன்னையாமைதரையில்விடுத்ததால்
என்னவக்கதையேதுரையென்றதே. (கஎஅ)

(வேறு ஆமைசொற்புத்திகடந்து இறந்தகதை.)

விகடசங்கடமென்னுமன்னத்தோடே
மேவுகம்புக்கிரீவனெனுமாமைமுன்னர்
சுகமுடனேயொருகுளத்திலனேகநாளாத்
தோழமையாயிருக்குமழைசொரிவிலாமல்
அகல்குளமும்புனல்வற்றிப்போகையாலே
யப்புறமோர்குளநாடிப்போகவன்னம்

பகாரியவாமைதனையழைத்திக்கோலைப்
பற்றிவாய்த்திறவாதேவருகவென்றே. (கஎகூ)

இருபுறமுந்தாங்கவ்விக்கொண்டுவானி
லெழுந்துபறந்ததுகொடுபோம்வழியிற்கண்டோர்
கருதியிதுபுதுமையெனநகைத்துநின்று
கைகொட்டிப்பார்க்கவந்தக்கமடனாரும்
மருவநகையேதென்றுகேட்கவெண்ணி
வாய்திறந்துகீழ்விழுந்துமடிந்துபோனார்
ஒருமையுளார்சொன்னதுகேளாதபோர்க
னாறுங்கருமமிவ்வாறென்றோதிப்பின்னும். (கஅய)

(மும்மீன்கதை.)

சேவலதுகேட்கமற்றோர்கதையுண்டென்னச்
செப்புகவக்கதையென்னப்பேடுகூறும்
வாவுபுனற்குளமொன்றங்கதிலேமும்மீன்
வாழ்ந்தவவைதமுளொன்றுவருமுன்காப்போன்
தாவுசெயன்மற்றொன்றுவருங்காற்காப்போன்
சாற்றிடின்மற்றொன்றுவந்தபின்காப்போனும்
ஓவறவேயனேகநாளிருந்துபின்ன
ரொருநாளில்வலைஞர்புகலுரையைக்கேட்டே. (கஅக)

இந்தவிடம்விட்டுமற்றோரிடத்திற்செல்வோ
மென்றுவருமுன்காப்போனிசைப்பவும்மீன்
வந்தபொழுதாகவதற்கிப்போதேநாம்
வழிபார்க்கவேண்டுமோவிடைச்சிதானே
அந்தமுடன்சோரிருவரையும்விட்டி
லவள்கணவன்கண்டுமவனறியாவண்ணக்
தந்திரமொன்றாலவனைத்தப்பவிட்டுத்
தானுமவனைப்புணர்ந்துதருக்கினாளே. (கஅஉ)

(இடைச்சி சோர புருடனைக் காத்தகதை.)

கள்ளமாப்பிளையிருவரவரா ரென்றாற்
 கருதுதண்டபாசனவன் காளைதனனோ
டுள்ளமகிழ்ந்தவள் கூடியிருக்குநாளி
 லொருநாளிலவன்றந்தையுற்றவேளை
மெள்ளவவன் காணுமுனங்கவனைத்தொம்பை
 மேவுவித்தங்கவனுடனேமேவுங்காலை
வள்ளலெனுமபுருடன்வரச்சண்டைபோலே
 வைதுகொண்டுபோவென்றேவழிவிட்டாளே (௧௮௩)

அப்படியேவைதுகொண்டுவிரைந்துபோனா
 னகத்திடையனிவன்வரக்காரணமேதென்றான்
எப்படியோவிவராரோவறியேன்கையி
 லெடுத்ததடியுங்கொண்டுதுரத்திவந்தான்
தப்பியொருபயலோடிவந்துவீழ்ந்து
 தாயேயுன்றஞ்சமென்றிங்கொளித்துக்கொண்டான்
கைபிடித்ததடியுடனேதேடித்தேடிக்
 காணுமற்கருவிக்கொண்டேகினானே. (௧௮௪)

என்றுசொல்லநன்றுசெய்தாயென்னவீட்டி
 லிருந்தவனையழைக்கவவன்வெளியேவந்தான்
ஒன்றுமிலையவன்போனானீயும்போவென்
 றுரைத்தனனங்கவனுமெள்ளவோடிப்போனான் —
இன்றுநமக்கென்ன துன்பம்வந்தவேளைக்
 கேற்றபடிசெய்வமென்வருமுன்காப்போன்
அன்றுமற்றோர்தடமேகமற்றையீன்க
 ளகவாமலச்சனையிலிருக்கும்போது. (௧௮௫)

மற்றைநாள்வலைபோட்டார்வருங்காத்தாப்போன்
 வலைதனிலேயகப்பட்டமெரித்ததேபோல்

உற்றதுமற்றதையெடுத்துக்கரைமேற்போட்டே
யொருதரம்பினவிசவக்தபின்னேகரப்போன
கொற்றவலைக்குள்ளாகிப்பதைத்துப்பாயங்
கொன்றுவிட்டாரதற்குள்ளேகுளத்துநீதான்
வற்றுமவாய்க்காலுடனேபுனலிற்பாய்ந்து
மறுகுளத்திற்புகுந்திருந்துவாழ்ந்ததனறே. (கஅசு)

என்றுசொலச்சேவனமக்கிடமுமீதே
யிவவிடத்தேநீயுமுட்டையிடுவாயென்னத்
தனறுணையுமுட்டையிடவிலைகளெலலாஞ்
சமுத்திராசனுங்கேட்டுச்சமர்த்தைப்பார்ப்போம்
என்றுமுட்டைதனையெடுத்துப்போனைப்போ
தெமதுமுட்டையினைச்சுமமாத்தந்தாலுய்ந்தாய்
இனறுதராதிருந்தாயேற்கடலேதுன்ப
மெய்துவிபபேனெனப்பேசாதிருந்ததன்றே. (கஅஎ)

அங்கணமேதன்னினங்களெல்லாங்கூட்டி
யகிலத்திற்பலபறவைச்சாதியெல்லாம
ஒக்கவரச்சென்றுபட்சிராஜன்முன்போ
யுவணதேவாபறவைக்குலங்கட்கெல்லாம்
மிக்கதொருபெரும்பழியாச்சமுத்ராசன்
மிகையுடனேமுட்டைகொண்டானந்தமுட்டை
இக்கணமேயழைப்பித்தாலன்றியாரு
மெண்ணார்ங்குலத்தையென்றேயிரங்கிக்கூற. (கஅஅ)

கருடனுமங்கதையபிமானித்துக்கொண்டு
கண்ணார்திருச்சன்னிதியிற்கூறக்கேட்டே
பொருகடல்வேந்தனையழைத்துமுட்டைகொண்டு
போனதென்னவிங்கேகொண்டுவந்தே
குருவிகையிற்கொடுத்தாலல்லதின்றேற்
குறையுனக்குண்டெனக்கூறக்கலைத்துநெஞ்சம்

வெருவிமுட்டைகொண்டுவந்துகொடுத்தானென்னின்
மேதினியிற்றந்திரம்போல்வேறேதென்றும். (௧௮௯)

இப்படிகேசரிசொல்லுட்புத்தியெலலா
மிடபமுண்மையெனமனதிலெண்ணிக்கொண்டே
யொப்பெரியசிங்கத்தைப்பொருதுகொல்லு
முபாயமெவ்வாறெனச்சிங்கமுன்னைக்கொல்ல
வெப்பமுடன்கண்சிவந்தேயுடலகம்பித்து
வெள்வாயுந்திறந்துசண்டைமுடுகினீயும
அப்பொழுதுன்வாலெடுத்துத்தலையுங்கொம்பு
மசைத்துக்கொண்டெதிரேசென்றமர்செய்வாயே. (௧௯௰)

என்றுபுத்திசொல்லிவைத்துக்கரடகன்பா
லேகியதற்குளாத்தரசன்பக்கலிற்சென்
றின்றுகொல்லவருதிடபமீயுமெத்த
வெச்சரிக்கையாயிருத்தியென்றுமீளக்
குன்றுநிகரிடபமெதிர்வந்தேயந்தக்
கொடியசிங்கம்பொரவிருந்தகொள்கைகண்டே
வென்றிதைநாங்கொல்வோமென்றெண்ணித்தானும்
வெகுண்டுதுள்ளிவந்துசமர்விளைத்ததன்றே. (௧௯௧)

விண்ணதிரமண்ணதிரக்கடவினோடு
வெற்பதிரவொன்றொடொன்றுபொருதல்கண்டு
தண்ணெனநெஞ்சகநடுங்கியரசர்க்கிந்தத்
துன்பம்விளைந்ததுசுவாமித்துரோகமன்றோ
கண்ணெதிரேகண்டுமனங்களித்தாயென்று
கரடகன்றான்றமனகனைக்கழறிப்பேதம்
பண்ணினதும்போதுமினிவிலக்கிட்டுப்
பண்ணுவதுகருமமென்றேபகர்ந்துமின்னும். (௧௯௨)

பிரித்திடுதல்பிரியாமற்பேணிக்கொள்ளல்
பிரிந்தவரைமுன்போலப்பேதமின்றிப்

பொருத்திடுதலிவைமூன்றும்வல்லபேரே
புவிமீதிலமைச்சர்களாய்ப்புகழ்கொள்வார்கள்
பெருந்தரசரின்பமுற்றாலமைச்சரின்பம்
பெறுவரெவர்துன்பமிவர்க்காகும்பின்னைக்
கருத்திலவாமாமம்வைத்தாலவர்சேனைக்குங்
காவலருக்குந்தமக்குமவருங்கேடென்றே. (ககங)

ஒருமையிலாமற்றருமந்தேடுவாரு
முற்றாக்கெடுத்துநிதிதேடுவாரும்
மருவுசுகத்தால்விதனைதேடுவாரும்
வலுமையினுன்மாதரின்பந்தேடுவாரும்
இருவருயிரொன்றெனவேகூடிவாழ்ந்தங்
கிருப்பவரைநாங்கெடுப்போமென்றுநெஞ்சில
கருதிபவாக்கினல்பலதேடுவாருங்
காசினியிலின்பமெய்தார்கதியெய்தாரே. (ககச)

(துட்டபுத்தி கெட்டகதை.)

துட்டபுத்தியென்பவன்றன்பிதாவுந்தானுந்
துஞ்சினனென்னலுமக்கதையேதென்னப்
பட்டணமொன்றுண்டதிலேவணிகரீன்ற
பாலரிருவோரொருவன்றருமபுத்தி
துட்டபுத்திமற்றொருவனிவர்கள்கூடித்
தூரத்தினிதிதேடப்போனாரங்கே
இட்டமுடன்றருமபுத்திக்காயிரம்பொன்
னெய்தவவன்றனக்கெய்தாதிடருற்றானே. (ககரு)

ஆயிரம்பொன்கிடைத்திருக்கும்விசாரமென்ன
வைந்நூறைந்நூறாகப்பகுந்துகொள்வோம்
நீயிரங்கலென்றுதர்மபுத்திவைத்த
நேசத்தாலங்கவனைக்கூட்டிப்போக

ந்யாயமல்லவினைசயூரிற்கொண்டுபோத
    னுயிர்தமரத்தின்கீழ்ப்புதைத்துவைத்துப்
போயிதனைமற்றொருநாளெடுத்துப்போகல
    புத்தியென்றேதுஷ்டபுத்திபோதித்தானே. (௧௱௫)

அன்னவன்சொற்படிகேட்டோர்மரத்தின்கீழ
    யாயிரம்பொன்னையும்புதைத்துவைத்துப்போனா
பின்னிரவிற்றுஷ்டபுத்திகொண்டுபோனான்
    பிறகொருநாளிருவருமாய்க்கூடிக்கொண்டு
போனவிருந்தவிடம்பார்த்தார்காணாதுஷ்ட
    புத்தியீதையெடுத்துப்போகலாமோ
வென்னவவனீயெடுத்துப்போனாயென்ன
    விருவருமபோய்வழக்கர்முன்னையியம்பினாரே. (௧௱௭)

ஒருவர்மேலேயொருவர்சாற்றவந்த
    வூர்வழக்கர்சாட்சிபிறருண்டாவென்ன
விருவருமேயறிந்ததல்லாற்பிறரங்கிலலை
    யென்றுதர்மபுத்திசொல்லவிதற்குச்சாட்சி
மரமொன்றாகுமென்றுதுஷ்டபுத்திசொல்ல
    வழக்கரெலாமதிசயமாய்மரத்தைக்கேட்போ
மிருளவிடிந்தபின்வாருநீவிரென்று
    ரிலவிடத்துக்கவரவருமேகினாரே. (௧௱௮)

துட்டபுத்திதன்னுடையபிதாவையந்தத்
    தொன்மரப்பொந்தொளித்திருக்கூறுமென்ன
நட்டம்வருநீகினைத்தவினைவினாலே
    னமக்கின்றுமுன்னமொருநாகங்கொக்கின்
முட்டைதனைக்களவுகொள்ளக்கொக்குநண்டின
    மொழிப்படியேகீரிவனைத்தொடுத்துப்பாம்பின
வட்டவளைமட்டாகமீனைப்போட
    வந்தொருகீரியும்பாம்பைவதைத்ததென்ன (௧௱௯)

தந்தையுரைத்ததுங்கேளானவனுமையாலே
தானிழந்ததுபபோயிருளிற்றருவினுழ்ந்த
பொந்தினுளளேயங்கவனைவைத்துமீளப்
பொழுதுவிடிந்ததனபினபுவழக்காகூடி
வந்தனைறுகேடகவவனதர்மபுத்தி
வணிகனெடுத்தானென்றேகூறநிலாடுஞ்
சிந்தையதிசயமாகிவழக்கரீது
செபபினதுபுதுமையெனறேசெப்பினரே, (உ00)

இதுகபடமெனறுதர்மபுத்தியெண்ணி
யேயிமரபபொந்திலெரிதழலைமூட்ட
அதிலிருந்தகிழவணிகன்பதைத்துவீழ்ந்தே
வையகோதுஷ்டபுத்திகெடுத்தானெனன
மதியுடையவழக்கரும்போயரசர்முன்னே
வருத்தலுமங்கவன்றன்னைவதைததாய்தந்தை
குதிகொளனலால்வெதும்பிமாய்த்தான்பொன்னுங
குறையாமற்றர்மபுத்திகொடுபோனானே. (உ0க)

(இரும்பெலி தின்றதென்ற கதை.)

என்றுமொருபட்டணததிற்செட்டிமார்க
ளிருவரவாசினேகமாயிருக்குங்காலில்
ஒன்றுதுலாமாயிரமாமிரும்புகொண்டே
யொருவணிகனவசததொருவன்வைத்துப்போய்நாட்
சென்றுவந்தான்வருமுன்னேயிரும்பையெல்லாந்
தின்றுவிட்டதெலியென்றேசெப்பக்கேட்டு
நன்றதற்குவநதெதன்னையோருவென்று
நண்புகொண்டுமுன்போலவுறைவினானே (உ0உ)

விருந்துசமைத்தார்களென்றவனையழைத்துக்கொண்டு
மிக்கவன்பிள்ளைதனைவிளையாடவைய்த்துப.
பொருக்குளர்தனின்றவனைக்கொண்டேப்
புதல்வனையுந்தானைக்கூட்டிப்போனனங்கே

திருந்தியதோரிடத்தொளித்துவைத்துமூழ்கித்
　திரும்பிவந்தான்பிள்ளையெங்கேயென்றான்பிள்ளை
பருந்தெடுத்துப்போச்சுதென்றான்சண்டையாகிப்
　பட்டணத்துவழக்கர்முன்னேபகர்ந்தானின்றேன். (உ0௩)

பருந்துபிள்ளைதனையெடுத்துப்போமோவென்ன
　பரிகாசமென்றுவழக்காளர்சொல்ல
இரும்புதுலாமாயிரத்தைக்குறைவையாம
　லெலிதின்றாற்பிள்ளைபருந்தெடாதோவென்னக்
கருமபொன்னனைத்தைமுழுதுங்கொடுத்தாயாகிற்
　கடுகவவனும்பிள்ளைகொடுப்பானென்றா
இரும்புவிலைக்குறைந்தகனலாஸ்திவிற்றே
　யினியபெண்டாபிள்ளையும்விற்றிழந்துபோனான். (உ0௪)


ஆகையினாற்கவடுசெய்வார்க்காவதில்லை
　யறிவுடையோர்க்கொருகாஞ்சொன்னாற்போதாதோ
நீகருத்திலொருசிறிதுமெண்ணாய்சொல்லும
　நீதிகலனுக்குணர்த்தவாறெக்குமென்று
வேகமுடனகாடகன்கோபிக்கவந்த
　விகடநெஞ்சத்தமனகனுமவேந்தன்பக்கற்
போகவதற்குள்ளேபிங்கலன்றானதப்
　பொலிமெயருதைக்கொலைசெய்துபுலம்பினின்றான். (உ0௫)

புலம்பியபிங்கலன்முன்னேதமனகன்போய்ப்
　பொருமவனைக்கொன்றுபுலம்புவதேனென்ன
நலம்பயனிலாதகச்சுமரமானாலும்
　நாம்வளர்த்தோந்தழிக்கலாமோவென்றும்
விலம்புகழுமந்திரியைக்கெடுத்தாவந்த
　விருபனுக்குக்கேடுவருமென்றுங்கூறக்
குலம்பெறுதன்பின்னேபிதாதமையமைத்ரி
　கொலைகருதிலவர்தமையுங்கொல்லலாமே. (உ0௬)

இருந்தியபத்தினடவாதார்தாங்கொத்தன்சொற
கேளாதமனையாளைக்கவடுதானே
கருத்திலெண்ணியிருக்குமொருதோழன்றன்னைக்
கடுமபோரிறபுறங்கொடுக்குஞ்சேனைதன்னைப்
பெருத்தமதமபிடித்திருக்குமமைச்சன்றன்னைப்
பிணமுன்பாராதழிததலபெரியநீதி
உரைத்தவிவரான்மருவுசுகத்தையென்று
ருலகாளுமவேந்தரெனபரோதுங்காலே. (௨௦௭)

எனறதபனகனபிங்கலனறனெஞ்சி
லிரககமெலாநதவிரவிதமேதயிகனியன்றன
கொனறவிடபததினுடறனையயபாற்
றொணடுபோயக்காடகனுநதானுமாகத
தினறுபலநரிகளுக்குவிருநதுமிட்டுச்
சிநதைகளிதநிருநதெதன்றுந்தேயத்தார்கள்
வெனறிபெறனமநதிரியூகத்திலென்றே
வேநதனமகனுடனமறையோனவிளமபினனே. (௨௦௮)

முதலாவது.—மித்திரபேததந்திரம
முற்றிற்று.



## இரண்டாவது

# சுகிர்லாபதந்திரம்.

மித்திரபேதமார்க்கம்வேதியன்கூறமைந்தர்
இத்திறமக்குமுன்னுள்யாவருமுரைப்பாரில்லை
உத்தமனீயேமேலுமோதியசுகிர்லாபந்தான்
எத்திறமுரைத்தியென்னவியம்புவான்சோமசன்மா. (

காகம் எலி ஆமை மான் வேடனை வென்றகதை.

காகமொன்றெலியுமொன்றுகமடமுமொன்றுமானும்
ஏகமிங்கிவைகணட்பாயிருந்துவேடனைமுன்வென்று
மோகமாயனேககாலமுயங்கியேயொருவனத்தில்
ஓகைகூர்ந்திருந்தவென்னவுரைத்திடக்கதையேதென்றார்.

தெள்ளியதிரைநீர்க்கோதாவரிநதித்திரஞ்சூழுங்
கள்ளவிழ்வனத்துக்குள்ளோர்தருக்குமுன்னிலவில்வாழும்
புள்ளினுக்கதிகமானபுத்தியுத்தியினதாகி
எள்ளலில்லாதிருக்குமலகுபதனென்றோர்காகம். (

வைகறையெழுந்துதங்கள்வகையினத்துடனேயாங்கோர்
பொய்கையின்மூழ்கியேறிப்புனர்சிறகுலர்த்துமபோது
கைகளில்வலையும்வில்லுங்கணைகளுங்கொண்டுவேடன்
செய்கொலைபயிலவங்கேசேர்ந்தனனவனைக்கண்டே. (

பறந்தனகாகமெல்லாமலகுபதனென்றுமாங்கே
மறைந்திவனென்கொடியோன்செய்யும்வகையெலாமறிவோமெ
அறைந்தொருபொதும்பர்க்குள்ளேயொளித்துப்பார்த்திருப்பவா
சிறந்தமேதாரவலையைச்சூழ்ந்துதினையுந்தெளித்துவைத்தா.

வைத்தவனமறைந்திருக்குஞ்சமயத்திலன்னன்ன
சித்திரக்கிரீவனென்னும்புறவென்[illegible]சேனைசூழப்
பைத்தலவனவன்[illegible]ருமத்திறங்கி
மொய்த்தவதானியதனைமுறைபடக்கண்டன்றே;

கண்டவப்புறவின்வேந்துக்கருத்தினிலாய்க்குத்தன்பால்
கொண்டநற்பரிவாரத்தைக்குறித்ததுகூறுமித்த
உண்டகுதானியந்தானுற்றதெவ்வாறிக்காவில்
எண்டருமொருவர்யாரோவிறைந்துவைத்திருக்கவேண்டும்.
ஈதுநாமறியுமுனேயிவ்விரைவிரும்புவோமேல்
நீதுவாநிடும்பொன்காப்பிற்சிக்கைதலைவதத்தனுளன்
காதுவெம்புலியானமாய்ந்தகதையுளதெனப்புறாக்கள்
ஓதுகவதனையெனவுரைத்திடுங்கபோதவேந்தன். (அ)

## புலியால் பிராமணன் மரணமடைந்த கதை.

மூப்புடைப்புலிதானொன்றுமூழ்கியோரேரியின்கீழ்க்
காப்புடன்றருப்பைதனைக்கையில்வைத்திருக்கும்போது
நாப்புடைமறைவலாளனண்ணியவ்வழியிற்செல்லக்
கூப்பிடலசெய்தன்னோனைக்குறித்தந்தப்புலிதான்கூறும். (௯)
அந்தணவிந்தக்காப்பையளிப்பனீவாவென்றோதச்
சிந்தையிலவேட்கைகூர்ந்துசெப்புவானபுலியாரேநீர்
வெந்துயர்க்கொலைமாந்தர்க்குவிளைப்பதுவிட்டுத்தானம்
எந்தவவழியிற்செய்வீரெனக்கதைகூறுகென்றான். (௧0)
புலியதுகேட்டுநானேபூசராநகழுமப்பல்லும
இலன்கிழமானேன்பாவமிழைப்பதுவிடுத்தானும் [ல்
பொலிதருதானஞ்செய்கைபொருளெனக்கொண்டேனுஞ்சே
சலமதின்மூழ்கிவந்துதருமிதைக்கொடுப்போமென்ன. (௧௧)
நன்றெனமறையோன்மூழ்கநண்ணினனேரிநீரில்
அன்றவன்கால்கள்சேற்றிலழுந்திடத்திகைத்துநின்றான்
சென்றதுபுலிநானுன்னைச்சேற்றினின்றெடுப்பேனென்னக்
கொன்றதுகுறு[illegible]குடித்த[illegible]கன்றே. ()
அப்படிசொலப்புலி[illegible]
இப்படியெல்லாம்பா[illegible]
எப்படியெக்காலத்[illegible]
செப்பலும்புறாக்க[illegible]

ஆங்கதுகபோதவேந்தனல்லலினோக்கியந்தோ
ஈங்கிவையெல்லாமானவிருக்குயிர்வாழ்வனோனான்
தாங்கியவலையிற்பட்டுச்சாவதேதக்கதென்று
போங்கடிவிசையிற்சென்றுபொள்ளெனவீழ்ந்ததன்றே. (கச)

இடுக்கண்வந்துற்றதென்னவிதையினித்தப்புமாறு
பொடுக்கெனவலையைக்கொண்டுபோவதேகருமமென்று
திடப்படச்சொலக்கபோதச்சேனைகளொருங்குகூடி
எடுத்துநீள்வலையைக்கொண்டேயேகினவிசும்பினம்மா. (கரு)

வேடனுமதிசயித்துவிரைந்துபின்னடந்தோமாகில்
ஓடியேயிளைத்துவீழுமொருங்குடன்வளைந்துகொண்டு
சாடலாமெல்லாமென்றுதன்மனத்தெண்ணிக்கொண்டே
ஓடினன்கண்ணிற்காணாதோடினபுறாக்களன்றே. (கசா)

காகமுங்கூடியோடக்கானவன்களைத்துமீண்டான்.
ஏகினகபோதமன்னனென்மதூற்றோழனான
ஆகுவாமிரணியன்வாழடவியிங்கிதும்வயப்பாற்
போகலாகாதென்றங்கேபோருநதிவந்திறங்கும்போது. (கஎ)

இரணியன்கண்டுகூட்டமேதெனவளையிற்செல்லக்
கரவுறுவளையிலந்தக்கபோதமுமழைக்கவைத்து
விரகுளகண்பாவென்றுவிளித்தலுந்தெரிந்துவந்து
பரவியேதனுகண்ணிட்டவாறெவனோவந்தோ. (கஅ)

இறந்ததுநிகழ்ந்ததும்பின்னேநிர்வதுமானகாலம
அறிந்தநீயேதினாலேயடர்வலைப்பட்டாயென்னச்
சிறந்தபோதினாலுஞ்செப்பியசமர்த்தினாலுந்
துறந்தவர்யாவர்சொல்லாய்தொலைவிலவினையைத்தானே. )

எவ்விடத்தெக்காலத்திலெவ்வகைக்காரணத்தின்
எவ்வளவெவ்வாறேதானிருவினையுறுபவர்கள்
அவ்விடத்தக்காலத்திலவ்வகைக்காரணத்தின்
அவ்வளவவ்வாறேதானனுபவமெய்துவரன்றே. (உ0)

என்றுதான்கபோதஞ்சொல்லவிரணியன்கடவின்மீனும்
துன்றுமாகாயப்புள்ளுக்கொடர்வலைப்படுதலானும்
குன்றுநேர்களிறும்வெய்யகொலைபயிலரவுதானும்
நின்றுகட்டுண்டுநெஞ்சநிலைதளர்திறத்தினாலும். (உக

வானுறுசுடர்கள்பாம்பால்வருந்துதலானுமிக்கோ
ரானநற்புலவர்தாரித்திரத்தினாலழுங்கலானும்
ஈனராமறிவிலார்பால்விருத்திசேர்தலானுந்
தானிருவினையையாருந்தள்ளுதலரிதேயென்று. (உஉ)

இன்னநன்னீதிசொல்லியிரணியனிரங்கிநண்பன்
தன்னிருகாலிற்பூண்டதளையுடனசேனைகாலில்
பின்னியவலையுஞ்சின்னபின்னமாக்கடித்துவிட்டே
பன்னியவுபசாரங்கள்பகர்ந்துபின்னனுப்பிற்றம்மா. (உ௩)

ஏகினபுறாக்கண்மற்றவ்விரணியன்வளையிற்செல்லக்
காகமிங்கிவைகளெல்லாங்கண்டவிரணியன்மேலே
மோகமாய்வளையின்வாயின்முகத்தைதவைத்தழைத்தலோடும்
ஆருநீயாரோவென்னையழைத்தகாரியமேதென்ன. (உ௪)

யானொருகாகமென்பேர்லகுபதனன்றுனென்பார்
கானவனலைந்தகபோதமன்னவன்பின்வந்தேன்
மானமுங்குணமுநட்புமவரிசையுமுறவுங்கண்டு
நானுமுன்னண்புகொள்ளநாடியேயழைத்தேனென்ன. (உ௫)

இன்னிரைநானுங்கொன்றுதின்பவனீயுங்கூடி
இந்நிலந்தன்னினட்பாயிருந்திடலாபத்திற்கே
மன்னியவிடமதாகும்வருநரிநட்புதன்னால்
முன்னமோர்வலையிலேமான்பட்டிடுமுறைமைபோன்றே. ()

தீங்கெனக்கெய்துமென்றுசெப்பதுஞ்சிறுமையெய்தி
ஓங்குமான்வலையிற்பட்டபரிசதனையுரைத்தியென்று
ஏங்கனீல்காகமென்னுமிலகுபதனன்றுன்கேட்கத்
தேங்கியவுவகையோடேஞ்சியேவியுரைக்குமன்றே,

## நரியால் மான் வலையிற்பட்டகதை.

வளமுறுமகதநாட்டிற்சண்பகவனத்தின்மன்னி
யுளமகிழ்கொடியுமானுமுறவுகொண்டிருக்குங்காலைக் [அ
கொளுமிளம்புல்லான்மான்மெய்கொழுத்திடுமியல்புநோக்கி
களமிகுநரியொன்றுள்ளக்கபடத்தாற்கொல்லவெண்ணி. (

துன்னியமான்பாற்சென்றெண்ணண்பனீசுகமோவென்ன
அன்னதைக்கேட்டுநீயாரென்றலுமரியோயானிக்
கொன்னுறுவனத்திலவாழ்வேன்குத்திரபுத்தியென்போ
பன்னியகிளையொன்றில்லாப்பாவியாய்த்திரிந்துநின்றேன். (

இன்றுனைக்கண்டுநெஞ்சத்தெய்தினேனுவகையிப்போ
துன்றிருபபணிசெய்துன்பாலுற்றிடவிழைந்தேனென்ன
நன்றெனவிசைந்திரண்டுநண்ணுசண்பகத்தின்கீழே
துன்றினவதன்மேலுற்றசுபுத்தியாங்காகங்கண்டே. (க௦

மித்திரமானேநின்பான்மேவினோன்யாவனென்னப்
பத்தியிற்சினேகஞ்செய்யப்படர்ந்தசம்புகனென்றோத
அத்தகையான்றன்செய்கைகுலத்தொடுமோராயாமல
மத்தியத்திடாமீகைதகாததுவழங்கல்செய்தால. (கக

தழுவுறுமொருபூனைக்குச்சாற்கவனென்றுகூறுங்
கழுகிடங்கொடுத்திறந்தகணக்குப்போன்முடியுமென்ன
வழுவிலக்கதையெனக்குமரபினிற்சொல்லுகென்று
பழுதறுமான்வினவப்பகர்தருங்காகமன்றே. (கஉ

## பூனைக்கிடங்கொடுத்துக் கழுகிறந்தகதை.

திரைகெழுகங்காதீரத்திரிகூடமலைப்பாலித்திப்
பருமரப்பொந்திற்கண்ணுமும்பைத்தகூர்நகமுமில்லா
ஒருகிழக்கழுகுமற்றைப்பறவைகளுண்ணவுலக
மருவுநாள்பார்ப்பளிப்புண்பான்மாரிச்சாலமைந்ததாங்கே. (கந

அதைச்சிறுபார்ப்பெலாங்கண்டஞ்சியேயபீனதல்கேட்டுப்
பதைப்புறுகழுகுநீரேன்பயமுறுகின்றீரென்ன

இதற்குளேபூனையுய்வதெண்ணியக்கழுகின்பாற்போய்
விதிர்ப்பொடுவணங்கியோர்விளம்பெனப்பூனைகூறும், (௧௪)

வேறு.

எனதுபெயர்நெடுஞ்செவியனெனக்கழுகுநீயிவண்விட்
டுனதிடத்திறகோடிலேயேற்சாவாயென்றுரைத்திடலும்
மனதிடத்திலவருமென்றனவரலாற்றைநீகேட்டுச்
சினவுகினுநன்றென்னச்செப்புமாலப்பூனை, (௧௫)

பேதமாஞ்சாதியினற்பிராணிகளைக்கொலலுவதும்
நீதியாலுபசாரிகழ்த்துவதுநன்றன்றால
ஆதலாலவனவனறனாசாரங்களைக்கண்டே
யாதுசெயதக்கதோவதுசெய்தலியல்பென்ன, (௧௬)

ஆக்கமிகுங்கழுகரசனதைக்கேட்டிப்பூனையினை
நோக்கியானீயிங்குற்றபடிநுவலென்னத்
தேக்குபுனற்கங்கைநதிதீரத்திற்றினந்தோறும்
ஆக்கையமிழ்ந்திடமூழ்கிச்சாந்திராயணமாற்றி. (௧௭)

தங்குற்றேனீமிகவுந்தருமவானெனக்கேட்டே
இங்குற்றேனென்னிலவயதுமுதிரியற்புலவர்
எங்குற்றாரெனவினவியெய்தியறங்கேட்டிடுதல
பொங்குற்றமரபென்றுபுகலுவரொண்ணூலோரும். (௧௮)

அறம்விடுத்திட்டெனைக்கொல்லவுந்துணிதாயில்லறத்தின்
திறமடுத்தோர்நடைவின்போற்கண்டதிலைத்தெவ்வருந்தம்
புறமடுத்துவந்தவர்க்குப்புரிந்திடுவருபசாரம்
மறமடுத்துவெட்டுகின்றவருக்குநிழல்செயுமரமே. (௧௯)

அதிதியெவன்பாலெய்திமுகம்வாடுமோவவன்றன்
பதிதருபுண்ணியங்கொண்டுபோவத்தையவற்கீவான்
மதிகொடுபசண்டாளன்மனைக்கணையுங்கதிரெறிப்பான்
புதியரெவர்வந்திடினும்பூசிப்பர்பெரியோரே. (௨௰)

என்றிசைப்பக்கழுகதைக்கேட்டியம்புமிறைச்சிகளருந்திக்
கொன்றுழல்வதுமதுகுலக்குணமெனமுன்குறித்ததென
நின்றவணமற்றதைக்கேட்டநெடுஞ்செவியன்றனைதொட்டு
நன்றுசிவசிவவென்றுநற்கரத்தாற்செவிபொத்தி. (௪௧

தருமநூற்பலதெரிந்துசார்ந்துவைராக்கியந்தீக்
கருமமெலாநீக்கினென்யான்கடுங்கொலையேபாதகத்திற்
பெரிதாகுமதுபுரிபவர்நரகடைவர்பெருங்கானின்
மருவுபலாதிகளுண்பார்மருவுவரோபாவமென. (௪௨

கடுங்கழுகுதெளியுமாறிவ்வாறுகட்டுரைத்து
நெடுஞ்செவியனெனும்பூனைநிலைநததன்வீடுற்றதன்பின்
மடம்படுபார்ப்பினையுண்டுவைகுதலும்பறவையெலாம்
ஒடுங்குபறழ்காணுமற்றேடலறிந்தோடியதே. (௪௩

புள்ளுகளக்கழுகிருக்கும்பொந்தடைந்துபார்த்திடலும்
வெள்ளெலும்புஞ்சிறகுகளுமவிழுந்துறக்கண்டிதுகொன்ற
தெள்ளவினப்பாபமேயெனக்கொன்றதாலதையிதனுல
உள்ளகுணந்தெரியாமலிடங்கொடாரொருவருக்கும். (௪௪

என்னலுமந்நரியதுகேட்டிவற்குநட்புசெயும
முன்னமேயிவனியல்புதெரியுமோமொழிதியெனப்
பின்னர்மானகாகத்தின்மனமொருமைபெறப்புரியத்
துன்னியவிம்மூன்றுமுறுத்தொடர்புகொடுகினறனவே. (௪௫

ஆயதினந்தனிலொருநாண்மானைப்பார்த்தந்நரி
மேயுமிளம்பயிருனக்குவேண்டுமெட்டுமருந்துமிடம்
நீயுறிதியெனக்காட்டவன்றுமுதனொடியமான்
போயதனைமேய்ந்துபசிபோக்கியிருந்திட்டதுவே. (௪௬

பயிரிட்டோனிதுகண்டுவலைகட்டப்பாராது
செயிரிட்டமான்வழக்கப்படிசென்றுசிக்குண்டுடன்
றுயிரிட்டகண்பனைவாதுயச்செய்வார்யாரென்று
துயிரிட்டமத்தென்னத்தலைதுமனஞ்சுழல்கலே. (௪௭

வன்பினொடுநரிகண்டின்றெண்ணமெலாம்வாய்த்ததினித்
துணைபறவின்றிதனையும்பைத்தசையினொடுசுவைத்துண்டே
இன்பினொடுமுறலாமென்றெண்ணிவாளாவிருப்ப
அன்புறுமான்கணடிங்கென்றலைவிடுவியெனவறைய (௪௮)
நரியதுகேட்டின்றைக்கோவிரதத்தினநாளையெனில
பரிகரிபபனினதுதளைப்பகாதருதோலாதலினால
பிரியமுறுநட்பினர்க்கென்பிராணனையும்விடவல்லேன்
தெரிநிலையோநீயென்றோர்செடியினமறைந்திருந்தமே (௪௯)
காகமதுமித்திரனைக்காணுமலன்றிரவு
சோகமுறறெங்கணுநதேடித்தோல்வலையிற்பட்டதறிந்
தூகமுடைமானேயிங்குற்றுழலவதென்னெனலும்
நீகழறுமுலாகேளாமையின்வந்தநிலையிதுவே. (௫௦)
நணபுகொணடநரியெங்கேயெனவெனதுநலவிறைச்சி
உணபதற்கோர்செடியின்கீழொளித்திருந்ததெனப்புகலப
பணபுறுகாகங்கேட்டுப்பயிர்க்கதிபனுறுகின்றான
மணபடுமொருயிர்கழிந்தவடிவபபோலுறுகெனலும். (௫௧)
நண்ணியவபபயிர்க்கதிபனுயிர்கழிந்ததெளவியென
எண்ணியிதையிழுத்தங்குவலைகட்டுமெல்லையினில
மண்ணினவினாந்தோடுதலுந்தண்டமவன்வவீநதெறியத்
திண்ணியதோர்செடியின்கீழிருந்தநரிசிதைந்ததே. (௫௨)
ஆதலாற்புண்ணியமும்பாவமுமிக்கதிகரித்தால
ஈதலசெயுந்தமபயனென்றிசைததெனியுமிவ்வாறு
சாதலகன்மானுக்குச்சயபுகன்றனட்பினைப்போல்
ஓதரியசின்னுறவுமுபயோகமன்றெனவே. (௫௩)

(வேறு)

அன்னதுகேட்டகாகமகங்கலைந்துரைக்குமையோ
என்னைநீபுரைத்தவென்றனியல்பினைச்சிறிதுந்தேராய்
உன்னையான்கொன்றுதின்றாலொருகணப்பசிதீராதே
மன்னிநட்பாயிருக்கிலவாழ்வாமனேகநாளும். (௫௪)

சித்திரகிரீவனைப்போற்சேர்ந்தலைகட்டுக்கொண்டால்
எத்தனைநாளென்னுமுயிருக்குமுள்ளளவுமுன்மேலை
வைத்தநணபொழிவதில்லைமற்றிதுகபடமல்ல
சத்தியமென்றுகாகஞ்சாற்றியேமேலுங்கூறும். (ருரு)

எயிதிரைபபரவைநீரிலெரியுமோர்கொள்ளிபுக்கால்
செறிபுனலவற்றிடாதுதீயவிந்திடுமவ்வாறே
அறிவுளாரிடத்திற்கோபமடைந்திடாதடைந்ததேனும்
உறுதியாமனத்திலேதாமொறுத்ததையவிப்பரன்றே. (ருசு)

உரைசெய்காகத்தைநோக்கியுன்னதுபுத்தியென்றுந்
திரமிலையுன்னைச்சேர்க்கிற்செய்கருமங்களாகா
புரைபடுமெனவேயெனறனபுத்தியுன்புத்தியூடே
வரையறக்கலந்தேயெந்தவகையினட்பாவேனென்று. (ருஎ)

கடலின்மேலோடுங்கப்பல்கரையின்மேலோட்டலாகா
புடவிமேலோடுந்தேரைப்புணரிமேலோட்டலாகா
திடமுடன்கூடாதென்றுஞ்சேர்வதுமில்லைசேர்ந்தால்
கெடுவதேயுறுதியல்லாற்கேண்மையாதொன்றுமில்லை. (ருஅ)

நாரியர்விருத்தர்சிலர்நியாயமுந்துட்டர்செய்யுங்
காரியங்களுமெய்யாக்கருதியேநட்புகொண்டே
பேருலகத்திலின்பம்பெற்றவரில்லைதுன்பம்
சேருவர்மடியிற்பாம்பைச்சேர்ப்பவர்போலவென்ன. (ருகூ)

உள்ளதுதானேதுட்டருறவொருக்காளுமாகா
தெள்ளியோயீதோர்காக்கையென்றுநீசெயயிடாதே
வள்ளலேவினைக்குநான்றுன்மனதுநட்பாவேனீதான்
தன்னினுமுயிரிழப்பேன்சத்தியமென்றுகூறி. (கூ0)

மாந்தருக்கெல்லாநட்புவருந்திரவியத்தினாலே ;
போந்திடுபறவைக்கெல்லாம்புசித்திடு[illegible]
காய்ந்திடு[illegible]
[illegible]

நல்லவர்கண்டபோதேநட்பினராவர்பொல்லாப்
புல்லியர்தண்டத்தாலேபொருந்தினட்டாயிருப்பர்
மெல்லியலூசிகாந்தமேவிடுந்துண்டமான
வல்லிரும்பெரியில்வெந்துவருந்தியேயொட்டுமன்றே. (௬௨)

நின்னுடையறிவுநெஞ்சினையழுபாயழுங்கண்
டுன்னுடைநட்புவேண்டியுற்றனைதருகேவந்தேன்
என்னுடையறிவுநெஞ்சிவிரக்கமுஞ்சகாயமுந்நீ
மன்னியிங்கறிதியென்றுவாயசவேந்தன்கூற. (௬௩)

நன்றெனவிரணியன்றானகைமுகமாகிநட்பால்
என்றுநாமிடைவிடாமலிருப்பமென்றனுப்பக்காகம்
வென்றிகொள்புலியிரத்தம்வீந்தமாமிறைச்சிதானும்
இன்றெலிதனக்கோர்பங்குதினந்தினமளித்துவாழ்ந்த. (௬௪)

அந்தநாடம்முளோர்நாளடவியிலினைகளில்லை
முந்தவேயெனக்குநட்பாய்முயங்கிடுமாமையின்போர்
மந்தரனவன்பாற்செல்லின்வாவியின்மீன்களெல்லாம்
தந்திடுநாமுந்தின்றுதருக்கியங்கிருக்கலாமே. (௬௫)

என்னவேயெலியுநெஞ்சிலெனக்கொருகருமமுண்டாங்
கன்னதுதனைநின்னோடேயாங்குயந்துரைப்பேனென்னத்
தன்னிருகாலாற்கொண்டுதானுமவானெறியாற்செல்ல
மன்னியவாமைகண்டுவந்தெதிர்கொண்டிருந்தே. (௬௬)

இற்றைநாள்வரையுநன்றாயிருந்தையோநண்பவென்றே
உற்றநற்கருமம்பேசியுபசரித்திருக்கும்போழ்தில்
மற்றெலியாதென்றனைவினவயாமவருந்திமுன்செய்
நற்றவப்பயனால்வந்தநலந்தருநண்பன்காணே. (௬௭)

இங்கிவன்பெருமைசொல்லில்யாவசானமுடியுஞ்சேடன்
தங்குமாயிரநாவாலுஞ்சாற்றினுமுடியாதென்று
துங்கமாங்கபோதராசன்றொடர்வகைப்பட்டவாறும்
அங்கவைவித்தவாறுமடைவுடன்சொல்லிற் [illegible] மா. (௬௮)

சொல்லலுங்கமடவேந்தன்றோழனிங்கிவனேயென்று
நல்லுபசாரஞ்சொல்லிகண்புகொண்டிருகையாரப்
புல்லிமோந்தருகிருத்திப்பொருந்தியவிருந்துமிட்டே
எல்லையிற்களிப்பினோடிருந்திரணியனைநோக்கி. (௬௯)

(எலிநன் வரலாறு சொல்லிய கதை.)

உன்னிடமேதுநீயிங்குறைசரித்திரந்தானேது
நின்னிடம்விட்டுமிங்கேநேர்ந்தகாரணமேதென்ன
என்னிடநகரஞ்சமபகாவதியென்பதீது
தன்னிலோர்தவசிமேவுந்தனிமடமொன்றுண்டென்றும் (௭௰)
பெருவளைக்குள்ளிருப்பேன்பிஞ்ஞகன்சன்னியாசி
தெருவெலாம்பிச்சைதேர்ந்துசிறிதுதானபுசித்துமீந்து
ஒருசிறுபாத்திரத்துட்பெய்துவேறொன்றன்மூடி
வருபயந்தெசிக்கென்றுவைத்தவனுறங்கும்போதில். (௭௧)
வந்துநானந்தச்சோற்றில்வயிறுகொண்டதையருந்தி
அந்தமாயோகிகையிலகப்படாதொளித்துக்கொள்வேன்
இந்தவாறனேககாலமிருக்குநாள்களிலேயோர்நாள்
புந்திகூர்ஞானிதன்பாற்பொருந்தினனொருசன்னியாசி. (௭௨)
பொருந்தியவவனுந்தானும்பொருவில்சாத்திரங்கள்பேசி
இருந்தனரனேகநேரம்யானும்வெம்பசியினாலே
வருந்தியென்வளையைவிட்டுவந்துபாத்திரத்திற்சோற்றை
அருந்தியசத்தங்கேட்டேயதட்டியேதுரத்திவிட்டான். (௭௩)
துரத்தியசூடாகன்னன்றோழனங்கவனைநோக்கி
விரத்தனாயிருந்துஞானம்விளைவியவுனக்கிப்போது
கருத்துவேறுற்றதென்னகாரணமென்றுகேட்க
தெரித்திடுமுனதுசொல்யானாதரஞ்செய்யகில்லேன். (௭௪)
எலிக்கிந்தக்குதிப்பைக்கண்டேயென்மனம்வேறாயிற்றுப்
பலிக்குநானுழன்றெடுத்த*பாத்தெலாந்தின்றுகொண்டே
கெலிப்புடனுளதிங்கையாகிட்டினும்பிடிக்கக்கூடா
இவ்வெலிக்கிப்படிநான்கண்டதில்லையென்றிரங்கிச்சொன்னான்

* பாத்து=சோறு.

அன்னவன்றன்னைநோக்கியதிதியவ்வெலியொன்றேயோ
பின்னையுமுண்டோவென்னப்பேரெலியொன்றேயென்றான்
மன்னுகாரணம்வேறுண்டுமறையவன்றேவிக்கன்றான்
சொன்னகாரணம்போலென்றுசொல்லவக்கதையேதென்ன.)

(தீதிசெய்த கதை,)

முன்னமோர்நகரந்தன்னின்முழுமறையுபாத்தியாயன்
தன்னுடைமனையாளானசவுணடிலிதன்னைநோக்கித்
தென்னமர்பருவந்தன்னிற்றிதிசெயவேண்டுமென்ன
அன்னவள்செலவுக்கில்லையரிசியுமில்லையென்றாள். (எஎ)
என்றலுமுபாத்தியாயனிருந்ததுகொண்டுசெய்தல்
நன்றதுவைத்துவேறேநாடினல்வேடனேரி
பொன்மினற்போலப்பொன்றும்பொருளையுமிழப்பயென்ன
வென்றிகொள்வேடனேரிவிளிந்தவாறவள்யாதென்ன. (எஅ)
வேடுவனொருவன்காட்டில்வேட்டைகள்கிடையாமற்போய்
வாடியேயனேகநாளாய்வனத்திலேதிரியவோர்நாள்
ஓடியமானின்பின்னையுலைக்கதையெய்துகொண்டு
நாடினன்சேரியாங்கோர்நற்பெரும்பன்றிகண்டான். (எகூ)
இத்தைநாமெய்தோமாகிலிரண்டுநாட்டினியுண்டென்
றத்தையுமெய்தான்பன்றியவனையுங்கொன்றுசாத
லுற்றதுநரியுங்கண்டுமூன்றுநாளிரையுண்டென்று
கொத்துவினாண்கடிப்பக்குத்திடச்செத்ததென்றான். (அ0)
உள்ளதுகொண்டுதன்மமுதவிநாம்புசிப்போமென்று
தெள்ளியமறையோன்சொல்லத்தேவியுமகிழ்ந்துவீட்டில்

வள்ளலார்மறையோர்க்கெண்ணெய்வழங்கிரீராட்டவென்றே,
திலத்தையாய்ந்தெடுத்துச்சீரிற்செப்பமாக்கழுவிப்பாயில்
உலர்த்தினளுலர்த்தவந்தவூரினிற்காகந்தின்று
நிலத்தினிலிறைப்பக்கண்டுநெஞ்சகங்கலங்கியோடிப்
புலத்தியனென்னும்வேதபூரணன்மனையிற்சென்றே. (அக)

அங்கவன்றேவிதன்னையழைத்துநான்பருப்பதிவேன்
மங்கையேயெள்ளுத்தந்துமாற்றெனுமாற்றங்கேட்டே
இங்கொருகாரணத்தாலெள்ளுக்குமாற்றவந்தாள்
கங்கையேயென்றவ்வேவந்தனடியேவிசாரித்தானே.

ஆரணனறிந்துகொண்டானப்படிநாமுமிந்தக்
காரணமறிவோமென்றுகடுகியேகொட்டெடுத்துப்
பாரளையகழ்ந்துவெட்டிப்பார்க்கநானோடிப்போனேன்
சேரவங்கிருந்தசெம்பொற்றிரளெலாமெடுத்துக்கொண்ட

வேறொருவளையில்வைகிவெம்பசிதனக்குமுன்போல்
சோறுநானருந்தப்போனேன்றுரத்திவந்தடித்தானின்று
காறுமங்கவர்மடத்தைக்கருதவும்பயந்துதிங்கள்
ஆறுமோராறுமவேறோரடவிபுக்கிருந்தேனியானே. (

திரவியந்தானேபுத்திதிரவியந்தானேவித்தை
திரவியந்தானேசுதந்திரவியந்தானேசித்தி
திரவியந்தானேசத்திதிரவியந்தானேமுத்தி
திரவியந்தானேயாதுஞ்செய்வதல்லாதுமுண்டோ. (

சத்துவமபுத்திவித்தைசதுர்விதார்த்தங்களான
இத்தனைவிதமுஞ்செல்வமில்லையேலிலையாகுஞ்
சத்துவமபுத்திவித்தைசதுர்விதார்த்தங்களான
இத்தனைவிதமுஞ்செல்வமெய்திடிலெய்துமன்றே. (

சுதியிலார்பாட்டுந்தங்கள்சுற்றமில்லாதனாடும்
மதியிலார்கவியுநல்லமனைவியில்லாதவீடும்
பதியிலாரழகும்பாழேபார்க்கிலிங்கிவைபோலல்ல
நிதியிலார்க்கெவையும்பாழேநினைக்கின்மூவுலகினுள்ளும்.

கதிரவனிலையேற்கண்ணிற்காணபனமறையுமாபோல்
நிதியமொன்றிலையேல்யார்க்குநீதியாஞானம்போதம்
துதிபெறுகீர்த்தியாண்மைசூழ்ச்சிமந்திரவிசாரம்
சதுரமானமெல்லாந்தன்னாலேமறைந்துபோமால். (

வறுமையாலேயாசிக்கவருமவர்தமக்குமாவி
இறுமவர்தமக்குஞ்செய்யுமியற்கையொன்றுமேதென்னில்
உறுதிபோங்கைகால்சோருமுள்ளமுங்கலங்குமெய்யும்
குறுகியேநடுங்கும்வாயுங்குழறுநல்லறிவும்போமே. (௬௰)
பொன்னின்மேலிருந்துசோற்றைப்புசித்தனைபொன்னும்போ
இன்னமுமுனக்குவெட்கமில்லையோவென்றுசூடா [ச்சே
கன்னன்முன்சொன்னதென்றன்கருத்துளேவருத்தலாலே
நின்னைவந்தடைந்தேனென்னைநீயினிக்காப்பாயென்ன. (௬௧)
இரணியன்றன்னைநோக்கியிலகுபதனன்கணியும்
திரமுடன்வந்துசேர்ந்தசெல்வமுற்பிறப்பிலேயான்
பரவியதெய்வந்தந்தபாக்கியமன்றோவென்று
புரைவறநண்புகொண்டுபொருந்தியங்கிருந்துகொண்டே. ()
மந்தரன்மீன்கள்கொண்டுவரலகுபதனன்போகி
எந்தடைவேனுநல்லவிறைச்சிகள்கொண்டுசெல்லச்
சுந்தரவிரணியன்போய்ச்சோறுகொண்டேகமூன்றும்
சந்ததங்கூடியுண்டுதருக்கியங்கிருக்குநாளில். (௬௩)

(வேறு.)

காணவேடனைக்கண்டுநடுங்கிய
மானினோர்கலைமானவணெய்தலும்
ஞானந்தானுமிலாநண்பனையுளம்
ஏனடுங்கினையென்றுவினவவே. (௬௪)
வெஞ்சமன்புரைவேடனொருவனை
நஞ்சவம்புகொண்டெய்யநடுங்கியே
தஞ்சமிங்கின்மையாலுமைச்சார்ந்தனன்
அஞ்சலென்றபயந்தருவீரென. (௬௫)
நல்லதுன்பெயர்யாதுநவிலென
எல்லைமன்சித்திராங்கனெனச்சொல்வார்
சொல்லுந்தங்கைதாய்சுற்றமொன்றின்மையால்
புல்லுகானம்புகுந்துவருந்தினேன். (௬௬)

தந்தைதாய்தமர்நீவிர் நுந்தஞ்சமாய்
வந்தவென்மிசைநண்புவைத்தீரெனில்
எந்தநாளுமுமைப்பிரியேனென
மந்தரன்முதன்மூன்றும்வகுக்குமால். (௯எ)

நன்றுநாமினிநால்வருங்கூடியே
ஒன்றுசிந்தையராகியொருமையாய்
என்றும்வாழ்வதியல்பெனவெண்ணியே
அன்றுமூன்றுமபயமளித்தவே. (௯அ)

நான்குமிப்படிநல்லுறவாகியே
ஆங்குவைகுமளவினிலோர்பொழு
தோங்குமாறிலாக்கோடியோர்காட்டினில்
தேங்குவேடன்வலையினிற்சிக்கியே. (௯௯)

சித்திராங்கன்றிகைத்ததுகண்டுதான்
கத்துகாகத்தின்பாடைதங்காதுற
மெத்துமாமையுமோடிகமும்விரைந்
தத்திசைக்கணடைந்ததைக்கண்டவே. (௱)

காக்கைசென்றெதிர்கூவிக்கதறியே
நிக்கண்வேடன்வலையினிற்சிக்கியே
நோக்குநவ்விநுடங்கும்வருத்தத்தை
நீக்கவேண்டுகிமிடத்திலென்னவே. (௱௧)

கூடிமூன்றுங்குறுகிவலைக்குளே
வாடிநின்றமறிமுகநோக்கியே
பீடிலாவுமறிவிற்பெரியைநீ
ஓடியிவ்வலையுற்றதென்னெனவென. (௱௨)

பின்னைவேண்டினபேசுதும்வேடன்வந்
தென்னையாவியிறுத்திடுமுன்னமே
மன்னுகாலில்வலையைவிடுத்திடென்
றுன்னுமோடிகத்தோடுரைசெய்யவே. (௱௩)

என்னபீதியுனக்கென்றெலிசொல
முன்னைநான்குருளைப்பருவத்திலே
அன்னையோடுமடவியில்வைகினேன்
துன்னுவேடன்பெருவலைசூழ்ந்தனன். (௱௪)

தாவியந்தவலைதனைத்தாண்டியோர்
காவில்வீழ்ந்தனனைக்கண்டுகொடுங்கொலைப்
பாவியென்னைப்பிடித்துப்போய்ப்பட்டணக்
காவலன்மகிழ்காணிக்கையீந்தனன். (௱௫)

அந்தமன்னன்குமாரர்க்களித்தலும்
மைந்தர்சிந்தைமகிழ்ந்துகளிப்பினால்
சந்ததம்விளையாடித்தருக்கியே
பந்தமிட்டுவைத்தாரப்பாகவிலே. (௱௬)

மழைமுழக்கிவருதலுநாமுகம்
உழையினத்துடனோடித்திரிந்துபைங்
குழைமுறிப்பதெந்நாளெனக்கூறிநின்
றழுதரற்றினனன்னதுகேட்டலும். (௱௭)

என்னகாரணமோவறியோமிது
தன்னைநான்தடைசெய்வதுதன்மமன்
றென்னவெண்ணியெனைவிடுத்தாரிள
மன்னர்நானிவ்வனத்தினிலுற்றனன். (௱௮)

என்றுகூறியிரங்கவிரணியன்
வென்றிவேடன்விரைந்துவருமுனம்
சென்றுகாலில்வலையைச்சிதைத்தலும்
கன்றுமானுங்கடுகிநடந்ததே. (௱௯)

தீமைவேடன்விரைந்துசென்றுனெளி
பூமிவாய்வளைபுக்கங்கொளித்தது
வாமமேவுகொடிமரத்தேறவே
யாமைதானடையான்முட்டதானதே. (௱௰)

வந்தவேடன்மனதுமயங்கியே
அந்தமானினடிதொடுத்தோடலும்
முந்துமாமைமுடங்கிக்கிடந்ததைப்
பந்தமார்வலைப்பையினிற்கட்டியே. (௱ச

மானின்மேன்மனம்வைத்துமயங்கியே
ஆனவேடுவனாமைகொணடோடவே
ஞானமார்கொடியைக்கண்டெண்பனைக்
கானநீங்குமுன்மீட்கக்கருதியே. (௱க

ஆகுவேந்தனம்மாமையைக்கொண்டவன்
போகநாங்கண்டிருத்தல்பொல்லாதுமுன
ஏகிமானொடுகூடியிதற்குவே
றாகமெண்ணுவமவாவென்றுரைத்ததே. (௱க

என்றுரைத்தலுங்கேட்டிகல்வேடனை
வென்றுநண்பனிடர்விலக்காமலே
சென்றுநாமுயிர்வாழ்வதுதிதென
றொன்றுநண்பிற்கொடியுமுரைத்ததே. (௱க

மீகாலமாறொலிநன்றெனக்கூறலும்
காலினாலங்கிடுக்கிக்கணத்தினில
சாலவேபறந்தக்கலைதன்னுடன்
ஓலவேயொருநன்மையுரைசெயும். (௱க

தத்துநீர்க்கரைதன்னில்விழுந்துநீ
செத்ததென்னக்கிடந்திடுசேர்ந்துனைக்
கொத்துவேனதுகொணடவனாமையை
வைத்துநின்னையெடுக்கவருவனே. (௱க

அந்தவேளையிரணியனாமையின்
பந்தநீக்கிவளைபுகும்பைம்புனல்
மந்தரன்புகுநான்பறப்பேனவன்
முந்தநீயுமொளித்திடுவாயென. (௱க

நல்லசூழ்ச்சிசொன்னாயெனநண்ணியே
மெல்லநீர்க்கரைமான்கலைவீழ்ந்தது
புல்லுகாகம்புசிக்கவிழுந்தபோல்
மெல்லவேயதன்மீதிலவிழுந்ததே. (௱௧௮)

கண்டுவேடன்கலக்கந்தெளிந்திதைக்
கொண்டுபோதுமெனக்குலத்தாமையை
மண்டுநீர்க்கரைதன்னில்வைத்தோடினான்
பண்டுபோலெலிபாசங்கடிக்கவே. (௱௧௯)

மானைவேடன்குறுகவம்மானொரு
கானில்வீழ்ந்ததுகாகம்பறந்தது
கூனலாமைகுளத்தினிலவீழ்ந்தது
ஞானமூடிகநல்வளைபுக்கதே. (௱௨௦)

வேடனோடிவிடாய்த்தவன்மீளவே
கோடுலாவியவாயசங்கூறவே
நாடிநான்குமங்கோரிடநண்ணியே
கூடிவாழ்ந்துகுலாவியிருந்தவே. (௱௨௧)

ஆதலானல்லவர்களுறவுபோல்
ஊதியம்பிறிதில்லையுயிர்க்கென
வேதியன்சொலவேந்தன்குமாரரும்
நீதியாமெனநேயம்வைத்தார்களே. (௱௨௨)

இரண்டாவது.—சுகிர்லாபதந்திரம்

முற்றிற்று.

## மூன்றாவது.

# சந்திவிக்கிரகதந்திரம்.

அந்தணன்சுகிர்லாபத்தினடைவெலாமுரைப்பவேந்தன்
மைந்தர்கள்வினவிமிக்கமகிழ்வுடனிருந்துமூன்றாந்
தந்திரமென்றுசொன்னசந்திவிக்கிரகம்யாது
புந்திகூர்ந்துணரக்கவென்றுபுகலவேதியனுரைப்பான்.

சத்துருவானபேர்கள்சரணமென்றடைந்தாரேனும்
மித்திரராகவெண்ணிவிரும்பிநட்பாகவொண்ணா
தெத்திறமென்னிற்காகமிளைத்ததுபோலவந்து
குத்திரமாகக்கோட்டான்குலமெலாமழித்ததன்றே.

என்னவக்கதையேதென்றாரிருள்குடிகொண்டகாடொன்
றன்னதிற்பெரியதானவாலமாமரத்திலென்றும்
துன்னியகாகவேந்தன்றுகளறுமேகவண்ணன்
அன்னவன்சேனைகோடியமைச்சரோரைவராவார்.

திகழுமுத்தீபிதன்சந்தீபிதன்றேசமெல்லாம்
புகழ்புரோத்தீபிதன்பின்புகலுமாத்தீபிதன்மேல்
நிகழ்சிரஞ்சீவியென்பார்நீதிமந்திரிகள்சூழ
மகபதிபோலமேகவண்ணன்வீற்றிருக்குநாளில்.

அடுக்கவோர்மலைமுழைக்குளலகிலாக்கூகைதாழ
நடுக்கமொன்றானுமின்றிநல்லமந்திரிகள்சூழ
இடுக்கணில்லாமலெங்குமிரவெலாம்வேட்டையாடத்
தடுக்கலாவுலூகமன்னன்றானுமங்கிருந்துவாழும்.

பகலெலாங்காகங்கூகைபதைத்திடவதைக்குங்கூகை
இகலிராமுழுதுங்காகமெழும்பிடாதடிக்குமிந்த
வகையிலேகிடந்துசிந்தைவருந்துநாடன்னிலோர்நாள்
தகவிராவதனில்யாமந்தனிலமைச்சர்களைநோக்கி,

கதிரவனெழுந்தாலந்தக்காக்கையைவெல்லக்கூடா
திதுநலசமயமிந்தவிரவிலேவளைந்துகொண்டு
சதியினாலடித்திழுத்துச்சத்துருநாசஞ்செய்வோம்
மதியுடன்சேனைகூடிவருகவன்றெழுந்ததம்மா. (௭)

நன்றெனமகிழ்ந்தமைச்சர்நமக்கிதுவேளைதானே
வென்றிநாம்பெறுவோமென்றுவிரைவுடன்படைகள்கூட்டிச்
சென்றுபேராலைச்சூழ்ந்துசினத்துடனடித்துக்கொத்திக்
கொன்றுதான்வெற்றிகொண்டுகூகைவேந்தடைந்தன்றே. ()

அழிந்தனகாகசேனையாவெலாங்குருதிவெள்ளம்
வழிந்ததுசிறகுங்காலும்வயிற்றினிற்குடருமற்று
விழுந்துபின்மற்றதற்குள்வேந்தனும்விழுந்தொளித்தான்
இழிந்ததுகங்குற்போழ்துமெதிர்ந்ததுபரிதிமன்றோ. (௯)

இருள்விடிவளவின்மன்னனெழுந்துதன்படைகள்பட்டுக்
கருமலைபோற்குவிந்தகணமெலாம்பார்க்கவங்கே
பெரியமந்திரிகளைந்தும்பிழைத்தனசிலகாகங்கள்
தருவொடுமினத்தைநீத்துத்தப்பியேபிழைத்தவாங்கே. (௧௦)

பிழைத்தகாகங்களோடுபெரியமந்திரிகடம்மை
அழைத்துங்காகமெல்லாமழிந்திடவென்னவேதன்
இழைத்தநாளிதுவோவென்றங்கிரங்கியேயழுதுகாயத்
துழைத்தகாகத்துக்கெல்லாமுற்றகாயங்கள்கட்டி. (௧௧)

செத்தகாகங்கட்கெல்லாஞ்செய்யுமாறுரிமைசெய்து
தத்துநீராடிவேறோர்தருவினிலிருந்துவேந்தன்
துய்த்தலுந்துறந்துமிக்கசூழ்ச்சிமந்திரிகாளென்ன
புத்திரமுய்யுமாறுபுகலுமினென்றுகூற. (௧௨)

சத்துருவினுமிக்காரைச்சார்ந்துசத்துருவைவெல்லல்
அத்திறங்கூடாதென்னிலவரையேதொழுதுசீற்றல்
சித்தமங்கிரங்காராகிற்றேசம்விட்டப்பாற்போதல்
இத்திறமுபாயமூன்றேயென்றுதீபிதனவின்றான். (௧௩)

தன்னிடத்திருக்குநாய்க்குஞ்சௌரியமுண்டுசிங்க
மென்னினுந்தானம்விட்டாலெவருமங்கதையெண்ணார்கள்
துன்னுபாற்பசுவுந்தன்பால்சுரந்திடாதிடம்பேதித்தால்
மன்னிடத்திருந்தேவெல்லும்வகைநினைத்திடுதனன்றே (௧௪)

என்றுசந்தீபிதன்றானியம்பலுமனுமறுத்து
நின்றுநற்குணமேதென்றுநிகழ்புரோத்திபிதன்முன்
வென்றிகொண்டவர்கணம்மைமேவியிங்கிருக்கவொட்டார்
இன்றினிச்சமாதானத்தாலிருப்பதேநலலதென்றான். (௧௫)

வெங்கதிர்ப்பகலிற்கண்கள்விளங்குதன்குடிஞைக்கில்லை
கங்குலின்பொழுதுகண்கள்கருங்கொடிக்குலத்துக்கில்லை
எங்கினிச்சமாதானத்தாலிருப்பதுகூகைகூட்டம்
மங்கவிப்பகலேசென்றுவளைந்துகொண்டடிப்போமென்று. ()

ஓதவாத்தீபிதன்மற்றுரைத்தமந்திரிகளுள்வர்
போதனைபலவுங்கேட்டுப்புத்தியுமுபாயமுஞ்சொன்
னீதியும்விறலுமென்றுநிகழ்சிரஞ்சீவிதன்னை
ஓதுநீயென்றுமன்னனுரைத்திடவுரைக்குமன்றே. (௧௭)

வித்தொடுமந்திரஞ்சேர்விசாரமுகிகோயந்த
வித்தினைவிதைத்தாலன்றிவிளைபயன்கொடாதவ்வாறு
புத்திமந்திரிகள்சொல்லும்போதனைதனையுநெஞ்சில்
வைத்திருந்தாலேயன்றிமன்னர்தங்கருமம்வாயா. (௧௮)

கூடுவதொன்றுகூடிக்குறைவறக்கெடுப்பதொன்று
நாடுவிட்டேகலொன்றுநல்லரண்சேர்தலொன்று
வீடுவிட்டேகாதொன்றுமித்திரபேதமொன்று
நீடுசொல்வேந்தர்தம்பானிகழ்குணமிருமூன்றாகும். (௧௯)

காரியமுயற்சிபண்ணல்காலமுமிடமுமோர்தல்
சீரியதனமுமாளுந்தேடுதலொருவன்செய்த
காரியமதனுக்கொத்தகாரியந்தானுஞ்செய்தல்
பாரிலேசமாதானங்கள்பண்ணலைந்தாகுமங்கம். (௨௦)

சாமமும்பேதந்தானுந்தானமுந்தண்டந்தானும்
ஆமுபாயங்களுள்காமறியுமுற்சாகமந்த்ரம்
பூமியிற்ப்ரபுத்வமென்றுபுகன்றிடுசத்திமூன்றே
சாமியிங்கிவைகளெல்லாந்தானறிந்தவனேவேந்தன். (உக)

மூவிருகுணமுமங்கமொழிந்திடுமைந்துநெசில்
மேவியவுபாயநான்குமிக்கசத்திகளோர்மூன்றும்
ஓவறவிசாரித்தேற்றவுசிதமானவைகளெல்லாம்
காவலர்கருத்திலெண்ணிக்கரும்மங்கியற்றுவானே. (உஉ)

பெலத்தவர்தம்மைச்சேரார்பேசியசமாதானத்தால்
நலத்தகவிருப்பதில்லைநாமினிபொரவுமாட்டோம்
சலத்தாசேவகமுமாகாச்சந்ததஞ்சிந்தைநீங்காக்
குலப்பகைநமக்குமந்தக்கூகைக்குமென்றுகூற. (உங)

என்னகாரணத்தினாலேயிருவரும்பகைத்ததென்ன
மன்னவாகாக்கையார்தமவாக்குத்தோஷத்தினாலே
பன்னுநங்குலங்களந்தப்பகையினாற்பட்டபாடு
துன்னியகழுதைவாக்குத்தோஷத்தாற்பட்டவாறே. (உச)

வாய்க்குற்றத்தாற் கழுதைகெட்ட கதை.

எனச்சிரஞ்சீவிகூறயாதந்தக்கதைசொல்லென்ன
மனக்கபடானவண்ணான்வளர்த்ததோர்கழுதைமேலே
கனப்பொதியேற்றிவாவிக்கரையிலேதள்ளிப்பாசக்
தனைக்கொடிகட்டிப்போட்டுத்தப்புவன்பகலினெல்லாம். ( )

கங்குலிற்புலித்தோலாலேகழுதையைமறையப்போர்த்தே
அங்கொருபயிர்ப்புலத்திலனுதினம்விடுவன்மேய
தங்கியசெந்நெற்காப்பார்தனிப்புலியெனப்பயந்தே
அங்கொளித்தோடிப்போவாரதுவுமேய்ந்தோடிப்போமே. ( )

புலிமிகப்பசித்ததேனும்புற்களைத்தின்றதென்பார்
கலியினிற்புதுமைதானேகபடமோவென்னவெண்ணி
வலியவனொருவன்கையில்வில்லையந்தனைக்கைக்கொண்டு
பொலிகருகம்பளத்தாற்பொதிந்துகொண்டொளித்திருந்தே ( )

விளைவொடுகழுதைவந்தவேளையிலெழுந்திருக்கக்
காமதுகண்டுபெட்டைக்கழுதையென்றெண்ணிக்கொண்டு
குரன்முழக்கிடவேசத்தங்குறித்திவர்கழுதையாரோ
வரவரவென்றுசொல்லிவாட்டினனீட்டியாலே. (உஅ)

கழுதைதன்வாக்கினாலேகடுங்கொலையுற்றதிதோ
முழுவதும்பறவைகூடிமுன்னமோர்கூகைதன்னைப்
பழுதறுமாசனாகப்பட்டமேகட்டிவைத்துத்
தொழுதினிவாழ்வோமென்றுசூழ்ந்துவந்திருக்கும்போது. ()

பலபலசாதியானபறவைகளனைத்துங்கூடி
நலமதுதானேயென்னநவிழுதுகாகமொன்று
குலமிதுநல்லதல்லகுணங்களுந்தீக்குணங்கள்
நிலமிசைக்கோட்டானென்றுநிசிசரமெனுஞ்சொற்சொல்லும்.

பகற்கெலாங்குருட்டுக்கண்கள்பார்வைக்கும்பிடிபடாவாம்
முகத்திலேயழகுமில்லைமொழியினுமதுரமில்லை
அகத்தினல்லறிவுமில்லையாருமிங்கிதையெண்ணார்கள்
சகத்திலேயிதன்பேர்சொன்னாற்சத்துருமிகுதியாமே. (கக)

பெரியவன்பேரைச்சொன்னாற்பெரும்பகைதனையும்வென்றே
உரியதன்னினமுந்தானுமுய்யலாமதற்குச்சாக்ஷி
அரியசந்திரன்பேர்சொல்லியானையின்படையைவென்றே
ஒருமுயலினங்களோடேயுகந்துவாழ்ந்திருந்ததென்றே. (கஉ)

(முயல் யானையை வென்ற கதை.)

துன்னருமடவிதன்னிற்றும்பிகளனேகஞ்சூழப்
பன்னருஞ்சதுரதந்தனெனுமிறைபண்பின்வாழ்நாள்
அன்னாண்மழையில்லாமலருஞ்சுனையெல்லாம்வற்ற
உன்னுநீரெங்குண்டென்னவொற்றர்பார்த்தோடிவந்தே (கங)

சந்திரசரசுதண்ணீர்ததும்பிடநிற்குதென்ன
அந்தநற்சுனையைநாடியானைகளனைத்துஞ்செல்ல
முந்தியச்சுனையைச்சூழுமுயற்சிலீமுகவேந்தஞ்சி
மந்திரிவிசயன்றன்னைவரவழைத்துரைக்குமன்றே. (கச)

இற்றைநாள்வரையினுமினமுமிச்சுனையைத்தானே
சுற்றியிங்கிருந்தோமிந்தத்தும்பிகள்வந்துபுக்கால்
மற்றுநாமிருக்கலாகாவனத்தில்வேறிடமுமில்லை
உற்றிவணிருக்கவேறொருபாயநீநினைப்பாயென்ன. (௩௫)

ஆனையைவெல்லுமாறிங்கருமையோவிடைதாவென்று
ஞானமந்திரவிசாரநனிபெறுவிசயன்கூறிச்
சேனைகாவலனுமந்தச்சிலீமுகனனுப்பவேகிக்
கானில்வேழக்கூட்டத்தைக்கண்களாற்கண்டுநின்றே. (௩௬)

நகைத்துடன்கொல்வர்துட்டர்நாமவர்நடுவிற்பட்டால்
வகைப்படவோர்பானின்றால்வந்தடித்திடுவர்மாறாய்
மிகைப்படவவர்கள்கையிலவீறுடனுமுஞ்சும்மா
அகப்படினம்மையந்தவானைதான்கொல்லுமன்றே. (௩௭)

எனறுநனமனததிலெணணியதன்கையிலகபபடாமல
நின்றுநாம்வெல்வோமென்றுநினைத்தொருகுவட்டிலேறித்
துன்றியகளிற்றுவேந்தைத்தும்பிநீசுகமோவென்ன
வென்றிகொள்களிறுகண்டுவியந்துநீயாரோவென்ன. (௩௮)

இசைநிலாவெறிக்குந்திங்களேவியதூதனென்பேர்
விசயனென்பார்களுன்பால்விடுக்கவந்துற்றேனென்ன
அசைவிலாதாகியந்தவானையுமயங்குநின்றே
விசயநீவந்ததென்னவிளம்பெனவிளம்புமன்றே. (௩௯)

சந்திரசரசென்றெங்கள்சசிபகவான்பேராலே
இந்தநற்கானகத்திலிருஞ்சுனையொன்றுண்டாக்கி
அந்தநற்சுனையிலெங்களையனுந்தேவிமாரும்
முந்தியசலக்கிரீடைமுயங்கியேபகலைக்கெல்லாம். (௪௦)

தண்ணறுஞ்சுனைக்குக்காவல்வைத்தெமைத்தாங்கள்போவர்
விண்ணவருலகத்தாரும்விரும்பினுந்தொடப்படாது
நண்ணியசுனைநீருண்ணநாடினைநீயென்றெங்கள்
அண்ணலார்சினந்துன்பக்கலனுப்பினார்தடுத்தியென்றே. (௪௧)

தூதுசொல்வாரியற்கைதுங்கவாளுருவிக்கொண்டு
கோதமாய்க்கேட்பார்முன்னுங்கூறுவகூறல்வேண்டும்
யாதவர்கூறினாலுமிகலினர்தூதரேனும்
ஏதமிவரசர்தூதர்முனியினுமுனியாரன்றே. (௪௨)

தன்னுடல்வலியினாலேதான்பெரியனைப்பகைத்தால்
பின்னவர்சினந்துவெல்லப்பெற்றுயிரிழத்தல்வேண்டும்
அன்னதைநினையாமற்பின்பவர்பகைநினைத்தாரேனும்
முன்னரேவணங்கிப்போற்றின்முடிவுறாவிமன்னே. (௪௩)

மூவரின்முதல்வரானமுனைவனார்முடிமேல்வாழும்
தேவனைப்பகைத்தசிந்தைச்செயலினையினித்தடுத்தே
மேவுதண்சுனைமேல்வைத்தவேட்கையைவிடுத்திந்நேரம்
போவதேகருமமென்றுபுத்திகள்பலவுஞ்சொலி. (௪௪)

இங்கிவையனைத்துநானேயியம்பினனுன்னைவேண்டித்
திங்களம்பகவனுன்மேற்சினந்ததுகொஞ்சமல்ல
அங்கவன்சினமுநானேயாற்றுவனவன்பாற்சென்றே
வெங்களிற்றினத்தினோடேமீள்கநீயென்றுகூற (௪௫)

தந்தியினரசுமந்தச்சசந்தனைநோக்கிநீசொல்
சந்திரனெனுந்தேவிந்தத்தடந்தனிற்குடைவதெப்போ
தந்தவேளையினில்வந்தங்கவனடிபோற்றியானும்
உய்ந்துமீண்டேகுவேனென்றோதலுமுயலனென்றென்று. (௪௬)

அன்றிரவுடன்கொண்டேகியலைபுனற்றடத்திற்றோன்றும்
துன்றுவெண்மதியின்சாயைசுட்டிநீகாண்கவென்ன
நன்றதைக்கண்டுதிங்களுதனையென்றுஞ்சூழ்வுற்
றோன்றியவுடுக்களன்னோற்குரியநன்மாதொன்றும். (௪௭)

ஆனையுநினைந்துநெஞ்சமழிந்துபின்றெளிந்துநின்று
நானிதையறியேனெங்களுதனைபொறுக்கவென்று
வானுயர்மதியைநோக்கிவணங்கியேமீண்டுபோகக்
கானுறுமுயல்களெல்லாங்களித்துவாழ்ந்திருந்தவன்றே. (௪௮)

அப்படியாகருமரசன்பேர்பெரியதாகில்
செப்பியபகைவந்தாலுஞ்செயிக்கலாமதுவுமில்லை
எப்படியரசுநாட்டவியைந்தீர்முகூர்த்தமிட்டீர்
தப்பிதுநினைத்தீதொன்றுசாற்றியேபின்னுஞ்சொலலும். (௪௯)
பாவிகண்மோனர்போலுமபலவிரதியர்கள்போலும்
ஓவறுசகாயம்போலுமுறமுறைச்சுற்றமபோலும
மேவுவரவரைச்சேரினமேன்மையரோனுமுய்யார்
பூவையுமுயலுமுன்னோர்பூனையைச்சேர்ந்தவாறே. (௫௰)

(மைநாவும் முயலும் மோசம்போனகதை.)

என்னவக்கதையேதென்றேயினப்பறவைகள்வினவ
முன்னமோர்மரத்தின்மேலேமுயங்கினனிருக்குமபோது
தன்னிகரின்றிவாழுந்தனிமுயலொன்றுவந்தே
உன்னுமோராபொந்திற்சேர்ந்தங்குட்புகுந்திருந்ததன்றே (௫௧)
பூவையொன்றங்குவந்திப்பொந்துநானிருக்குமவீடு
நீவருவானேனென்னக்கிழவொலாடுதருக்கள்சாலை
வாவிநற்கூபஞ்செலலுமவழியினிற்றண்ணீர்ப்பந்தல்
சாவடியிவைகளெலலாஞ்சகலர்க்கும்பொதுவேயென்ன. ( )
அங்கவையிரண்டுஞ்சண்டையாகிப்பின்மத்தியஸ்தர்
தங்களைக்கேட்போமென்றுதனிமுயலழைத்துபபோக
இங்குநாமவழக்காவந்தோமிருதலைவழக்குந்தீர்க்கும
துங்கரரென்றுபூவைசொல்லவேமுயலுஞ்சொலலும், (௫௩)
கருதியமுனையாற்றங்கரையிலேதவத்தைப்பண்ணும்
பொருவில்கூர்ம்பல்லனென்னுமபூனையார்சொல்வாரென்ன
வெருவியேபூனைபக்கன்மேவினாஞ்செல்வதெவ்வா
றுரையெனத்தூரநின்றேயுரைப்பமென்றழைத்துப்போக. ( )
இருவருமபோனாரந்தவிருடியார்தவத்தைக்கண்டார்
பெரியவரிவர்தாநம்மைப்பிடிப்பதுசெய்யாரென்று
கருதினர்பணிந்தெழுந்தார்கைகளுங்கட்டிநின்று
பரவினர்யோகநீங்கிப்பார்த்தனர்பூனையாரும். (௫௫)

ஆரெவர்நீங்கணம்மையறிந்துநீரிங்குவந்த
காரியஞ்சொல்லுமென்றுகபடனுரைக்கத்தங்கள்
பேரொடுவழக்குஞ்சொல்லப்பெருகியமூப்பினாலே
நீருரைப்பதுகேளாதுநெருங்கிவந்துரைக்கவென்ன. (௫௬)

சற்றிடங்கிட்டிவந்துசாற்றவிம்மாற்றங்காதில்
உற்றதுபோலும்பாதியுறாததுபோலுங்கேட்டோம்
மற்றினிப்பக்ஷபாதவழக்குநாமுரைப்பதில்லை
குற்றமிங்கொருவர்மீதிற்கூறிடிற்கோபமாமே. (௫௭)

தருமமேவிரும்புவாரைத்தருமமேவிரும்பிக்காக்கும்
தருமமேயிகழுவாரைத்தருமமேயிகழ்ந்துநிற்கும்
தருமமேமெய்யாய்நின்றுசகலமுஞ்செய்தலாலே
தருமமேசொல்வதல்லாற்சற்றுநாம்பொய்சொல்லோமே. ()

எண்ணியவிரதமெல்லாமியற்றினமிவைக்குமேலாம்
புண்ணியவிரதமென்னும்பொய்சொலாவிரதமொன்று
நண்ணியவுயிரைக்கொல்லாநலந்தருவிரதமொன்று
மண்ணினிலனுஷ்டிப்போநாம்வழக்கிலோரஞ்சொலோமே. ()

கிட்டநீவந்துசொன்னாற்கேட்குநங்காதுநம்மை
விட்டுநீர்தூரநின்றுவிளம்பினாற்கேளாதென்று
துட்டனார்மாரீசத்தாற்றுலங்குகூர்ம்பல்லனென்பே
ரிட்டமார்ச்சாலன்சொல்லவிவைதமதுளத்திலெண்ணி. (௬௦)

மெய்கள்போற்சொன்னவெல்லாம்விசுவசித்திரண்டுஞ்செல் [லக்
கைகளாற்பிடித்துக்கண்டங்கடித்திரத்தங்குடித்தே
செய்கபடானபூனைசெருக்கியங்கிருக்கச்சேர்ந்த
மொய்சிறைப்பூவையோடேமுயலுமங்கிறந்தவன்றே. (௬௧)

ஆகையாற்புல்லியோரையடைந்திடிற்கெடுவதல்லால்
ஓகைகூர்ந்திருப்பதில்லையுலகினினீதியீதே
கூகையையரசுநாட்டக்குறிப்பதுதீதேயென்று
காகமுனெழுந்துபோகக்கலைந்ததுபறவைக்கூட்டம். (௬௨)

அன்றுதொட்டின்றுகாறுமருங்கொடிக்குலத்தின்மேலே
துன்றியகூகைக்கூட்டந்தொடர்பகைவைத்ததென்ன
மின்றிகழமைச்சன்சொல்லைவினவியமேகவண்ணன்
இன்றுநாமறிந்தோமந்தவிகலெனவுளத்திலுன்னி. (௬௩)

கூறியநீதியானகொள்கையுமறிந்துநெஞ்சம்
தேறிநீயுரைத்ததெல்லாந்தெளிந்தனனெனக்கொண்டேகி
வேறுமோரிடத்திலவைகிமேலினிச்செய்யுமாறு
கூறுகபெரியோயென்னக்குறித்துமந்திரியுங்கூறும். (௬௪)

சந்திவிக்கிரகத்தாலேதரியலரிடத்திற்சென்று
வந்துநான்சேருமட்டுமற்றுமோரிடத்திருந்து
சிந்தையில்வைத்துவேறோர்செவியுறாதடக்கிவிந்த
மந்திரம்பலிக்குமென்றுவள்ப்படப்புகன்றதன்றே. (௬௫)

ஆங்கதுகேட்டகாகவரசனுமவனைவெல்லப்
பாங்குளவுபாயமேதுபகரெனவினவலோடும்
தீங்குளவஞ்சர்மூவர்சேர்ந்தொருமறையோனாட்டைத்
தாய்கொளப்புரிந்தமோசந்தனைச்செய்துவெல்வேனென்றான்.

(அந்தணனை வஞ்சித்த கதை.)

அக்கதைதெரியச்சொல்லென்றறைதலுமமைச்சன்கூறும்
மிக்கதோர்வேள்விக்காகவேதியன்வேற்றூர்சென்று
தக்கநல்லாடுகொண்டுதனதுதோண்மீதுதாங்கித்
தொக்கவுண்மகிழ்வின்மீண்டுதொல்பதிக்கேகும்போது. (௬௭)

வஞ்சகர்மூவரந்தமறையவனாட்டைவௌவ
நெஞ்சினினினைந்தேயந்தநெறியிடையொருவன்முன்போய்ச்
செஞ்சுடர்த்திவளர்க்குஞ்செல்வநீநாயைத்தோள்கொண்
டஞ்சுதலின்றிச்செல்லலாதகாதென்றுகூற. (௬௮)

துட்டனைநோக்கியாகபசுவினைச்சுணங்கனென்றாய்
கெட்டனையோகண்ணென்றுகிளத்தியேமறையோன்செல்ல
இட்டனேபோலிரண்டாமிழிஞனங்கெய்திமேலோய்
விட்டுயிர்போனகன்றைமேற்கொளறகாதென்றோத. (௬௯)

MAHAM... UPADHYAYA
... SWAMINATHA IYER LIBRARY

பழுதறுமறையோனந்தப்படியவன்றனையும்வைது
வழிதனிலேகமூன்றும்வஞ்சன்வந்தக்கணுள
எழுதருநூலகளெல்லாமிழிந்தசண்டாளமென்னும்
கழுதையைச்சுமந்துசெலலுங்காரியந்தகுமோவென்றான். ( )

நாடியேமறையோனிந்தநரர்கள்வெவ்வேறுகூறக்
கூடியவுருவெவ்வேறுகொண்டுதோன்றிடுதலாலே
ஆடிராக்ஷதபபிறப்போவென்னுமையத்தால்விட்டான்
நீடியவஞ்சர்கொண்டாரெளவுரைநிகழ்த்திற்றன்றே. (௭௧)

மேகவண்ணனுமகிழ்ந்துமிகுந்தகாகங்களோடே
ஏகியோர்மலையினுச்சியேறியங்கிருக்கவாதக்
காகமந்திரியுஙகூகைகணநதைநாளுசேருமாறங்
கேகுமோவென்னுமுனனேயிரவிபோய்மறைந்ததன்றே. ( )

மாலையமபொழுதேகண்கண்மறைந்தனசிரஞ்சீவிக்குச்
சாலவேகூகைமன்னன்றன்படைமுழுதுங்கூட்டி
நாலுதிச்கிலுமவளைந்துநம்முடைக்கண்ணைததபபி
ஆலினமேலிருக்குங்காக்கையனைத்தையுங்கொலவோவென்று.

வந்ததுகாக்கையொன்றுமரத்திலில்லாமைமாலே
மந்திரிமாரைநோக்கிவாயசக்கூட்டமான
இந்தவன்பகையைவென்றேமினிநமக்கெதிராரென்றே
சிந்தையின்மகிழ்ச்சியோடேசெருக்கியங்கிருக்கும்போது. ( )

கள்ளமாயிதனைவெல்லக்கருதியங்கிருக்குங்காகம்
வெள்ளமாய்ப்பரவிவந்தமேவலர்ப்படையைக்கண்டு
கொள்ளையாயிறந்தகாக்கைக்குறையுமின்றழியாமுன்னப்
புள்ளினுக்கரசன்றப்பிப்போனதேபோதுமென்று. (௭௫)

சிறகுகளொடிந்திரத்தஞ்சிதறமெய்சோர்ந்துசாவு
குறுகினகாலம்போலக்கொடிப்பிணத்திரளுக்குள்ளே
மறைபடக்கிடந்துநெஞ்சில்வருத்தமோடவஸ்கையாகி
முறையிடுவார்போலமொழிகளுந்தேய்ந்துகத்த. (௭௬)

கூகைமன்னவனுமந்தக்குரல்செவியுறுதலாலே
காகமேதோகிடந்துகதறுகின்றதுபாரென்ன
ஏகியேதூதன்பார்த்தங்கெய்துகாக்கையைக்கொணர்ந்து
வாகுமன்னவன்முன்விட்டான்மன்னனீயாரையென்ன. (எஎ)

வேறு.

என்னுடைப்பேர்சிரஞ்சீவியென்பார்களருண்மேக
வன்னனுடையமுப்பாட்டன்றலைமுறையில்வந்தவனான்
சொன்னபுத்தியருமையினாற்சுகமாகவீற்றிருந்தார்
அன்னவன்வாயிலிற்கொடியவமைச்சர்வந்துதலைபட்டார். ()

அங்கவர்கடுன்மார்க்கமரசனுக்குப்போதித்தே
உங்கள்குலத்தோடுபொரவொருமித்தாரிதையறிந்தே
இங்கிதுநீர்நினைந்தீரோவிடருறுவீரெனமறுத்தேன்
தங்கண்மதவலியாலேதாம்பொருதவந்தார்கள். (எகூ)

இப்படியேசிலபகலிகல்புரிந்துவந்தென்னை
எப்படிநீபுத்திசொன்னாயென்பார்களோரிரவில்
தப்பறவேவளைந்துகொண்டுசாடுவாரவரென்றேன்
அப்படியேநென்னலிராவடித்திழுத்துப்போட்டீரே. (அ0)

கால்வேறுந்தலைவேறுங்கருஞ்சிறகுவெவ்வேறும்
வால்வேறுங்குடர்வேறும்வாய்வேறுஞ்சுவல்வேறும்
தோல்வேறுந்துடைவேறுந்துண்டாகத்துணிந்திறந்தார்
நால்வேறுமந்திரியுநானுமரசனும்பிழைத்தோம். (அக)

படுகளஞ்சோதித்தார்கள்பட்டபிணத்திரளின்கீழ்
நடுநடுங்கிமறைகிடந்துநாற்பதுகாகம்பிழைத்த
கொடியரசனிவையெல்லாங்கூட்டியினிநாஞ்செய்யும்
அடைவுசொலுமென்றுதனதமைச்சர்களைக்கேட்டானே. ()

பகற்பொழுதில்வளைந்துகொண்டுபழிவாங்குவோமென்றும்
அகப்படுமோநமக்கென்றுமப்புறம்போவோமென்றும்
விகற்பநமக்குள்ளிருக்கவெல்லும்வகையேதென்றும்
வகைப்படநால்வருஞ்சொன்னார்மன்னவனுங்கேட்டிருந்தான்

இன்னமுமக்கறிவிலையோவிகலொழிந்துநாங்கூகை
மன்னவனைப்பணிந்திருந்துவாழ்வதுகாரியமென்றேன்
சொன்னவுடனெனையடித்துத்துவைத்திழுத்துப்போட்டந்த
மன்னவனுந்தாங்களுமாய்மறைந்தெழுந்துபோனாரே. (௮௪)
செத்ததென்றுபோட்டுவைத்துச்சென்றார்களுன்பிழைத்தேன்
உத்தமனேநின்பதத்திலோடிவந்துவிழவென்றால்
மெத்தவடித்ததனாலேமெலிந்துகிடந்தேனினியுன்
சித்தமென்பாக்கியமென்றாச்சிரஞ்சீவிவணங்கலுமே. (௮௫)
மனமிரங்கியரசனுந்தன்மந்திரிகடமைவினவச்
சினமிகுந்தபுலிவலையிற்சிக்கிலதைவிடலாமோ
எனமொழிந்தாரிவர்தம்மிற்குருதிக்கண்ணனுமெண்ணித்
தனையடைந்தார்தமைக்கோறறருமமலவென்றானே. (௮௬)
தீத்தொழிலில்கொடுங்கண்ணன்றனைவினவத்தெவ்வர்வரின்
மூத்தவர்கண்மனுநீதிமுறையுரைத்தவிதிப்படியே
காத்தருளக்கடவதல்லாற்கடுங்கொலைசெய்தவர்தமையும்
நீத்தவரையுங்காணேனீணிலத்திலென்றானே. (௮௭)
மெய்த்தகொள்ளிக்கண்ணனெனுமந்திரியைவினவலுமே
சத்துருவானாலும்வந்துதனக்கினிமையுரைத்தடைந்தால்
உத்தமரானவர்வரிசையுதவியவருயிர்காப்பார்
மெய்த்தபுகழோடுலகின்மேவிமிகவாழ்வாரே (௮௮)

(கோமுட்டிக்குக் கள்ளனுதவிசெய்த கதை.)

திருடவந்தகள்ளனுக்குத்திரவியவான்கோமுட்டி
கருணையுடனுபசரிக்கக்கள்ளனுமோருதவிசெய்த
தொருகதையுண்டக்கதையேதுரையென்னவொருமையுடன்
பெருகுநிதிபடைத்துளகுபேரமித்ரனெனும்பெயரோன். (௮௯)
வெண்ணரையன்றிரைகவுளன்விதிருடம்பனொருநோக்கன்
பெண்ணமுதமடவார்க்குப்பிரியமிலாமுதிர்மூப்பன்
வண்ணமனையாளொருத்திமாரனிரதியைப்போல்வாள்
கண்ணிலளங்கவனைநெஞ்சிறுடியவடண்டாளே. (௯0)

எள்ளளவுமவன்மீதிலிச்சையிலாளோரிரவில்
கள்ளன்வரநடுநடுங்கிக்கணவனைப்போய்த்தழுவுதலும்
உள்ளமகிழ்ந்துன்னாலேயுற்றவின்பம்பெற்றனனென்
வெள்ளநிதிமிகவுளநீவேண்டுவகொண்டேகென்றான். (௬௧)

கள்ளனுமங்குளமகிழ்ந்துகன்னியுனைத்தழுவினதே
வெள்ளநிதியின்றெனக்குவீட்டிலேவிழுந்ததொக்கும்
உள்ளமகிழ்ந்தெந்நாளுமுனையிவள்வந்தணையாமல்
எள்ளியிருந்தால்வருவேனெனைநினைப்பாயெனப்போனான். ()

அன்றளவுமுதலாகவவள்பயந்துநடுங்கிமனம்
ஒன்றியிவனொடுகூடியுறங்கவவன்சுகமடைந்தான்
என்றுகந்தசொலியிவனுக்கிதஞ்செய்தாளிதம்பெறலாம்
கொன்றதனாலேதுபலன்கொடும்பழியாமென்றதுவே. (௬௩)

தகவுபெறுகுருநாசன்றனைநீசொல்லென்ன
இகலினராயினுமடைந்தேயிதஞ்சொல்வார்தமைக்காப்பார்
நிகரில்பிராமணப்பேய்க்குநெடுஞ்சோரன்றனக்குமுன்னாள்
அகமகிழ்ந்துவெகுமானமந்தணன்செய்தானெனவே. (௬௪)

வேறு.

தெள்ளுகதையேதெனவோர்திருநகரிலொருமறையோன்
உள்ளமகிழ்வொடுவளர்த்தவுயர்காமதேனுவினைக்
கள்ளனொருவன்கருதிக்களவுகொள்வோமெனவந்த
நள்ளிருளிலோர்பிர்ம்மராக்ஷசனுங்கண்டானே. (௬௫)

கண்டவனீயாரென்னக்கள்ளனுநீயாரென்ன
எண்டிசையெண்ணும்பிரமராக்ஷசனெனவவனும்
மண்டுபொருள்கன்னமிடுமோசோரனென்றான்
என்றனுநல்லிரவிருளிலிங்குவந்ததேதென்றான். (௬௬)

சோரனுநீவந்ததென்னசொல்லெனவேயிந்தமனை
ஆரணவேதியனுடலையருந்தவந்தேனெனவரக்கர்
தீரனுமிங்கிவன்பசுவைத்திருடவந்தேனெனவிரண்டு
பேருமொருமித்துடனேபெரியவன்முன்றிலையடைந்தார். ()

வந்தவிருவோருமவன் வாயிலிலேநின்றுகொண்டே
அந்தணனாருயிரைமுந்தியருந்திடுவேனென்றும்
பந்தமுடனிற்குமிந்தப்பசுவைமுந்திக்கவர்வனென்றும்
இந்தவகைத்தங்களிலேயிகலுமொலிகேட்டலுமே, (௯௮)
மிக்கமறையோனுமிவர்விவகாரந்தனையறிந்தே
புக்கவிருவோர்தமையும்பொன்றவடிப்போமென்று
சிக்கெனவாயிலிற்கதவைத்திறந்துபுறப்பட்டாரே. (௯௯)
மறையவனேநின்னுயிரைவதைக்கவந்தானிவனென்றும
குறைவறநின்பசுக்களவுகொள்ளவந்தானிவனென்றும
முறைமுறையாயிருவரிவர்மொழிந்துநின்றாரதுகண்டு
நிறைசுருதிமாதவனுநெஞ்சுகளிகூர்ந்தனனே. (௧௦௦)
அன்றுமுதலிருவோருமந்தணனுமுறவாகித்
தன்றுணைவர்தமைப்போலச்சார்ந்துடனுற்றிருந்தார்கள்
இன்றிவனுக்குபகாரமியாமுஞ்செய்தோமாகில
நன்றியல்லாற்றீதன்றுநமக்கிவனுந்துணையென்றான். (௧௦௧)
இவையுரைத்துமன்னவகேளிடருழந்துதனையடைந்த
சவிமாடப்புறாவுக்காத்தன்றசையைத்துலையிட்டான்
சிவராசனெனவுலகோர்செப்புவதுமறியாயோ
தவறுமற்சரணமெனிற்றற்காத்தனெறியென்றே. (௧௦௨)

### தச்சன்கதை.

தச்சனொருவன்மனைவிதன்னொடுசோரனையுமெடுத்
துச்சிதமாத்தலையினில்வைத்துவகையொடுகூத்தாடி
மெச்சியதோர்கதையெனநீவிளம்புகவக்கதையென்ன
மச்சுலவுமாளிகைசூழ்வளநகரொன்றதிலொருவன், (௧௦௩)
பேரிரதகாரனெனும்பெருந்தச்சனவன்றேவி
சோரனொருவனைக்கூடிச்சுகங்காணத்தச்சன்வந்து
சேரிலவன்மீதிலன்புசிறிதுமிலாளீதென்ன
காரணமென்றாங்கவனுட்கருதிவிசாரித்திருந்தே, (௧௦௪)

வேறொருவன்றோனாசையைவிரும்பிநமைக்கண்டளவில்
சிறுதலாற்சுரதநலஞ்சிறிதுமிலையெனத்தச்சன்
தேறியதைச்சோதிக்கச்சிந்தித்தேயோரூர்க்குச்
சேறலெனப்புறப்பட்டுச்சென்றிரவின்மீண்டனனே. (௧0௫)

கட்டிலின்கீழொளித்திருந்தான்காரிகையுஞ்சோரனுக்காள்
விட்டவனையழைப்பித்துமேவுதலுமவன்கால்கள்
பட்டனதன்னுடன்மீதிற்பாவையதுகண்டஞ்சி
நெட்டுயிர்த்துவிசாரமிட்டேரிழைதன்முகநோக்கி. (௧0௬)

உனக்குமணமென்மேலோவுன்கணவன்றன்மேலோ
எனக்கழறவவண்முனிந்தேயெவ்வனதோஷத்தாலென்
மனத்தையின்றுபெண்புத்திமயக்கிவந்ததொருபாவம்
எனக்கவனேதெய்வமவனிறக்கிலிறப்பேனென்றாள். (௧0௭)

அந்தமொழிகேட்டலுமேயகமகிழ்ந்துரதகாரன்
முந்திநினைத்துத்தனதுமுன்னவனைக்கூடினதும்
சிந்தையிலெண்ணாமலவர்சேருமஞ்சத்துடனெடுத்து
வந்துதலைமீதுபடவைத்துக்கொண்டாடினனே. (௧0௮)

கண்ணாரவவனியற்றுங்கருமமெலாங்கண்டுமெதை
எண்ணாமலோர்வார்த்தையிதஞ்சொன்னாளென்றலவோ
பண்ணாருந்தேர்த்தச்சன்பரிவுற்றானிவன்மனத்தில்
கண்ணாளைப்பகைத்துவந்தானமக்கிவனேயுறவென்றான்.(௧0௯

என்றுசொலப்பிரகாரநாசனைப்பார்த்தினியுரைப்பாய்
நன்றுனதுகருத்தையெனநல்லவர்போலெய்திடினும்
துன்றுபகையுற்றவர்க்குரகசியத்தோன்றாதடக்கல்
ஒன்றுதிறற்செய்கையென்றேயொருகதைநன்குரைசெய்யும்.(

### ரகசியம்விட்டுப்பாம்புகளிறந்தகதை.

விண்டுவன்மனென்னுமொருவேந்தன்வயிற்றுறுநோயால்
கொண்டுதுயருடன்மெலிந்தேயாத்திரையிற்குறிப்பிலைவைத்
தெண்டிசையினுந்திரிந்தேயெம்பிரான்கோயிலொன்று
கண்டதனில்வசித்திட்டான்கடவுளடியுளங்கொண்டே.(௧௧௧)

அப்பதியிலிருந்துலகை யளிக்குமிறைபலியென்பான்
ஒப்பறுதன்புத்திரியரிருவரிலங்கொருத்திதனைச்
செப்பியதீதுளத்தெண்ணிச்செயிர்த்தந்தவிண்டுவென்மன்
கைப்படநீர்விடுத்தளித்தான்காரிகைகற்புடைமையினால். ()
கணவனைதெய்வமெனக்கருதியவன்றனக்கிசைந்த
பணிபுரிந்துபரதேசம்படரும்போதொருநாளின்
உணவடலுக்குபகரணமூர்புகுந்துகொளப்போனாள்
பிணியுடையான்கண்ணுறங்கப்பொரும்பாம்பொன்றங்கொலிக்க
அவ்வொலிகேட்டவன்வயிற்றினரவுமொலித்திடவிரண்டும்
வெவ்வியவாதம்புரிந்துமேவுதலுமப்போது
நவ்விவிழியிவன்றனைவிநண்ணியொளித்ததுகேட்கக்
கவ்வுவயிற்றரவினொடுபுற்றரவுகழறுமால். (கக௪)
பாவிநீயிவ்வரசபுத்திரனைப்படர்செய்யுந்
தீவினையென்னெனவுணவுசெறிந்தகுடந்தனிற்சேர்ந்த
தாவறுமென்றனைநீந்தித்திடுவதென்னென்றதுசாற்ற
ஒவறுபுற்றரவமவன்கடுகுதின்றாலொழிகுவைநீ. (கக௫)
சுகமடைவானரசனென்றுஞ்சொல்லவயிற்றரவுவெகுண்
டுகுவைநீவெந்நீராலெனவுரைக்கவிவ்விரண்டும்
பகர்தருநன்மொழிகேட்டபாவையுமவ்வாறுசெய
மிகைசெயுமவ்வரவிறக்கவேந்தனுமந்நோய்தீர்ந்தே. (கக௬)
தன்னகரந்தனிற்சேர்ந்துதகவுபெறுமனைவியொடும்
இந்நிலத்தையாண்டிருந்தானாதலினாலிரகசியம்
அன்னியர்தேர்ந்திடப்புகலிலதனாலுந்துன்பமுறும்
என்னவிசைத்தொருவேடன்கதைபின்னுமியம்புமால். (கக௭)

(வேடன்கதை.)

வனமொன்றிலொருவேடன்வளர்குருவிக்கூட்டினொடும்
இனமொன்றுவேட்டைகருவிகளுமெடுத்தேதிரியக்
கனமிருண்டுமழைபெய்யக்காற்றெழும்பவவனடங்கி
மனமருண்டோர்மரத்தின்கீழ்வந்திருந்தானப்போது. (கக௮)

தங்குமதன்மேலிருந்தபுறாவொன்றுதன்பேட்டை
எங்ககன்றதோவனத்தில்யாரேனும்பிடித்தாரோ
மங்கியதோவெனப்புகலலதுகேட்டுவனரசன்றன்
அங்கையுறுகூட்டினுற்றபெண்புறாவழுதுசொலும். (கககூ)
முன்வினையாலிதுபெற்றேனாயினுநின்முளமடைந்த
இன்னவனுக்குபசாரம்புரியெனலுமெரிகொளுவி
அன்னவனையழைத்துடலின்குளிர்போக்கியாகாரம்
என்னையிநீயருந்தென்றுவீழ்ந்திறக்கவிவனோக்கி. (கஉ0)
அன்பினானம்பொருட்டுவீழ்ந்தவிதையருந்தியிடில்
துன்பமவருமெனப்பேட்டைவிடுத்திடலுஞ்சூழ்ந்ததுவும்
தன்புருஷன்பிரிவதனால்வீழ்ந்திறக்கத்தகுமிரண்டும்
இன்பமுறுதெய்வவுருவெய்திவானுலகடைந்த. (கஉக)
இரக்கமொடுவேடவனுமெரிவீழ்ந்துகதியடைந்தான்
தரைக்குளுளந்தளர்ந்துசரணார்த்தியென்றுசார்ந்தார்க்கும்
புரக்கவருள்செயிற்றுமேபொன்றவரினும்வருமென்
றுரைத்துப்பொன்னெச்சமிடும்பறவைகதையோதுமால். ()

(பொன்னெச்சமிடு பறவைக்கதை.)

பொன்னாகவெச்சமிடுமொருபறவைபொருப்பின்மேல்
பன்னாளுமுறக்கண்டுபயில்வேடனதைப்பிடித்து
மன்னவனிதைக்காணில்வாங்குவனென்னுயிருமெனப்
பின்னாய்ந்துவேந்தனுக்கிப்பெருமைசொலியளித்தனனால். ()
அவன்மணிக்கூட்டிடைவளர்க்கவமைச்சனுமங்கதுநோக்கிப்
புவியிலசம்பாவிதமாம்பொருள்கேட்டிப்படிபுரிதல்
நவையுறும்விட்டிடுதியெனநயந்துரைக்கநரபதியும்
கவலையறவிடுத்திட்டானீங்கியவக்கடும்புள்ளும். (கஉச)
புரவலன்றன்மனைச்சிகரம்பொருந்தினான்முதன்மூடன்
விரவுமிரண்டாமூடன்வில்வேடனிவ்வரசன்
மருவுமூன்றாமூடன்மந்திரிநான்காமூடன்
சரதமெனவுரைத்தந்தத்தனிப்பறவைநீங்கியதே.

ஆதலாற்பகைவனொவறிந்தபின்னேநம்புவோன்
சாதலாகும்மிகழ்வுதானடைவானென்றுரைப்ப
ஈதெலாமுளங்கொள்ளாதரசனிருந்திடநோக்கித்
தீதிலாவக்கூகைசிந்தைதிகைத்தேயுரைக்கும். (கஉசு)
இற்றைநாள்காறுமிந்தவரசனிடத்தினிதிருந்தேன்
பற்றியினியொருமலையிற்பயின்றிருத்தல்வேண்டுகின்றேன்
மற்றதுவேனெனனிற்குகையைக்கூப்பிட்டோர்வன்னரிதான்
பெற்றசுகம்போலென்றானக்கதையென்பேசெனலும், (கஉஎ)

(நரி சிங்கமோசமறிந்தகதை.)

இரைதேடுமொருசிங்கமிக்குகையினொளித்திருப்பின்
விரவினின்வந்தொடுங்குமதுதனையுண்டுமிகுபசிதீர்ந்
துரமடைவோமெனக்கருதியுற்றிடலுநரிவந்து
பரவுசிங்கக்காற்சுவடுபார்த்துச்சோதிக்கவெண்ணி (கஉஅ)
குகையதனையிருமுறைதான்கூப்பிடலுமதுபேசா
வகைகண்டுமக்கஞ்சிவாய்விடாதிருந்ததெனப்
பகையுறுகேசரிநினைந்துபன்னுகுரல்வேறாகத்
தகையினொடுமேனென்னச்சம்புவுமங்குண்ணடுங்கி, (கஉகூ)
அப்பாநான்பிழைத்தேனென்றகன்றோடிற்றுதலால்
எப்பாலராயினுநன்காராய்தலியல்பென்னத்
துப்பானமித்திரர்க்குச்சொல்லியையந்தாமந்திரியும்
இப்பாரிலுறுந்தேயசோக்குவனன்றேகிற்றே. (கஙய)
அரசனவன்போனபின்னேயடைந்தகாகத்தினையே
வருகவெனவழைத்து வெகுமானங்கண்மிகச்செய்து
திரமுடையமந்திரிசிரஞ்சீவியென்றுபல
கருமமுமன்னவன்வசமாக்கட்டளையிட்டிருந்தானே, (கஙக)
அப்பொழுதுகாக்கையினுலடிபட்டசிரஞ்சீவி
எப்படிநான்வைத்திருப்பேனிவ்வுடம்பைத்தீயிட்டே
செப்பமொடுகூகையெனச்சென்மித்துக்காக்கையெலாம்
தப்பறவேயடிப்பனென்றுசாற்றவரசனுஞ்சொல்வான்.(கஙஉ)

(எலிக்கதை.)

இந்தமொழிசம்மதமாயேனுரைத்தாய்சிரஞ்சீவி
முந்தியயோனியைமாற்றமுடியாதிங்கொருவருக்கும்
அந்தவகைசொல்லுவன்கேளருந்தவமாமுனியொருவன்
சிந்தையினினிட்டையொடுசேர்ந்தொருநீழலிலிருந்தான். ()
பருந்தெடுத்தபெண்ணெலியும்பருந்தின்வாய்த்தப்பியங்கே
இருந்தமுனிகரத்தில்விழவேதெனவேநோக்கியவன்
அருந்தவத்தாற்பெண்பிள்ளையாக்கிமனையாள்கையிற்
பொருந்தவளரெனக்கொடுத்தான்பூவையுமங்கதைவளர்த்தா.
அந்தமின்னைப்பெலவானுக்களித்திடுவோமெனமுனிவன் [ள்
சிந்தையிலெண்ணிக்கொண்டுசெங்கதிரோன்றனையழைத்தே
இந்தமின்னைநீகொளெனவிரவியறிந்தெனைமறைக்கும்
முந்தியமேகம்பெலவான்முனிவவன்கைக்கொடென.(௧௰௫
மேகத்தையழைத்திவளைவிரும்புகநீயெனமுனிவன்
தாகத்தோடுரைக்கவவன்றானுமறிந்தெனைத்துகளாய்
மாகத்திலடிக்குமந்தவாயுபகவான்பெலவான்
மோகத்தோடவற்களித்தன்முனிவரநன்றென்றலுமே.(௧௰௬)
வாயுவையுமழைத்திவளைமணம்புணர்கநீயென்று
நேயமுடனிருடிசொலநிறைந்திடுமாருதமறிந்தே
தூயவனேயெனைமறிக்குந்துங்கவரையேபெலவான்
சேயிழையையவற்கருளிச்செய்கவெனச்செப்பிடவே.(௧௰௭)
மலையரையன்றனையழைத்துமங்கைமணம்புணர்கவெனக்
குலவரையுமறிந்துகொண்டேகூறுமுனிதனைநோக்கி
நிலவறையேயெனையறுக்கநினைக்குமந்தமூடிகமே
பெலமுடையததற்களித்தாற்பெருமையெனவரைகூற(௧௰௮)
எலியரசன்றனையுமழைத்திவளைமணம்புணர்கெனவே
நலதிவளென்வளையில்வராகின்மணம்புணர்வனென
முலைமகளைத்தவமுனிவன்முன்னிருந்தபடிதானே
எலியுருவமாக்கிவிட்டானிலைசந்தவனுங்கொடுபோனான் (௧௰௯

ஆகையினால்யோனிதனையாருமழித்திடமாட்டார்
காகவடிவொழிந்தனதுகருத்தினினைத்ததுமுடிக்கும்
கூகைவடிவெடுக்கவுன்னாற்கூடாதுநாமுனது
சோகமதையகற்றிடுவோஞ்சுகமடைந்திங்கிருவென்றான். ()

அவன்மனதுவராநடந்தேயமைச்சர்களின்மேலாகித்
தவறறவேகுகைவாயிறன்வசமாக்கிக்கொண்டோர்
திவசமதிலமைச்சரொடுஞ்சேனையொடுந்தானுறங்கக் [ன்.
கவடுசெய்தேகுகைவாயிற்கடையினிற்றீக்கொளுத்திவிட்டா

புகையுடனேதீச்சூழப்பொருகூகைத்திரளெல்லாம்
குகையினுள்ளேமடிந்ததற்பின்கொடிகூகைமேல்வைத்த
பகைமுடித்துச்சிரஞ்சீவிபறந்துசிங்கமலையிருக்கும்
இகன்மேகவண்ணனொடுமினத்தோடுசேர்ந்தனனே. (௱௪௨)

கண்டவுடன்மேகவண்ணன்கருத்திலடங்காமகிழ்ச்சி
கொண்டனன்யந்திரிகளுடன்கொடிக்குலமுந்தொழுதுநிற்கப்
பண்டுபழகாருடனேபழகியிந்நாளென்மனதில்
கொண்டபகைதீர்த்தாயேகொடிக்கரசேயெனச்சிறகால். ()

புல்விமுகத்தோடுமுகம்பொருந்தவைத்தேமோந்துகொண்
எல்லையிலாக்களிப்பினொடுமிருந்தவனையருகிருத்திச் [டே
சொல்லிமுடியாதபெருந்தோத்திரங்கள்பலவழுத்திப்
புல்லியராம்பகைஞரொடுபொருந்தியவாறரிதெனவே. (கசச)

செப்பரியதம்பிகளுஞ்சேனைகளும்புடைசூழ
ஒப்பரியவரியணையுற்றுலகாளுந்தருமனுந்தான்
தப்பிவருநாளறிந்துசனியாசிவடிவெடுத்து
மெய்ப்பொடுதன்னேவல்செயும்விராடனிடத்திருந்திலனோ.()

புசபெலத்தால்வலிமையினாற்புகழ்பெற்றதிறல்வீமன்
வசையரசனடுக்களையின்மடையனெனவிருந்திலனோ
விசையனுநாடகசாலையினாரையாட்டுவிக்கும்
இசைபெறுநட்டுவனாகிச்சிகண்டியெனவிருந்திலனோ. (கசசு)

நகுலனுமங்கவன் குதிரைநடைபழக்குவானாகித்
தகைமையினாலொடுங்கியவன்றனைச்சேவித்திருந்திலனோ
புகழொடுமுக்காலமறிபுனிதனெனுஞ்சகதேவன்
இகழுமினப்பசுமேய்க்குமிடையனெனவிருந்திலனோ. (கசஎ)

எரிதழலிலவதரித்தேயிரவிகுலத்தினில்வளர்ந்து
விரிநிலவின்குலம்புகுந்தமின்னனையாள்பாஞ்சாலி
வரிவளைக்கையுத்தரிக்குமாலினியாயிருந்திலளோ
கருமமுற்றுமளவுமவர்கருத்தடங்கியிருப்பமொன்றே. (கசஅ)

மேகவண்ணன்சலிப்பாற்றமீளவுமேவாண்முனையில்
போகமிருந்தவர்போலுமோங்கெரிபுக்கவர்போலும்
நாகவளையுட்புகுந்துநண்ணினவர்போலுமுன்றன்
ஆகம்வருந்தினையோவென்றரற்றிடலுஞ்சிரஞ்சீவி. (கசகூ)

தேவரினதருளாலேதீவினையெலாங்கடந்தேன்
நீவிரவியிருந்தசலநீத்துவனவாசத்தில்
மேவியுன்றன்றிருமேனிமெலிந்ததெல்லாநான்செய்த
பாவமன்றோவெனக்கூறிப்பரிவினுடனிருத்தலுமே. (கருo)

ஈண்டொருநாடானிருந்தவயோத்திவிட்டுவனவாசம்
வேண்டினதுமவர்தேவிமிக்கசிறைபுக்கதுவும்
தீண்டரியராவணனைச்செற்றதுவுந்தேவிசிறை
மீண்டதுவும்ராகவனார்வினைப்பயனன்றோவென்றும். (கருக)

துங்கநளனரசிழந்துதூயதமையந்திதனைக்
கங்குலிலேதுகிலரிந்துகானில்விட்டுப்போனதுவும்
வெங்கணரவந்தீண்டமேனிபழுதானதுவும்
தங்கியதீவினையாலேதான்விளைந்தவாறென்றான். (கருஉ)

பாண்டவர்சூதாடினதும்பாரிழந்துநின்றதுவும்
மூண்டதழலிற்பிறந்தாண்முனைகுலைதலானதுவும்
நீண்டபெருங்கானகத்தினிலைபிரிந்துதிரிந்ததுவும்
ஈண்டியதீவினையாலேயன்றதலவோவென்றும். (கருங)

பொன்னிழந்துநாடிழந்தும்பொருவில்குமாரனையிழந்தும்
பன்னருந்தேவியையிழந்தும்பறையனுக்கூழியஞ்செய்தும்
தன்னுடம்புதான்விற்றுஞ்சத்யவரிச்சந்திரனும்
மன்னியதீவினையாலேமாழ்கினனன்றோவென்றும். (கருச)

ஆகையினல்வினைப்பயனையார்கடந்தார்நாமுமந்தக்
கூகையினனம்முடையகுலமிழந்துந்தலமிழந்தும்
போகமிழந்தும்மலையிற்புக்கொளித்தோமென்றுமிதை
நீகருதிநங்குலத்தைநிறுத்தினையென்றும்புகழ்ந்தான். (கருரு)

சத்துருவையொருவேளைதலைமேலுந்தோண்மேலும்
வைத்திருந்துசமயம்வந்தால்வதைத்திடவேண்டும்முனமோர்
துத்திவிரிகருநாகந்தோண்மேலுந்தலைமேலும்
வைத்திருந்துதவளைகளைவதைத்தகதைபோலுமென.(௱௫௬)

பாம்பு தவளையைச் சுமந்த கதை.

வழுத்துகதையேதெனவோர்மந்திரியுடனுரைக்கும்
கொழுத்ததவளைக்குலத்தைக்கொன்றுதின்னவேகருதி
முழுத்ததவளைக்கூட்டமுயங்கியவோடைக்கரைமேல்
எழுத்தைநினைத்திருப்பவர்போலிருந்துதுயரப்படவே.(கருஎ)

சாலபதனென்கின்றதவளையரசனுமங்கோர்
கோலவரித்தவளையெனுங்குதிரைவாகனமேறி
நாலுவகைச்சேனைகளுநல்லமைச்சர்களுஞ்சூழச்
சீலமொடுமேளுவகைசிலதவளைசேவிக்க. (கருஅ)

பவனிவரும்வேளையிலேபாம்பரசனொருகரைமேல்
கவலையுடனிருக்கவவன்கண்டொருதூதனையனுப்பி
இவனிருக்கும்வகையேதிங்கென்றறிந்துவருகவென
அவனருகிற்சென்றிவணீயாரிருப்பதேதென்றான். (கருகூ)

நாகவிறைநானென்பேர்நல்லமந்தவிடனென்பார்
போகிபலசூழவொருபுற்றிலிருந்தரசாள்வேன்
யோகிதனைத்தீண்டிவிட்டேன்யோகிதவளையைச்சுமப்பாய்
ஆகியதுரவிதையுமருந்துவைநீயெனச்சபித்தான். (கசுo)

சாபத்தினாலெனதுதலையில்விதிதனைநினைந்தேன்
ஆபத்துநீங்கவுங்களரசனைநான்சுமக்கவந்த
சோபத்தாலிங்கிருந்தேன்றூதவரசர்க்குரைத்தேன்
ஆபத்துநீக்கிலுங்கட்கடிமையெனததிரிவேனே. (கசுக)

எனவுரைத்தான்றூதனும்போயிவ்வாறேசொலமகிழ்ந்து
தனதமைச்சன்றனையழைத்துச்சாலபதன்கேட்பவவன்
சினமிகுத்தபணியரசன்றினமூகமைச்சுமந்தானம்
மிகநிகாத்தசாதியிலையென்றுலகும்புகழுமென்றான். (கசுஉ)

அப்பொழுதேசாலபதனரவரசன்றனையழைத்தே
எப்பொழுதுநமைச்சுமந்தாலிரையுனக்குத்தினமொன்று
ஒப்பறவேதருவமென்றுசத்திபெறக்கூறலுமே
மெய்ப்புடனேமந்தவிடன்மிகக்குனிந்தானெதிர்புகுந்தே. ( )

ஏறினான்சாலபதனேந்தினின்றான்மந்தவிடன்
பமீதயினானிவனையினித்தின்னலாமெனவெண்ணிச்
மசாறினானுனைப்பிரியேன்சாலபதனேயென்று
கூறினான்மனமகிழ்ந்துகொடுத்தானங்கொருதவளை. (கசுச)

மஇவ்வாறுதினந்தினமுமிதஞ்சொல்லியிரைநுகர
உஅவ்வாறுதவளையெலலாமடங்கலுமேவிழுங்கிவிட்டான்
குஅவ்வாதசாலபதனொருத்தனுமேதனித்துநமக்
''கெவ்வாறுமோசம்வந்ததெனக்கருதியிருந்தானே. (கசுரு)

மந்தவிடனாருமவன்மனக்கவலைதனையறிந்தே
முந்தியதன்வளைவாயின்முகத்தின்மெள்ளவிடுத்தலுமே
குந்தியவர்வளைபுகுந்தார்கொடியமந்தவிடனாரும்
புந்திமகிழ்ந்தவர்தமையும்புசித்துவிட்டானெனக்கூறி. (கசுசா)

ஆகையினாலரசர்களுமமைச்சர்களுமறிவுடையோ
ராகியிருந்தாலன்றியவிவேகராயிருந்தால்
கூகையினம்போலுமந்தக்குறுந்தவளையினம்போலும்
ஆகுமெனச்சிரஞ்சீவியறைந்தனன்வேந்தனுமறிந்தான். (கசுஎ)

புத்தியினான்மனத்திற்பொறுமையினாற்றிறமையினால்
சித்திகளாவதுபோலச்சேனைகளாற்றிரவியத்தால்
[illegible]பத்திடுகோபங்களினான்மானத்தாற்றனமனத்திற்
சத்தியினாலொருகருமந்தானுமுடியாதெனவே, (௧௬௮)

சொல்லியந்தமேகவண்ணன்சூட்சிபலதந்திரங்கள்
வல்லசிரஞ்சீவியொடுமற்றுமுள்ளவமைச்சரொடும்
நல்லகொடிக்குலங்களொடுநாடி முன்புதாமிருந்த
தொல்லைவடமரமடைந்துசுகமாகவிருந்தானே. (௧௬௯)

மூன்றாவது:—சந்திவிக்கிரகதந்திரம்

முற்றிற்று.



## நான்காவது.

# அர்த்தநாசம்.

ஆதிதந்திரங்களைந்திலாதியோர்மூன்றுஞ்சொல்ல
நீதிகொண்டவனியாளுநிருபன்றன்குமரர்கேட்டே
ஓதியவர்த்தநாசமுறைத்திடுபெரியோயென்ன
வேதியன்சோமசன்மாவிருப்புடனுரைக்கலுற்றான். (௧)

எவ்வளவாகிலுந்தாளியற்றியபொருள்கள்வந்து
கைவசமாகில்வேறோர்கருத்தினால்விடுக்கலாகா
எவ்வம்வந்தடையுமுன்னோரிருங்காரவுபாயத்தாலே
வவ்வியகுரங்கைவிட்டுமாழ்கியகதைபோலென்றான். (௨)

### குரங்கும் முதலையும்.

அக்கதையேதென்றோதவாழிசூழ்கருங்கலாற்றின்
பக்கமோர்மரத்தின்மீதுபழம்பறித்தருந்திவாழும்
மாக்கடவேந்தன்றன்பேர்வரும்பெலிவாதனன்னான்
கைக்குளாம்பழத்தைத்தப்பிகளகளென்றாற்றில்வீழ்த்த. (௩)

மற்றுமோர்கொம்பிற்பாய்ந்துவலைத்தசைத்துதிர்க்கும்போழ்
உற்றிடுகனிகளெல்லாமுதிர்ந்தனகளகளென்ன [தில்
குற்றமில்விளையாட்டாகிக்கொழுந்தனிக்கொம்புதன்னைப்
பற்றியேகுதித்துதிர்த்துப்பரிவுடனிருந்ததன்றே. (௪)

இப்படியிருக்குநாளிலியாற்றினுக்கரசனாகச்
செப்பிடுமுதலைவேந்தன்சிஞ்சுமாரனுமங்கெய்தித்
துப்புறுகனியைத்துய்த்துச்சுவையின்மேல்விருப்பினாலே
அப்புறம்போகமாட்டாதவ்விடத்திருந்துகொண்டே. (௫)

வானரவரசன்றன்னைவன்கராவரசனோக்கி
நானுனைப்பிரியமாட்டேனண்பனேயென்னவந்த
வானரவேந்தன்றானுமனமகிழ்ந்தினியகூறித்
தேனுறுகனியளிக்கத்தின்றுகொண்டிருந்ததன்றே. (௬)

இப்படியனேகநாளங்கிருந்தனன்சிஞ்சுமாரன்
கற்புறுதேவியந்தக்கசடன்மேன்மோகத்தாலே
வெப்புநோய்கொண்டுதூதுவிடுத்தனடேிவந்து
செப்புகின்றேனிநோவுதீர்க்கநீவருகவென்றாள். (எ)

யூகவேந்தனோடியாங்கூடியுறவுகொண்டிருந்தோமிந்நாள்
மோகமாய்வினைதுதேவிமூயங்கிநோய்கொடாளென்றாய்
போகவுங்காலெலழாதுபூவைதன்னேவுங்கேட்டோம்
சோகமுமிகுதியானேந்துதிநாஞ்செய்வதென்னே. (அ)

என்றனன்சிஞ்சுமாரனிதையவடானுங்கேட்டே
இன்றிவன்குரங்கைவிட்டங்கெய்திலன்குரங்கைக்கொண்டு
சென்றுநாங்கொல்வோமென்றுகுறித்துநின்றேவிவீழ்ந்த
அன்றுதொட்டின்றுகாறுமௌஷதங்கொடுத்தோமநோய். ()

தீரவுமில்லையென்னசெய்குவோம்வானரத்தின்
ஈரல்வந்தாலேயன்றியிவளுயிர்பிழையாதென்றார்
பாரியையிழந்தபேர்க்குப்பகர்குடிப்பெருமில்லை
காரியமதுவேநெஞ்சிற்கருதிநீவருகவென்றாள். (கo)

தூதிசொற்கேட்டுநெஞ்சக்துளங்கியேகுரங்கினீரல்
ஏதினியதுவேயல்லாலிவளைநாம்வதைத்தோமாகில்
பாதகந்தேவிசெத்தாற்பழிவருங்குடியுங்கேடாம்
ஆதலாற்றேவிதானேயதிகமென்றிதயத்தெண்ணி. (கக)

பயப்பயநடக்திம்மாற்றம்பகரவுங்கூசிநிற்க
வயப்படுதோழன்கண்டுவருகநின்கருத்தேதென்ன
வியப்புறுகினதுநட்பைமேவியேயனேகநாளா
நயப்புடனிருந்தேன்சற்றேநாடினன்றேவிதன்னை. (கஉ)

என்னலும்போய்வாவென்றேயிசைத்தனன்யூகவேந்தன்
மன்னநின்றன்னைவிட்டுவாழ்வதிங்கொருநாளுண்டோ
என்னுடனீயும்வந்தாலேகியேவீடுங்காட்டி
உன்னுடன்வருவேனென்னவுரைத்தனன்மூதலைவேந்தன். ()

நீரினுண்மூழ்கிச்செல்லுகின்னைநான்கரைமேல்வந்து
சேருவதெவ்வாறென்றுசெப்பும்வானரத்தைச்சிஞ்சு
மாரனுமுதுகிலேறிவருகவென்றுரைக்கநல்ல
காரியஞ்சொன்னாயென்றுகடுகியேமுதுகிலேற. (கச)

கொண்டுபோய்த்தனதுவீடுகுறுகுமுன்கல்வினாலே
மண்டுபொன்காண்பர்வாக்கான்மனிதரைக்காண்பர்தூர்த்த
மிண்டராற்சாதுவானமேன்மையர்தம்மைக்காண்பர்
பெண்டுகள்மனத்தைக்காணப்பிறிதிலையெனநினைத்தே. (கரு)

இவனைநாங்கொல்லவென்றேயெண்ணினேந்தேவிசெய்த
கவடமோதுதிதானேகவடுசெய்தனளோவென்று
மவுனமாய்நிற்கவந்தவானரநண்பாநெஞ்சில்
கவலையேதென்னவொன்றுங்கவலையிங்கிலலையென்ன. (கசா)

வீட்டினுண்மனையாளுற்றவேதனையாதேனுந்தான்
கேட்டதுமுண்டோவென்றுகேட்கநானேதுசொல்வேன்
வாட்டியநோவுகொண்டாள்வானரவீரலாலே
கூட்டியமருந்துகொண்டாற்குற்றுயிர்பிழைக்குமென்றாள். ()

வானரவீரலெங்கேவருநமக்கென்றுமந்த
ஞானமொன்றல்லாலவேறுஞானமொன்றில்லையென்ன
வானரமறிந்துகொணடுவானரவீரனூறு
தானமையாதோவென்றுசாற்றிடமுதலைவேந்தன். (கஅ)

ஒன்றுதான்போதுமென்றேயுரைத்திடவந்தோவந்த
துன்றுநீண்மரத்தின்மீதேதூக்கிவையிருக்கக்கண்டும்
இன்றுநீயெனக்குச்சொலலாதித்தனைதூரமவந்தாய்
சென்றுநாமெடுத்துக்கொண்டுதிரும்புவோந்திரும்பென்றேத.

அல்லதுவெறுங்கையோடேமனைக்கேகலாமோ
நல்லதுசொன்னாயீரநமக்குவேண்டியதுங்கொண்டு
சொல்லருங்கனியுங்கொணடுதோழியைக்காணநாமும்
செல்லுவோம்வருகவென்னத்திரும்பினாமுதலையாரும்,(உ0)

விரைந்துபோய்க்குரங்கினீரல்வேண்டுவெதெடுத்துவந்தால்
மருந்துமாமதனியார்க்குமற்றுளபேர்கட்கெல்லாம்
பொருந்தியகனிதன்னுமேலபோனகமமைக்கநல்ல
விருந்துமாஞ்செல்கவென்னமெய்யெனச்சென்றதன்றே.(உக)
மரத்தினையடுக்கக்கொண்டுவந்துதான்விடுத்தலோடும்
சரத்தினும்விரைவிற்பாய்ந்துதருவின்மேலேறிக்கொண்டங்
கிருத்தலுமுதலையாரிங்கிருந்துவானரத்தினீரல்
குரக்கினுக்கரசனேநீகொண்டுவாவென்றுகூற. (உஉ)
இன்னமேனுசைவைத்திங்கிருந்தனைமுதலையேநீ
மன்னியபசியானட்பினம்பிக்கைவைத்தாற்பாம்பால்
முன்னமோர்மண்டூகந்தானொளித்திடுமுறைமைபோலாம்
என்னலுமஃதென்னென்னவியம்புவான்குரங்குவேந்தன். ( )

## தவளை பாம்பைவஞ்சித்தகதை.

தன்னைமற்றைத்தவளைகள்வாட்டலால்
இன்னலுற்றோர்தவளையெழுந்தொரு
பன்னகத்தைச்சினேகித்துப்பையுள்செய்
என்னினத்தைவிழுங்கென்றிசைத்ததே. (உச)
நாகங்கேட்டுப்பன்னுமகிழ்ந்திரை
யாகவுண்டதன்பினெனக்கிரை
ஈகவென்னத்தவளையிலையென்ற
தாகநாகமழன்றுரைசெய்யுமால். (உரு)
வந்துநீசொன்னவார்த்தையினெய்தினேன்
எந்தநாளுமிரையளியாயெனில்
புந்தியில்லோய்நினையும்புசிப்பலென்
றுந்தியன்னதின்மக்களையுண்டதே. (உசு)
தவளையன்னதுகண்டுதன்றாமோ
டிவளவென்றற்கருந்துயரெய்தியே
துவளுநெஞ்சொடுதுன்னெனநீங்கியோர்
உவளகத்தையடைந்தின்பமுற்றதே, (உஎ)

முன்னமோர்நரிமோசம்புரிதலால்
பின்னுபுத்தியில்லாவொருவேசரி
துன்னுமாவிதொலைந்ததுகேளெனப்
பின்னுமோர்கதைபேசுங்குரங்கரோ. (உ௮)

### வேறு.—கழுதையிறந்தகதை.

துன்னியகாடொன்றங்கேதுரைத்தனம்பண்ணுஞ்சிங்க
மன்னவன்வாயிலுக்குமந்திரியோரியொன்றங்
கன்னவன்வயிற்றினோவாயமைச்சனேகழுதையீரல்
உன்னியேகொடுவாவென்னவோரியோருநாடி. (உ௯)
சென்றொருவண்ணான்றப்புஞ்செழுமபுனற்சுனையின்பக்கம்
நின்றதுபொதியைத்தள்ளிநெடுங்கயிற்றாலேகாலை
யூன்றிடத்தளைந்துவண்ணானோட்டினனகழுதைதன்னை
யென்றிகொளோரிசேர்ந்துன்மேனியேனிளைத்ததென்ன. ( )
கூறவேகழுதைவண்ணான்கொண்டநாண்முதலெந்நேரம்
ஏறியேயடித்தலானுந்தீனிபோடாமையானும்
ஏறியேபொதியுமென்மேலேற்றியேதள்ளிப்பின்னை
மாறுகால்பிணைத்தலானும்வருந்தினேனிளைத்தேனென்ன. ( )
அந்தவோரியுந்தான்கேட்டேயையநீவந்தாயாகில்
சிந்தையுண்மகிழ்ந்தேயெங்கள்சிங்கமன்னவன்றன்பக்கல்
மந்திரியாகவுன்னைவைத்தரசாள்வனீயும்
சுந்தரவமைச்சனாகிச்சுகத்துடனிருப்பாயென்ன. (௩௨)
சிங்கமோவிலங்கையெல்லாந்தின்னுமேயென்னவோகோ
எங்களையெல்லாந்தான்வைத்திரக்ஷைசெய்திலனோமன்னன்
வெங்களிற்றியானையல்லால்வேறொருவிலங்கைத்தீண்டான்
அங்கவனானைதப்பானதற்குநான்பிணையேயென்றான். (௩௩)
கழுதையுநல்லதென்னக்காவினிற்றனைத்திருத்த
பழுதையையோரிமெள்ளப்பல்லினாற்கடித்துவிட்டே
வழிசொலியழைத்துப்போய்த்தன்மன்னவன்முனம்விடுக்கப்
பழிபடுமென்னன்றானும்பற்றியேபிடிக்கவந்தான். (௩௪)

ஆலவனைக்கலசத்துட்பெய்தவன்கையிலளிக்கக்கொண்டு
செலும்பொழுதிளைப்பாயாங்கோர்செழுந்தருநிழலிற்றூங்க
நவிதரவிவனைத்தீண்டநல்லரவொன்றுநண்ணிக்
கலசமுட்டலையைநீட்டக்கர்க்கடகந்தான்கண்டே. (௧௧௮)

காரரவெனநினைந்துகடுங்கொடுக்காலிடுக்கி
மாரணஞ்செய்யப்பின்னர்மறையவன்விழித்துப்பார்த்துப்
பேரரவதனைக்கொன்றதாரெனப்பெரிதுமெண்ணித்
தேருறுபொழுதுநண்டாற்செத்ததென்றெனத்தெரிந்தான். (௧௧௯

மாதுருவாக்கியத்தைமன்னுமென்சிரத்திற்கொண்டு
போதரலாற்பிழைத்தேனென்றவன்புகுந்தானென்று
தீதுளானேதக்கேட்டுச்சுவர்ணசித்தியுமவன்பால்
ஆதரவாகப்பேசித்தன்னகரடைந்துவாழ்ந்தான். (௧௨௦)

என்றிவைபலவுமபன்னியிரங்கலுந்தனதுபன்னி
நன்றெனமறையோன்கேட்டுநாமறியாமலந்தோ
இன்றுவந்துளதிப்பாவமெனமறைமுறையினுய்ந்து
பின்றைநற்கழுவாயாற்றிப்பிழைதீர்ந்திருந்தானன்றே. (௧௨௧)

கூறினன்சோமசன்மாகொற்றவனருளுமைந்தர்
தேறினருபாயநீதித்திறமெலாமறிந்துகொண்டே
வீறினாரசன்முன்போய்விவேகத்தின்மாட்சிகாட்டி
ஈறிலாவரசுபெற்றிவ்விருநிலம்புரந்துவாழ்ந்தார். (௧௨௨)

ஐந்தாவது.—அசம்பிரேக்ஷயகாரித்வதந்திரம்

முற்றிற்று.

டாக்...ர்
உ. வே. சாமிநாதையர் நூல் ...யம்
அடையாறு, சென்னை 20

கண்டதுகழுதைதானுங்கதறியேதிரும்பியோட்டங்
கொண்டதுசிங்கநோவுகொண்டதாலோடமாட்டா
தண்டையினிற்கவோரியையநீபதறிவிட்டாய்
கொண்டுநான்வந்துன்கையிற்கொடுத்தபின்வதைக்கவென்ன.

பின்னையுமோரிசென்றுபேதையாயிருந்தாயந்தோ
மன்னவனுன்னைக்கண்டமகிழ்ச்சியாற்றழுவிமோந்து
தன்னருகிருத்திக்கொண்டுதானுனையமைச்சனுக்க
உன்னினனென்னுநீயேயோடியிங்குற்றாயென்றும். (௩௬)

கணக்கிலாப்பாவம்பண்ணிக்கழுதையாய்ப்பிறந்துவண்ணான்
பிணக்கினாலடியும்பட்டுப்பெருஞ்சுமைசுமந்தாய்நல்ல
இணக்கநான்செய்தேனந்தவிணக்கநீயறியாய்மூட
குணத்தினாற்பயந்தாயென்றுங்கூறிடக்கழுதைகேட்டே. ( )

உன்னதுபேச்சைநம்பியுற்றனன்கிட்டுமுன்னே
மன்னியசிங்கங்கொல்லவந்ததுதப்பிவந்தேன்
இன்னமேன்வந்தாயென்னவிருகிலந்தொட்டுக்கையால்
தன்னிருகாதுமுடிச்சத்தியஞ்சொல்லுமாபோல். (௩௮)

ஐயையோபாவம்பாவமரசனப்படிசெய்வானே
பொய்யுரைசொல்லவேண்டாம்போடநீயிந்தப்பேச்சை
வையகம்போற்றுஞ்சிங்கமன்னவன்வார்த்தைதப்பான்
மெய்யிதுதானேயென்றுவேந்தன்மேலாணையிட்டே. (௩௯)

தன்னிலேவருஞ்செல்வத்தைத்தள்ளுவாரொருவர்க்காணே
உன்னையேகண்டேனிப்போதுன்றலைவிதியோவென்றே [ன்
தன்னிலேயதிசயத்தேதானிதைவிட்டுநான்
சொன்னதைக்கேட்டுவந்தாற்சுகமெல்லாம்வருமுனக்கே (௪0)

இருவராமேகூடியிருந்தனமாகில்வேறங்
கொருவராலாவதுண்டோவுலகெலாநமதேயென்ன
வெருவியகழுதைதானும்விரும்பியேயிதன்பின்செல்லக்
கருதியவோரியுஞ்சிங்கத்தின்முன்விட்டதம்மா. (௪௧)

கழுதையார் தம்மைச்சிங்கங்கண்டுதன் கைகளாரத்
தழுவியேமோந்துகண்டந்தன்னையுமுறித்துப்போட்டே
பழுதுநான்செய்தோஞ்சந்திபண்ணியிம்மருந்தைக்கொள்வேம்
கழுதையைப்பழுதுறுமற்காத்துநீயிருப்பாயென்றே. (சஉ)

ஓரியைக்காவல்வைத்தேயொருசுனையருகிற்சென்று
பாரியசிங்கஞ்சந்திபணணியங்கிருக்குமுன்னே
ஓரியுமருந்தோவென்றங்குற்றதன்கண்ணுங்காதும்
ஈரிரணடுறுப்புந்தின்றேயிருந்ததுபயந்துதூர. (சங)

சிங்கமுஞ்சநதிபண்ணிச்சென்றிதன்கண்களெங்கே
இங்கிதன்செவிகளெங்கேயென்றுதான்மூடிக்கிக்கேட்க
அங்கமெலலாமுண்டாகிலகப்பட்டுந்திரும்பிப்போய்ப்பின்
மங்கிடவிறக்கவிங்கேவரகினோந்திடுமோவென்ன. (சச)

சிங்கமுங்கழுதையீரற்றின்னவுமிலலேயின்று
அங்கொருநரிதான்வஞ்சித்தழைத்துப்போய்கொல்லுவித்துத்
தங்குலவோரிக்கெல்லாந்தானிரைகொடுத்ததன்றே
பங்கமாயறிவிலாமறபட்டதுகழுதைதானே. (சரு)

அப்படிநீயுமெனனையழைக்கிலுன்வார்த்தைகேட்டே
மெய்ப்படவாறேன்வந்தாலவிரைந்துநீகொல்லுதற்குத்
தப்பிலேயிதுதானிற்கத்தன் னுண்மைதன்னைச்சொல்லித்
துப்பறுகுலாலன்கெட்டகதையொன்றுசொல்லக்கேளாய். ()

வேறு.—துயவன்கதை.

உதிட்டிரனெனுமொருகுயவனோர்சிறு
பதிக்கணேயுறைந்துமட்பாண்டஞ்செய்குவோன்
மிதிர்க்குமோடொன்றுமுன்பீறலாவிள
மதிப்பிளவெனவடுவெயங்குநெற்றியான் (சஎ)

கார்வளங்குன்றியேகாணும்பஞ்சத்தால்
சீர்வளமொன்றுமோர்தேயத்தெய்தினன்
போர்வளமொன்றுமங்காட்டின்பூபதி
வார்வளமொன்றிவன்வடுவைக்கண்டனன். (சஅ)

கன்றியபோரின்முன்காயம்பட்டவன்
என்றுசேனாபதிதலைமையீந்தனன்
வன்றிறல்வேந்தனோர்வைகல்யார்பொரு
தொன்றியவாளின்வெட்டுணாயென்றோதினான் (௪

இழித்திடுகுயவன்யானிதுவுமோவுறை
கழித்தவாள்வெட்டன்றுகடத்தினோடுமுன்
கிழித்ததென்றிடவுளநாணிக்கீழ்மையோய்
பழித்தல்செய்வாரெனைப்பாரின்வேந்தரோ. (௫

நீதுறுநின்குலந்தெரிவதற்குமுன்
போதுகவென்றிறைபுகலப்போரினில்
யாதினுமெனைவெலவாரில்லையாதலால்
நீதியன்றென்னைநீக்கலென்றனன் (௫

நின்குலம்போரினினோர்வதன்றுநீ
கொனபடுசிறுநரிக்குட்டிபோற்றுளேல்
பனபயனென்னவக்கதையென்னென்னலும்
வன்புறுவேந்தனும்வகுத்துச்சொல்லுவான். (௫௨

## நரிக்குட்டிக்கதை.

குட்டிகளிரண்டுடைக்கொடியகேசரி
பெட்டையைநோக்கியுன்பிள்ளைகட்குறைத்
தட்டறவீகுவன்றனிவிடாதுநீ
யட்டறுமன்பினால்வளர்த்தியாலென்றே. (௫௩

உறுமுணவளித்துவாழ்நாளிலோர்தினம்
சிறுநரிக்குட்டியைப்பற்றிச்சென்றிதைக்
கறியெனக்கொள்கவென்றளிப்பக்கண்டிது
பெறுமழகுடைத்தெனப்பெட்டையெண்ணியே. (௫௪

குறியதங்குட்டிகளோடுங்கூட்டியே
நறியவூணுணவினைத்தந்துநாடொறும்
பிறிவறவளர்த்திடவளர்ந்தபின்னோர்நாள்
அறிவுறுமூன்றுமங்கடவிபுக்கவே. (௫

நண்ணரியோர்கரிதனைநரியின்குட்டிதான்
கண்ணுறநோக்கியேயோடக்கண்டிடம்
அண்ணிமற்றிரண்டும்பின்னதனைநோக்கியே
ஒண்ணுமோவோடுதலுனக்கென்றேசலும். (௫௬)
நரிபெறுகுட்டியும்வலியினான்மிகப்
பெரியனென்றுறுகலாம்புரியப்பின்பிதைப்
பரிவொடுவளர்த்தபெண்சிங்கம்பார்த்திது
தெரிவிலாதுரைத்தனைசெய்திகேளென. (௫௭)
நீயொருசம்புவின்குட்டிநின்னைநான்
மாய்விலென்குட்டிகளொடும்வளர்த்தனன்
தீயநின்குலந்தனைத்தெரியினென்மகார்
காய்வரொன்றுரைத்தலுங்கடிதினீங்கிற்றே. (௫௮)
களிப்புறவேந்திதைக்கழறிநின்குலம்
வெளிப்படாமுன்னர்நீவிரைந்துபோகென
ஒளிப்பொடுகுலாலனுமோடினானென
நளிப்புனன்முதலைதானவின்றதென்பவே. (௬௯)
சொன்னவம்முதலைக்குச்சுமுகவானரம்
கன்னியர்கிருத்திரமத்தைக்காணரி
தென்னலும்யாதினைவிசைக்கின்றாயென
இன்னதாலென்றொருகதையிசைக்குமால். (௬௦)

**வேறு.—கணவனைவஞ்சித்தகதை.**

மிக்கதாராவனத்தின்மேவுஞ்சத்ய
விரதனும்பார்ப்பானுக்குரியதேவி
தொக்கபெருஞ்சண்டையிட்டுக்குடும்பந்தன்னைத்
தூறுபுரிவாளவண்மேலாசைகொண்ட
தக்கபெருவேதியனுமவண்மோகத்தால்
சஞ்சாரஞ்செயநினைக்தோர்கானிற்சென்றான்
மைக்கணியுநடையாலும்வெய்யிலாலும்
வருந்திநீர்வேண்டுமெனவாய்விண்டாளே. (௬௧)

பேதைநீயிங்கிருவென் றுரைத்துப்பார்ப்பான்
பெயர்ந்தனனீர்கொண்டுவருமுன்னேமாது
சாதலும்விண்வாணிநின்றன்வயதிற்பாதி
தருதியேலுய்வனெனச்சாற்றக்கேட்டே
ஈதலுமங்கவள்பிழைத்தேயெழும்போதோ
ரிசைபாடுமுடவனைக்கண்டிச்சைவைத்து
வேதியநீதனிவிட்டுப்போம்போதெல்லாம்
வெருவேனிம்முடவன்றுணையாய்மேவினென்றாள். (௯௨)

இவள்கருத்தையறியாவேதியனுநன்றென்
றிம்முடவன்றனக்குஞ்சோறீந்துவந்தான்
அவளொருநாடுரவோராதிளைப்பாய்த்தூங்கு
மந்தணனையதனிலவிழத்தள்ளியிந்தப்
பலமுடவன்றனையெடுத்துக்கொண்டோர்நாட்டிற்
படர்ந்தனளந்நாட்டிறைவனிவளைப்பார்த்துக்
கவலையிலளாய்முடமாமபுருடன்றன்னைக்
காக்கின்றாள்கற்பின்மிக்காளெனவியந்தான். (௯௩)

தங்கையிவளெனமுறைகொண்டுடையுஞ்சோறுந்
தானளித்துவேந்திருக்கமறையோனுய்ந்தே
அங்குவரல்கண்டவ்வளிறையைநோக்கி
யவனெனதுபுருடனுக்குப்பகைஞனென்ன
இங்கிவனைச்சிறையிடுமினென்னவேந்த
னியம்புதலுமறையவன்முன்னிகழ்ந்ததோதத்
திங்கணெடுங்குடைவேந்தனுண்மைதேர்ந்து
தெரிவைக்குத்தக்கதண்டஞ்செய்திட்டானே. (௯௪)

வேறு.

அங்கவ்வேதியனைப்போக்கியரசனுமிருந்தான்வஞ்ச
நங்கையர்தம்பேச்சுக்குநற்செவிகொடுக்கலாகா
தங்கவர்சொற்குக்காதுகொடுத்தரசனுமமைச்சும்
பங்கமுற்றனர்களென்றுபகர்ந்தனன்குரங்குவேந்தன். (௯௫)

(மகளிர்சொற்கேட்டுமானமிழந்தகதை.)

முதலையக்கதையென்னென்ன முன்புநந்தனனென்வேந்தன்
இதமுறுமனையாளூடவெத்திறச்சமாதானத்தும்
சினைதவிலளாய்நீவாயிற்றிகழ்கடிவாளங்கொண்டுன்
முதுகின்மேலெனையெடுத்துமுற்படக்கனைத்தாயானால், (௬௬)
உன்னுரைதனக்காதுகொடுப்பனென்றேதவப்போ
தன்னவனவண்மோகத்தாலப்படிசெய்யக்கேட்டுத்
தன்னிகரமைச்சனிலனும்பிணங்கிநீதலைமழித்துப்
பின்னிடம்வலஞ்செய்தென்னைப்பெரிதுறுப்பெட்டுமைந்தும்.
பரிவுடனிலத்திற்றோயப்பணிவையேனுனக்கென்னின்பம்
தருவனெனறிடவமைச்சன்சாற்றியவண்ணஞ்செய்தான்
வரருசியென்னுமனனோன்மறுதினஞ்சபையினெய்த
அரசனீமுண்டியாயிங்கடுத்ததென்னென்றுகேட்டான். (௬௮)
மந்திரியரசனேநீவாசிபோற்கனைத்தலாலே
இந்தமுண்டிதமெனக்குமெய்தியதென்றுகூற
அந்தநற்சபையிலுள்ளார்யாருமிவ்வாறுதேர்ந்து
புந்தியுணகைகொண்டார்கள்புரவலனாணங்கொண்டான் (௬௯)
மாதர்களுடனேவீணாய்ப்பேசினுமருவும்பாவம்
ஆதலாலில்லாட்காநீயடுத்தெனைக்கொலைநினைத்தாய்
நீதுவென்னும்போதுசெத்தனண்மனைவியென்று
கோதறுவ்வணமீனென்றுகுறுகிநின்றுரைத்ததன்றே. (௭௰)
தன்பிரிவாலிறந்தாடாரமென்றுரைக்கக்கேட்ட
வன்கராகுரங்கைப்பார்த்துவானரவேந்தேநானும்
புன்மையேனாதலாலேபொல்லாங்குமடைந்தேனுன்னை
இன்மைசெய்திடநினைத்தேயிஷ்டனல்லேனுமானேன். (௭௧)
என்றிடக்குரங்குசொல்லுமெனைக்கொலநினைக்குச்சொன்ன
நன்றுநின்மனைவிதுட்டையாதலாற்றுயரங்கொள்ளேல்
அன்றெனிற்பிறர்க்குடம்பட்டிருந்தவோரரிவைதன்னை
நன்றுமுனரிசிரித்தநற்கதைபோலாமென்ன. (௭௨)

(நரிசிரித்தகதை.)

சம்புதானவளைப்பார்த்துத்தானகைத்திட்டதென்ன
சமபகாவதியென்றோதுந்தக்கசீர்ப்பட்டணத்தில்
சமபமில்கிழவன்றேவதத்தனுஞ்சாவகாரி
சமபகக்குழலியன்னான்றாரஞ்சோரஞ்செய்வாளே. (எரு)
பெண்டிழந்திடுமோர்தூர்த்தன்பெரிதுந்தன்னிடத்தினேசங்
கொண்டதையறிந்தாள்வீட்டிற்கொட்டிவைத்திருந்தபொன்னை
கண்டெடுத்தவனைத்தேயங்காணவேயழைத்துக்கொண்டு [க்
வண்டிமிர்குழலாள்சென்றாள்வழியிலோராறுகண்டார் (எச)
பொருளைமாத்திரந்தான்கொண்டுபோகவேயவனினைத்தே
அரிவைநீகட்டிக்கொண்டவாடைமுன்னனவெலலாம்
வெருவுறுதளிப்பையாகின்மிகுநதீராற்றைததாண்டி
மருவவைததிட்டுநினைவந்துபின்பழைத்துப்போவேன். ()
எனவப்படிசெய்யென்றாளெடுத்துக்கொண்டோடிப்போனு
பின்னவனாணததாலேபெரிதனையமிழ்ந்துநீரில [ன்
மன்னிநின்றனளப்போதோர்வனநரியிறைச்சிதன்னை
அநநதியருகேவைத்தங்கடுத்தமீன்றன்னைக்கௌவ. (எசு)
மீனமுந்தபபிற்றந்தவிறைச்சியைமேவியோர்புள்
தானெடுத்தாகாயத்திற்பறந்ததுசம்புகந்தான்
வானினைப்பார்க்கமங்கைவானைப்பார்த்தாவதென்ன
ஈனமினரியாரோயென்றிசைக்கவந்நரிதான்பார்த்தே. (எஎ)
சோரனைநம்பியேநின்கணவனைத்துறந்ததேபோல்
நாரியேயெனக்கும்வந்ததென்றதுநகைப்பவிவ்வா
றோருமிங்கிவர்கள்வாக்குவாதஞ்செய்துறுங்கால்சாவு
காரியுமறிந்துமாதைக்கண்டித்துத்தள்ளிவிட்டான். (எஅ)
ஆகையாலில்லாள்சாகைக்கல்லனீயுறுமனுன்றன்
சாகைசேரெனக்கராவுந்தன்னிடஞ்சென்றுபார்க்க
வாகைசேர்முதலையொன்றுமருவிடப்பார்த்துமீண்டே
ஓகைசேர்குரங்கேயானுமுறைவிடந்தனக்குச்சென்றேன். ()

வன்மைசெய்முதலையொன்றுவந்திலிருந்ததையா
இன்மைசெய்ததனைத்தள்ளவியம்புவாயுபாயமென்ன
நன்மைசெய்சுமுகன்சொல்லுநன்றியைக்கொன்றபாவி
புன்மைசெய்மூடனுக்குப்போதித்தாலன்னவன்றான். (௮௰)

### குரங்கு குருவிக்கூண்டைக் கலைத்தகதை.

வீடுடையவனைவீட்டையிழந்திடச்செய்வானென்ன
நாடுறுமுதலையந்தநற்கதையுரைப்பாயென்ன
நீடுறுகுரங்குசொல்லுநெடியதோர்பழுமரத்தில்
கூடுகொண்டனவிரண்டுதூக்கணாங்குருவிதாமே. (௮௧)

குளிரினானடுங்கிவானக்கொடுமழையானனைந்து
நளிர்சுரத்தோடேதேகநடுங்கியேபற்கள்கிட்டி
வளமறுகுரங்கொன்றங்குவந்ததுகுருவிபார்த்தே
இளகியமனத்தினாலேயின்சொலாலென்றுசொல்லும். (௮௨)

கைகள்காலிருந்துமிந்தக்கனமத்தையனுபவிக்குஞ்
செய்தியேனென்னவூசிமூஞ்சிகொள்சிறியமூடா
வைதுநீபுத்திசொலலவலலையோவெனக்கோபித்து
நெய்திடுமதன்றன்கூட்டைநெடுங்கையாற்பிய்த்ததன்றே. ( )

ஆதலாற்கீழானோர்கட்காருபதேசித்தாலும்
தீதுறுமெனறுசொலலச்சிஞ்சுமாரனுமுரைக்கும்
கோதுடையேனானுங்கூறுவாயோருபாயம்
நீதியோவென்னச்சொல்லுநெடியவானரத்தின்வேந்தே. (௮௪)

நின்பகையொடுபோர்செய்துநீயிறந்திடிற்சுவர்க்கம்
பின்பவன்பொருதிறந்தாற்பெரிதுநின்னிடங்கிடைக்கும்
முன்பொருபுத்திசாலிமுறைமையினாலுபேர்க்கும்
இன்பொடுசெய்தாற்போலவியற்றிடவேண்டுமென்றான். (௮௫)

### நரி நால்வர்க்கும் நான்குபாயஞ் செய்தகதை.

இறந்தயானையைத்தின்னவோரிகலனங்கெய்தச்
சிறந்தசிங்கமொன்றடைந்துநீயாரெனச்சிறியேன்

மறங்கொணீகொன்றயானையைக்காத்திங்குவதிந்தேன்
அறநதவாச்சிங்கவரசனேயென்றதந்நரியே. (அசு)

ஈதுநான்கொன்றதன்றுநீகொள்கவென்றிசைத்துப்
போதமற்றொருபுலிவந்துயாரெணநரியார்
மாதுலாவிதைமடிததகேசரியொன்றங்குளதால்
ஓதுவேங்கையிங்குறிலெனக்குளாயெனவொளித்தே. (அஎ)

என்னகாரணமதற்கெனில்வேங்கையொன்றெய்தி
முன்னோர்யானையைக்கொன்றுதான்மூழ்கப்போங்காலைத்
தன்னியெச்சிலாக்கியதெனச்சொல்லலும்வேங்கை
பின்னரெண்ணியேமருமகனேநின்னாற்பிழைத்தேன். (அஅ)

என்றுசொல்லிமுன்னோடியதிதன்பின்னோர்குரங்கு
தன்றனோக்கியிக்கரியினைத்துண்ணெனக்கிழித்துத்
தின்றுபோவெனக்குரங்கதைக்கிழித்ததுசிங்கம
நன்றுவந்ததென்றுரைத்திடநடுங்கியோடியதே. (அகூ)

பக்குவஞ்செய்துகுரங்குபோதலுநரிபார்த்துத்
தக்கதென்றுணப்போமபொழுதொருநரிசார்ந்து
கைக்கொளற்கெணவதையடித்தோட்டியேகடிதில்
தொக்கவெமபசிதொலைந்திடவுண்டதுநெடுநாள். (கூ0)

சாமபேதநற்றானதண்டஞ்செய்தசம்பு
தீமைநீங்கியதென்னநின்பகைவற்குச்செய்து
நீமுயங்கிடத்திருந்திடுவேறிடநிற்கில
நாயவெந்துயர்நணுகுமென்றிசைத்ததுகுரங்கு. (கூக)

## நாயைக்கடித்தகதை.

சிஞ்சுமாரனும்யாதினாலதுதெரித்திடுகென்
றஞ்சியோதலுமயோத்தியிலிருக்குமோர்சுணங்கன்
பஞ்சமெய்தலால்வேறொருதேசத்திற்படர்ந்து
துஞ்சினீங்கியோர்மாதுதான்சோறிடவிருந்தே. (கூஉ)

சிறிதுநாட்சென்றபின்பந்தத்திருமனைவிடுத்து
மறுகினூற்றிடமற்றைநாயாவுமேல்விழுந்தே
இறுதிவந்ததெனக்கடித்தலுமெழுந்தஃதோடி
மறுவிலாததன்னகரிடைகொடியில்வந்ததுவே. (௯௩)

வந்தபின்னரவ்வூரிடைமருவியநாய்கள்
அந்தத்தேயநற்றேயமோவெனவகல்புவியுள்
எந்ததேயத்துநல்லதந்தேயநம்மினத்தில
பந்தவொற்றுமையின்மையாற்பலித்ததிவ்விடமோ. (௯௪)

ஆதலாற்றனதிடத்தினிலமர்ந்திடவினிதாம்
நீதிபாலந்தமுதலையைநீவெற்றிகொள்வாய்
போதியென்றலுமுதலையும்போய்ப்பொருததனை
வீதலசெய்துதன்னிடத்தினின்மேவிவாழ்ந்ததுவே. (௯௫)

நான்காவது.—அர்த்தநாசதந்திரம

முற்றிற்று.



ஐந்தாவது

# அசம்பிரோட்சியகாரித்வதந்திரம்.

ஐவகைத்தந்திரத்திலாதியோரைந்துமந்த
மெய்வகைமறையோன்சொல்லவேந்தனார்மைந்தரோர்ந்தே
செய்வகையுபாயமாந்தந்திரமெலாந்தெளிந்தோமையா
கைவருமசமபிரோட்சியகாரித்வஞ்சொல்லுகென்றார். (௧)

அரசனார்குமரர்கேட்கயாதொருகருமமேனும்
திரயொடுவிசாரியாமற்செய்யவொண்ணாதுசெய்தால்
வரமிகுகீரிதன்னைவளர்த்ததைக்கொன்றுபின்னர்
நாணியின்மறையோன்வீழ்ந்துதவித்ததுபோலாமென்றான்.( )

## கீரிப்பிள்ளைகதை

என்னவக்கதையேதென்றாரெழில்பெறுகௌடதேச
யன்னவன்றனக்குகித்தம்வந்துபஞ்சாங்கஞ்சொலவோன்
தன்னதுதேவிகர்ப்பந்தரித்திலளதனாற்காப்பம்
என்னவோர்கீரிதன்னையெடுத்தவர்வளர்த்தார்மன்னே. (௩)

புத்திரவாஞ்சையாலேபுல்குவன்மடிமேல்வைப்பன்
முத்தமுமிட்டுக்கொள்வன்மூந்தியேபாலுஞ்சோறும்
தூய்த்திடவளிப்பன்மார்பிற்றூங்கவும்படுத்திக்கொள்வன்
மெத்தவுங்களித்துநெஞ்சில்விருப்புடன்வளர்த்தபின்னர்.(௪)

மனையவள்யாகசேனிவயிற்றினிற்கருப்பங்கண்டே
சுனைவளர்குவளையுண்கட்டோகைநல்லாளேநீயோர்
தனையனைப்பெறுவாயென்றான்சதுமறைத்தலைவனாகி
வினையுநங்குலமுங்காப்பனிதியமும்படைத்துவாழ்வன். (௫)

வயதொருநூறிருப்பன்மன்னவன்சித்தமெச்ச
நயபுரோகிதமுஞ்சொல்விநலங்களும்பெறுவனென்றே
தயவொடுதேவசன்மாசாற்றலுந்தேவியான
கயனெடுங்கண்ணாளென்னகாரியஞ்சொன்னாயென்றே. (௬)

காணுமுன்கேட்குமுன்னேகாரியங்களைநினைந்து
வீணிலேபூமியின்மேல்விழுந்துருண்டழுதுநெஞ்சம்
நாணினன்பிரமசாரிநாடிலங்கதுபோனீயும்
பூணணிமார்பவீணேபுகலவொண்ணாதென்றாளே. (எ)

(பொரிமாத்தோண்டியையுடைத்தகதை.)

உரைத்தவக்கதையேதென்னவோதுமோர்நகரந்தன்னில்
தரித்திரபிரமசாரிசார்ந்தொருசிரார்த்தத்துண்டான் [தான்
அரைத்திடும்பொரிமாத்தோண்டியவற்கொருமறையோனீந்
திருத்தியிற்பருப்புஞ்சோறுந்தின்றதோர்மயக்கத்தாலே. (அ)
மற்றொருநகர்க்குச்செல்லும்வழியிலோர்மணற்றடத்தில்
சற்றொருகணப்போதங்கேதரித்தணிருந்துநெஞ்சில்
உற்றகாரியங்கள்கோடியுன்னினனிந்தமாவை
விற்றுநாமாடுவாங்கிமெய்க்கிலோரிரண்டுகுட்டி. (௯)
போடுமவ்விரண்டிலொன்றுபொலிகடாத்தன்னைவிற்று
நாடுபெண்ணாடிரண்டுகயவிலையாகக்கொள்வேம்
ஆடொருநாலாமந்தவாடுகளிரண்டிரண்டாய்
போடுமக்குட்டியோடேபொருந்தியபனிரண்டாமே. (௧௦)
பன்னிரண்டாடும்விற்றுப்பசுக்களோரிரண்டுகொள்வோம
தன்னிலேபட்டிமேய்ந்துதருக்கியேயிரண்டுமீனும்
மன்னுபாலினெய்யும்விற்றுமற்றிருபசுவுங்கொள்வோம்
அன்னவப்பசுக்களாறுமாறுசேங்கன்றுநல்கும். (௧௧)
மூவணையேருங்கூட்டிமுன்னுளநிலங்களெல்லாம்
ஓவறவளங்களாகவுழுதுநாம்பயிர்களிட்டே
மேவுதானியங்களெல்லாம்விலைகளைக்குறையவிற்றுக்
காவலனறிக்கையாலேகனக்கவோர்வீடுகட்டி. (௧௨)
இருந்துநாம்பணமுங்காசுமேமொடுபொருளுந்தேடிப்
பொருந்தியபிராமணர்க்குப்போசனமிடுவோமிட்டால்
வருந்தியேநமக்குப்பெண்ணும்வலியவேதருவாரந்தத்
திருந்திழையாளுநாமுஞ்செருக்கியங்கிருக்குநாளில். (௧௩)

மாரனுமிரதிதானுமருவியவாறுநாமும்
சேருவோஞ்சேர்ந்துநல்லசேயையும்பெற்றெடுத்துப்
பேருறுசோமசன்மாவென்றுபேரிட்டவ்வூரில்
காரகஸ்தனுமாய்வாழ்வுகனம்பெறவிருப்போமென்றும், (கச)

அப்படியிருக்குநாளிலக்தியிற்பசுக்கள்கட்டக்
கொப்படர்கண்ணுள்செல்லக்குழந்தையுமழூநாமோடி
இப்படியடிப்போமங்கேயென்றெருதடியெடுத்துச்
செப்பியபொரிமாத்தோண்டிசிதறிடவடித்திட்டானே (கரு)

கலங்கினன்பிரமசாரிகாரகஸ்தங்களெல்லாம்
துலங்கியபொரிமாவைத்ததோண்டியோடழிந்ததன்றே
மலங்குகண்ணீர்கள்சோரவயிற்றினிலடித்துக்கொண்டே
நிலந்தனிற்புரண்டுவீழ்ந்துநெடுந்துயரடைந்தானன்றே. (கசு)

(ஷை கீரிப்பிள்ளையைக்கொன்றகதை.)

ஆதலாற்காணுமுன்னேயகத்தினுண்ணிக்கொணுதென்
ரேதியயாகசேனியுடனவனிருக்குநாளில்
நீதிலாமுகூர்தந்தன்னிற்செவைனுமபிறந்தானந்தச்
சூதகங்கழிக்குநாளோர்சுனேயினின்மூழ்கப்போனாள், (கஎ)

ஆயிழைபோகையாலேயாரணமுழுதும்வலலோன்
சேயினேக்காத்திருந்தான்சிரார்த்தமென்றரசன்றூதர்
நீயவண்வருகவென்றூர்நேரமுஞ்சென்றுபோனல்
போயதையெல்லாம்வேறுபுரோகிதர்கொண்டுபோவார். (கஅ)

என்றுதன்மனத்திலெண்ணியின்பமாவளர்த்தகீரி
தன்றுணையாகவந்தத்தனேயனைவைத்துநீங்கிச்
சென்றனனரசன்வீட்டிற்சிரார்த்தமுமுடித்துப்பெற்ற
பொன்றுகிலரிசியெல்லாம்பொதிகளிமேலற்றிக்கொண்டே(ககூ)

வருமுனேசேயைக்கிட்டிவந்ததோர்நாகமந்தக்
கரியநாகத்தைங்கீரிகடித்திருதுண்டமாக்கிக்
குருதிவாயெங்குமாகக்கொண்டுசந்தோஷங்காட்ட
அருமறையோன்முன்சென்றதாகெடுத்தாயோவென்றே (உ0)

தண்டினாலடித்துக்கொன்றான்றளர்வொடுவீட்டில்வந்தான்
கண்டனன்பிள்ளைமுன்னேகரியபாம்போவிரண்டு
துண்டமாக்கடிக்கப்பட்டுத்தூரவேகிடக்கக்கண்டான்
மண்டியதுயரமாகிவயிற்றினிலடித்துக்கொண்டான் (௨௧)
வாயிலுமடித்துக்கொண்டான்மண்ணையும்போட்டுக்கொண்
சேயிலுமதிகமானசேயைநான்கொன்றேனென்றான் [டான்
நீயெனக்கெதிரோவந்துநின்றெனைக்கெடுத்தாயென்று
போயதன்மேல்விழுந்துபுரண்டுருண்டரற்றினானே. (௨௨)
தேவியுமழுங்கிவந்தாள்தேவசன்மாவைநோக்கிப்
பாவியிங்கேதுகீரிப்பாலகனிறந்ததென்றே
ஓவெனவலறிநின்றாளற்றவாறவனுஞ்சொன்னான்
காவியங்கண்ணிதானுங்கனவிடுமெழுகொத்தாளே. (௨௩)

(நாவிதனிறந்த கதை.)

ஐயையோவிசாரியாமலருங்கொலைவந்ததேநாம்
செய்யுமாறென்னவென்றேதேவசன்மாவைநோக்கிக்
கையறவிசாரியாமற்கண்டதுகொண்டடித்து
நையவேயிறந்துபோனநாவிதன்கதைபோலென்றாள் (௨௪)
நாவிதன்கதையேதென்னநகரமொன்றதிலோர்செட்டித்
தேவிதான்பிள்ளைபெற்றுடையநாண்முகூர்த்தத்தாலே
சாவர்தாய்தந்தையிச்சேய்தரித்திரனாகிப்பின்பு
மேவுநன்செல்வமென்றுவிளம்பினர்கணிதநூலோர். (௨௫)
பயந்துதான்வணிகனந்தப்பாலனையெறிந்துபோட்டான்
அயர்ந்தவன்றேவிமூர்ச்சையாகியேவீழ்ந்திறந்தாள்
நயந்தருந்தேவிபோனமக்கினிவாழ்வேதென்று
சயந்தருவணிகனாவிதானாகப்போக்கிக்கொண்டான். (௨௬)
இப்படியிவர்கள்செத்தாரிவையெலாமரசன்கேட்டே
தப்பறவணிகனீட்டுந்தனமெலாமெடுத்துப்போனான்
முப்பழியாமோவென்றுமுதியளோர்தாதியந்தக்
குப்பையிலெறிந்துபோட்டகுழவியையெடுத்துப்பார்த்தாள்.

இழைத்தநாள்வராமையாலேயெத்தனைசிறுமைப்பட்டும்
பிழைத்ததுகிடக்கவந்தப்பிள்ளையையெடுத்துப்போய்த்தான்
உழைத்ததன்கூலியாலேயொருத்தியைமுலைகொடுக்க
அழைத்துவந்தவண்முலைப்பாலருத்துவித்தவள்வளர்த்தாள்.

வளர்ந்தனன்செட்டிபாலன்வயதொருபதினாறும்
இளந்தலைப்பட்டுக்கொண்டேயிருந்தனன்றரித்திரத்தால்
உளந்தடுமாறியோர்நாளுறங்கியநாளிலாங்கோர்
வளந்தருசித்தன்வந்துவருந்தனீவேண்டாமென்றே. (௨௯)

விடியுமுன்னெழுந்திருந்துவீடெலாஞ்சுத்திபண்ணி
முடிமயிரிறக்கிக்கொண்டுமுழ்கிவெண்ணீறுபூசித்
தடியுமொன்றெடுத்துக்கொண்டுதன்மனைமுன்றிறன்னில்
கடிகைமூவைந்துமட்டுங்காத்துநீயிருக்கிலாங்கே. (௩௦)

மதியமாம்வேளைதன்னில்வருவர்பிக்ஷைக்குமூவர்
பதயிநீயெழுந்திருந்துபார்த்துநீயவரைமூளை
சிதறிடவடித்தாலந்தச்சித்தர்கண்மூவாமூன்று
நிதிகளாயிருந்துநெஞ்சினினைத்ததுதருவாரென்றான். (௩௧)

விழித்தனனவனைக்காணான்வீடெலாஞ்சுத்திபண்ணி
அழைத்துநாவிதன்கையாலேயவன்பணிகொண்டுமூழ்கிக்
குழைத்துவெண்ணீறுபூசிக்கூறியநேரமட்டாக்
கழைத்தடிகையிற்கொண்டுகாத்தவனிருந்தான்மன்னே (௩௨)

அப்படிதானேமூவரந்தவேளையினில்வந்தார்
கொப்பெனத்தடியினாலேகொண்டவனடித்தபோதில்
தப்பறவவருமங்கேதமனியமாகககண்டான்
செப்பியவாறெடுத்துத்திருமனைதனில்வைத்தானே. (௩௩)

கண்டனனாவிதன்றான்கருதியவ்வாறுதானும்
முண்டிதனாகிவந்தமூவரைத்தடியான்மோத
விண்டுயிரிறந்தாரந்தவேளையிற்காவலாளர்
கண்டனரவனையையோகழுவினிற்போட்டுவிட்டார். (௩௪)

தீரவேவிசாரியாமற்செய்யுமோர்கருமத்தாலே
பாரியமனைவியாதிபற்றிடுமுயிர்க்குங்கேடாம்
காரியந்தப்பினாலுங்கருதியோர்குறிப்பினாலே
தேருவார்க்கின்பமெய்துஞ்செட்டியார்கதைபோலென்றாள்.()

(செட்டிகதை.)

செட்டியார்கதையேதென்னத்திருந்துமோர்பட்டணத்தில்
மட்டிலாச்செல்வனானவணிகனுங்குபேரதத்தன்
கட்டழகுடையதேவிகாமசஞ்சீவியந்த
மட்டுலாங்குழலாளீன்றமைந்தனுமனங்கமித்ரான். (௩௬)
தேவியும்வணிகன்றானுஞ்சேயொடுசெருக்கிவாழ்ந்து
மேவிபங்கிருக்குநாளில்விரிகடற்கப்பலேறிப்
போவதுகருமமாகப்புந்தியிலவணிகனெண்ணிக்
காவியங்கண்ணிநீயுன்கற்பினைவிடாதேயென்றும். (௩௭)
சேயினையபூர்வவஸ்துசேர்ந்திடில்விடாதேசெம்பொன்
ஆயிரங்கழஞ்சானாலுமளித்ததைக்கொள்வாயென்றும்
போயினன்கப்பலேறிப்புசலினாற்றிசைபுரண்டோர்
மாயிருந்தீவுசேர்ந்துவாணிபஞ்செய்திருந்தான். (௩௮)
அங்கவன்மீண்டுசெல்லவனேகநாள்சென்றதந்தப்
பைங்கொடியீன்றபாலன்படித்தனன்கலைகளெல்லாம்
இங்கிதுநிற்கவேறோரெழினகரத்தில்வாழும்
துங்கமாமறையோனானசோமசன்மாவென்பானும். (௩௯)
ஓதினன்கலைகளெல்லாமுலகெலாம்புகழநித்தம்
தாதையிங்கிவனைச்சீறத்தாய்தனைநோக்கியானும்
போதுவன்பரதேசத்திற்புகலுநின்கணவற்கென்றே
கோதமாய்ச்சொன்னான்பின்னுங்கொடுந்தொழினினைந்துமீண்டான்.()
இவனைநாங்கொல்வோமென்றேயெண்ணியோர்கல்லைக்கொண்டு
கவடமாய்ப்பரணிமேலறிக்கரந்தனன்றாயுங்காணாள்
தவளநூன்மார்பன்வந்துதனயனுண்டனனோவென்றான்
அவனைநாமெங்கேகாண்போமவன்பரதேசம்போனான். (௪௧)

என்னவேகலங்கிமைந்தனேதினாற்போனானென்று
தன்னிருகண்ணீர்வாரச்சதுமறையோனுங்கேட்டான்
அன்னவளழுதுகொண்டேயருங்கலைகற்றபிள்ளை
தன்னையெந்நேரஞ்சீறுந்தன்மையாற்போனானென்றாள். (சஉ)

பேதையேநாம்புகழ்ந்தாற்பிள்ளைதான்செருக்கடைந்து
போதனைமறப்பானென்றுபுத்தியேசொன்னேனென்றான்
பாதகனினைந்தோமென்றுபரணினுமிறங்கிவந்து
தாதைபாதத்தில்வீழ்ந்தான்றனையனைத்தழுவிக்கொண்டான்.

மைந்தனுமையாவுன்னைவதைத்திடநினைந்தபாவம்
எந்தமாதவத்தினீங்குமெனக்கருள்செய்வாயென்ன
அந்தணனீபோய்நின்வேட்டகத்திலேசிலநாளுற்றால்
சிந்தையினினைந்தபாவந்திருநீசெல்கவென்றான். (சச)

ஏகினான்சோமசன்மாவெதிர்கொடுவந்தாரந்த
மாகவேதியர்களெங்கண்மாப்பிள்ளைவந்தானென்றே
பாகுபால்பருப்புநெய்தேன்பாயசம்பணியாரங்கள்
ஓகையாய்விருந்துசெய்தாருண்டுகொண்டவனிருந்தான். ()

தினமொருநீதிப்பாட்டுச்சீட்டினிலெழுதிக்கட்டித்
தனதுமஞ்சத்தின்மேலேதலையணைக்கீழேவைத்தான்
பினைவரவரவெறுத்துப்பேசினரொருநாளன்னான்
மனைவியையழைத்துநீதான்வகுக்கவொண்ணாதோவென்றார்.)

என்னநான்சொல்லவென்றாளிப்படிநீரிருந்தால்
பொன்னிலைசெலவுக்கென்றுபுகலுநீயெனச்சொன்னார்கள்
பின்னுமவ்வாறேசொன்னாள்வேதியன்சீட்டிலொன்றை
அன்னவள்கையிலீந்தீதாயிரம்பொன்னென்றானல். (சஎ)

தையலுஞ்சீட்டைவாங்கித்தமையனார்கையிலீந்தே
மெய்விலையாயிரம்பொன்விற்றுநீவருகவென்றாள்
கையிலேவாங்கிமிக்கக்கவிதையைவாசித்தந்த
ஐயனீதாயிரம்பொன்னதிகமேபெறுங்காணென்று. (சஅ)

போயினன்பட்டணத்திற்புகுந்தனன்சீட்டைக்காட்டி
ஆயிரம்பொன்னீதென்றானவரவர்வாங்கிப்பார்த்துப்
பேயபோவென்றார்கொண்டுபின்னுமோர்தெருவினிற்றன்
வாயிலில்வரும்போதந்தவணிகனார்மைந்தன்கண்டான். (௪௯)

சீட்டிதுவிலைசொல்லென்றான்செம்பொனாயிரமாமீது
தாட்டிகர்கொள்வரென்றான்றானவையெண்ணிநல்கிச்
சீட்டினைவாங்கிக்கொண்டோர்செய்யபட்டாலேசூழ்ந்து
வீட்டிலேதூங்குமஞ்சமேலுறத்தூக்கிவைத்தான். (௫௦)

செட்டியுமீரைந்தாண்டுசென்றபின்றிரும்பிவந்து
பட்டணக்கரைகண்டோடிப்பாய்களுமிறக்கிநாவாய்
விட்டொருபடகிலேறிவீட்டினிற்கருமம்பார்க்க
ஒட்டியேபாதியல்லிலொளித்துவந்தகத்திற்புக்கான். (௫௧)

அன்னையுந்தானுங்கூடியருந்தியோர்தூங்குமஞ்சந்
தன்னிலேயுறங்கக்கண்டுதானிவன்சோரனென்று
மின்னுமவாளுறைகழித்துவெட்டவேசெலலும்போது
மன்னியசீட்டுத்தொங்கமற்றிதேதென்றுபார்த்தான் (௫௨)

பட்டினூற்சூழ்ந்துகட்டிப்பாதுகாப்புற்றசீட்டை
விட்டுவாசித்தானென்றுமவிசாரியாமற்செய்தோர்கள்
கெட்டுமாய்ந்திடுவர்பின்னுங்கேடறவிசாரித்தோர்கள்
மட்டிலாச்செலவம்பெற்றுவாழ்வரென்றிருந்ததன்றே. (௫௩)

சீட்டினைமெல்லவைத்துச்செறியிருள்விடிந்தபின்பு
வீட்டினில்வந்தானந்தமென்கொடிபணிந்துநின்றாள்
தாட்டிகமைந்தன்றானுந்தாளினில்வீழ்ந்தான்றன்பெண்
டாட்டியையிவனாரென்றானனங்கமித்திரனாமென்றாள். (௫௪)

புல்லினன்மோந்துகொண்டான்புதல்வனையருகிருத்தி
மெல்லியறன்னைநோக்கிவிளைந்தவாறுரைத்தேயிந்த
நல்லசீட்டாற்பிழைத்தானம்பியென்றவனைநோக்கிச்
சொல்லிதேதென்றுகேட்டான்சொல்லுவானிகழ்ந்தவண்ணம்.

நீயெனக்குரைத்துப்போன நீதியைநினைந்துகொண்டே
ஆயிரஞ்செம்பொனீந்தேயையயான்கொண்டேனென்றான்
சேயினைத்தழுவிக்கொண்டுசெம்பொனோர்கோடியன்றோ
நீயெனக்கென்றுகூறிநேசமாய்வாழ்ந்திருந்தான். (௫௬)

கண்ணினிற்காணாமுன்னங்கருத்தினில்விசாரியாமல்
பண்ணுமோர்கருமத்தாலேபாவமும்பழியும்வந்து
நண்ணிடுமுயிர்க்குங்கேடாநலமுடன்றெளிந்துசெய்தால்
புண்ணியகீர்த்திமிக்கபொருளும்வந்தெய்துமென்றாள். (௫௭)

பின்னும்வேதியனைநோக்கிப்பேசுவாள்யாகசேனி
மன்னுமென்கருப்பங்கண்டுமகிழ்ந்துநீயுரைத்தவெல்லாம்
நன்னெறியல்லவீணாய்நகைக்கிடமாகுமென்று
முன்னமேசொன்னேனின்றுமுடிந்ததிவினைபாரொன்றே. (௫௮)

ஆர்க்கும்பேராசையாகாதந்தணனொருவன்முன்னாள்
தீர்க்கரும்வறுமைதன்னைத்தீர்க்குநாள்வந்தபோது
போர்க்கும்பேராசைகொண்டுபொருந்தினன்றுயரமென்றாள்
தார்க்குழலதுசொல்லென்னத்தையலுஞ்சாற்றலுற்றாள் (௫௯)

### வேறு. பேராசைகொண்டுபேதுற்றகதை.

மன்னுமமராவதிமேவுமறையோர்நால்வர்வறுமையினால்
இன்னலடைந்தோர்யோகிதனையெய்தியிதனைத்தீர்த்தருணீ
என்னவேண்டவவன்றானீரிரண்டுசித்திதமையெண்ணிப்
பன்னுமவர்தந்தலைமீதுபரிந்தொவ்வொருவர்த்தியைவைத்து.(

நீவிரிமயவரைநோக்கிநெடுந்தூரஞ்சென்றிடினவன்மேல்
மேவுவர்த்திவிழுகின்றதவனுக்கங்கேவேண்டுநிதி
பூவினிருக்குங்கொள்கவெனப்போனார்போகும்வழிநடுவே
தாவிலொருவன்வர்த்திவிழக்கண்டானங்குத்தாமிரமே. (௬௧)

மூவர்தமக்குங்காட்டியிதைமுறையால்வாரிக்கொள்வமெனக்
கூவநீயேகொள்கவிதிற்கூடும்பயனென்னெனவவனும்
தேவனமக்குத்தந்ததிதுவென்னக்கொண்டுசென்றனன்பின்
ஆவலுறுமூவரும்போம்போதங்கேவீழ்ந்ததொருவனுக்கே,()

வெள்ளிதனைக்கண்டவனுமவ்வாறுரைக்கமேலுமாசையுற்றா
உள்ளதுனக்கேயிதுவென்னவுரைத்தாருற்றானவன்கொண்டு
மெள்ளச்செலவங்கொருவற்கு வீழ்ந்ததிரிபொன்னுறலகண்டு
கொள்ளுவாமீதிருவருமென்றேதகக்கொளுமபேராசையால ()

நீயேகொள்கென்றுரைத்தொருவனீங்கநீயும்வந்தபினப
தூயோயுாககுசசெலவமெனச சொலலவிரைவினவநதிடுவன்
தாயேயனையாயிருவெனறுசாறமிபபோனுனவவிட்டதுச்
சாயாதொருசககரமொருவனறலையிறசுழலககணடனனுல். ()

கண்டுநீயாருனமேற்சக்கரந்தானசுழலுங்காரணமென
விணடுபுகலெனறிடவவனைவிட்டுகேகட்டவிவனறலைமேல்
பண்டுசுழனறதெனச்சுழலபபயநதீதென்றேஙினறுவெட்ட
மிண்டுபூதமபுறபபட்டாறபோலவிளைநதவேதனையே. (௬௫)

என்னக்கவலையுடனவனைக்கேட்கவவனுமியமபாவான்
முன்னைககுபேரனசாபததாலெனமேறசுழனறமுனையாழி
உனனைககணடாறநீருமெனவுரைசதானனனேனவ்வாறே
கினனைககண்டவெனைவிடுத்ததெனலுமவாததிநெடுநதலையன ()

வருநதிடபிள்ளையாரபிடிக்கக்குரங்காய்முடிநதவாறதுபோல
பொருநதிறறெனறுதனபுறறுபபுகலாயிஙகெத்தனைநாளா
இருநதிட்டனையெனறிடக்காலமெனககுததெரியாசிராமன்
திருநதபபுவியாள்காலமெனறுசெபபினனுமுனறிகிரிதரன். ()

தருவாாரோசோறுரொனனத்தாகமபசியிங்கிலலையெனத்
திருவார்குபேரனிதிகவரச்சோவார்தமமையச்சுறுககப்
பெரிதாவைததவாழியெனறுபேசிபபுகன்றான்பினபுமுன்பு
பரிவாயககாததசுவானசிததிபார்த்துபபாாததுக்கணபூத்தே ()

தேடிவருங்காற்சக்கரந்தான்சிரமேற்சுழலவவனிருத்தல்
நாடியிதுவெனனெனக்கேட்கநணபாபேராசையின்வந்த
பாடென்றுரைக்கச்சுவர்ணசித்திபயநதுபிள்ளைவரந்தேடிக்
கூடுபுருஷன்றனைபபறிதான்கொடுத்தாற்போலாயிற்றென்றே.

சற்றேகலங்கிப்பின்றெளிந்துசாற்றும்வெள்ளைப்புத்தியினூர்
மற்றோரநிலைவக்கேளாமன்மாண்டசிங்கமுயச்செய்து
கற்றேயுறுமந்திரவலியைக்காட்டுங்கதைபோலானதென்றான்
மற்றேதகுசொல்லெனக்கேட்கவகுப்பான்சுவர்ணசித்தியே. ()

## சிங்கத்தைப்பிழைப்பித்துச்செத்தகதை.

துளசாபுரத்தினல்வொருதொடர்பாய்க்கல்விபயின்றோர்கள்
வளமாரவரினெருமூவர்மந்திரத்தின்மிக்கமையால்
தளமாரரசன்றனைக்கண்டுதங்கள்வித்தைத்திறங்காட்டி
ஒளியார்தனங்கண்மிகவிட்டற்குன்னித்தம்முட்கூறுவார். ()

இவன்றான்மிக்ககல்வியிலனெனினுநம்மோடிருந்துபடித்
தவனுதலினுமொருபங்குதருவோமென்றங்குடனழைத்துப்
புவியாளரசனிடைப்போகும்போதிலந்தவழியினிடைச்
சவமாஞ்சிங்கந்தனைக்கண்டுதம்மந்திரஞ்சோதிக்கவெண்ணி ()

கற்றவித்தையாற்செத்தகண்டீரவத்தையெழுப்புவேன்
மற்றையவர்க்குச்சம்மதமோவென்னமந்திரந்தெரியா
துற்றவொருவனெழுப்பிலதுகொல்லுமென்னவுரைத்திடலும்
பற்றியவனைத்தள்ளவவன்பயந்தோர்மரத்திலேறினன். (எ௩)

எழுப்பினர்பின்பதுகொல்லவிறந்தாரம்மூவருமிதனால்
இழுக்கிலாதகல்வியினுமறிவேபெரிதென்றிசைத்திடலும்
ஒழுக்கமறுநேமித்தலையனூழேபெரிதென்றொருகதைதான்
பழுத்தசெம்பொன்செற்றோற்குப்பரிவதாகப்புகல்வானே. ()

மறுவின்மகததேயத்துமலர்ப்பொய்கையினில்வீற்றிருக்கும்
அறிவாயிரத்தனூற்றறிவனெனுமீனிரண்டோடங்கிருக்கப்
பெறுமோரறிவனெனுந்தவளைபிரியாதுறைந்ததத்தவளை
உறுகால்வலைஞனொருநாளங்குற்றுப்பேசுமுறைகேட்டே. ()

இருமீன்களையுந்தாமேனக்கியிங்குநாளைவலைஞன்வந்தா
பெருமீனெல்லாம்பிடிப்பனென்றுபேசினன்யாமிப்போதே

ஒருநீர்த்தடத்துக்கேகுவதூஉன்.  ன்னவுரைத்திடலும்
அருநீர்நடையின்மிகவலலேனென்றானயிவாயிரத்தானே. ()

வலையிற்பெயராலாகாதென்றுரைத்தானிக்கழுநூற்றறிவன்
அலையிற்றிகழுந்தவனைநானகல்வனெனப்போதலுமபின்னாள்
வலைஞன்மீனங்களையெல்லாம்வாரிக்கொண்டுபோமபோது
கொலையிற்படுதன்னட்பினைக்குலவோர்றிவன்கண்டனனே.

பெட்டைதனக்குமதுகாட்டிப்பேசுமென்றன்சொற்கேளா
மட்டியுறிவாயிரத்தனொடுவளர்நூற்றறிவன்சுற்றமொடு
பட்டபாடுமெனதிருப்புமபாரொன்றுரைத்ததனாலே
தட்டின்மிக்கவுறிவனையுந்தீயூழ்வந்துதடுக்குமென்றான். (௭௮)

### இசைபாடிக்கழுதையிடருற்றகதை.

பரிதிதரனிவ்வாறுரைக்கப்பைம்பொன்பெற்றோனிசைபாடி
ஒருபுன்கழுதைக்குற்றதுபோலுனக்கிவ்விடர்தானுற்றதெனத்
தெரிபவதுகூறெனவனெடுஞ்செவியலென்னுமொருகழுதை
பொருவிலசுமதிகரியினொடுபுலத்திற்பயிர்மேய்ந்துறுநாளில். ()

மேவுமொருநாள்விலாப்புடைகள்வீங்கமேய்ந்துதேக்கெறிந்து
தாவிலகழுதைநிலவெறிக்குந்தண்ணூறிரவினிற்பொழுது
போவதற்குச்சங்கீதமபுகலவேனீகேளெனநரியும்
ஏவுமுனதுகுரல்கேட்டாற்கொல்வார்பயிர்காத்திடுவாரே. ()

என்றுசொல்லக்கேளாமலிராகம்பாடக்குரல்கேட்டே
ஒன்றுகழுதையெனவுழவருடம்புநுறுங்கப்புடைத்திட்டார்
அன்றுநரிதான்மாமாவென்பேச்சைக்கேளாவகந்தையினால
இன்றுபட்டாயெனவேசிற்றென்றான்பொன்பெற்றனன்றானே.()

### தகாவரம்பெற்றுச்சாலியனிறந்தகதை.

சிந்தையில்சுவர்ணசித்திநிகழ்த்தியகதையைக்கேட்டே
இந்தநற்கதைகேளென்றேயியம்புஞ்சக்கரதரன்றான்
நந்துறுதடங்கள்சூழ்நாரணபுரத்தின்வாழும்
மந்தரநாமன்றந்துவாயன்வத்திரங்கணெய்வோன். (௮௨)

(வேறு.)

தழைமரமுறிதலாலேதக்கான் மரமவெட்டற்குச்
செறிவனந்தன்னிற்சென்றுதிரிந்தொருவாகைகண்டு
முறிபடவெட்டுதற்குமுயலும்போததன்மேனின்ற
அறிவுறுமியக்கனோக்கியவனோடுமொன்றுசொல்வான். (௮௩)
இந்தவென்னிடத்தைவெட்டாயென்னினீயிச்சைகொண்டு
வந்தநல்வரமீவேனென்றனன் மகிழ்ந்துமீண்டு
நந்தவினட்பாயுள்ளநாவிதன்றனைக்கேட்க
மந்திரியாவேனீயரசனுமவரங்கேளென்றான். (௮௪)
மனைவியோடிதையுரைக்கமற்றவளரசுபெற்றால்
கனவிடையூறுமேவுமாதலாற்காதலாநீ
இனமொருதலையுங்கைகளிரண்டுப்பெற்றுற்றாயானால்
தினமிருதழைவிரித்துச்செய்யலாம்வேலையென்றாள். (௮௫)
மாலையங்குழலாள்சொன்னவார்த்தையேநல்லதென்று
சாலிபன்சென்றுபெற்றுத்தன்னகருற்றான் கண்டோர்
ஆலமோரக்கனுமென்றானுக்கோர்கலலைக்கொண்டு
மேலுறவெறிந்தார்செத்தான்பெய்விகாரங்கொண்டோனே.()
சக்கரதரனிவ்வாறுசாற்றியகதையைக்கேட்டே
இக்குவலயத்தொருத்தற்கிதமொழிந்தகிதஞ்செய்தால்
துக்கமேயடைவனென்றுசுவர்ணசித்தியுமுரைக்க
அக்கதைசொல்லுகென்னவவன்றனக்குரையலுற்றான். (௮௭)

(குரங்குபழிவாங்கிய கதை.)

தவமிகுமயோத்தியானுஞ்சந்திரசேனனென்றன்சேய்
கவிகளினுடலகாணுங்கருத்தறிந்தொருசாலைக்கண்
சவிபெறுகுரங்கனேகந்தான்வளர்த்திடுமந்நாளில்
புவிபுகழரசனேவலபுரிபவர்சண்டையிட்டார். (௮௮)
ஒருகுரங்கதுகேட்டுத்தன்னுறவினர்க்குரைக்குமிப்போர்
பெருகுமிற்றீதாமற்றோர்வனத்திலும்பெயர்வோமென்ன
உரைசெயக்கிழவின்சொற்கேட்டுண்பதையறோமென்றேவா
னரமெலாமிகழ்ந்துபேசநடுங்கியங்கவரைவிட்டே. (௮௯)

தன்குடும்பத்தினோடோர்கானிடைச்சார்ந்ததப்பால்
பின்பொருநாளச்சண்டைபெரிதுறவவரிலேயோர்
வன்பினன்கொள்ளிக்கட்டைமற்றவன்மேலேவீச
முன்புறுகுதிரைச்சாலைமேலதுமூண்டதன்றே. (௯௦)

சாலையுமெரியவாசிதாஞ்சிலவிறந்தவெண்ணில்
கோலவெம்புரவிதீயிற்கொண்டனகாயமன்னன்
பாலடைந்ததனைக்காப்போர்பகர்தலுமந்நோய்தீர்க்கும்
சீலனையழைத்துமாக்கடியினோய்க்குகென்றான். (௯௧)

மருத்துவன்குரங்குநெய்யாலன்றிநோய்மாயாதென்றான்
செருத்தொழிலிறைவன்சாலைசேர்ந்துளகுரங்கையெல்லாம்
வருந்தியந்நெய்யைக்கொண்டுவாசிநோய்வாசியாக்கென்
றுரைத்தனனவ்வாறேநோயொழித்தனர்மருத்துநூலோர். ( )

இப்பழியிறையிடத்தேவாங்குவேனென்றுமுன்போய்த்
தப்பியகிழக்குரங்குதன்மனமபதைத்தேயெண்ணி
ஒப்பிலாப்பெருங்கானத்திலொருகுளமிருக்கக்கண்டு
வெப்பறுபேயொன்றிங்குமேவவேவேண்டுமென்று. (௯௩)

எண்ணியக்குளத்திற்கஞ்சத்தாளினாலிருநீருண்ணை
நண்ணியபேய்கண்டங்குநனுகின்பெருமைகண்டுன்
கண்ணெதிர்ப்பட்டேனென்றுகழுத்துறுமாலைதன்னைத்
துண்ணெனவெடுத்துநல்கவாங்கியேசொலுங்குரங்கே, (௯௪)

எவ்வளவிந்தநீரிலுனக்குளவலிமையென்னச்
செவ்வியோயிந்தநீரிலாயிரம்பேர்சேர்ந்தாலும்
கைவ்வலித்துண்டற்கானசத்தியென்கண்ணுண்டென்ன
இவ்விடம்புகிப்புனக்கேயான்கொடுவருவனென்றே, (௯௫)

யாலையைக்கழுத்திற்பூண்டவானரமகன்றுவேந்தன்
பாலடைந்திடவவன்றான்பார்த்திந்தமணியின்மாலை
சீலனேயெங்குசம்பாதித்தனையெனக்குரங்கு
கோலமாமொருகானத்திற்குளந்தானொன்றுளதுமன்னா. (௯௬)

அக்குளந்தன்னிற்காலையடைந்துமுன்குதிப்போர்க்கெல்லாம்
இக்கதிர்மணிகளெய்துமெனச்சொலயானுமெய்தித்
திக்கொளிவிரிக்குஞ்சோதிச்செழுமணிபெறுவேனென்று
புக்கவக்குரங்கினோடும்போயினன்சேனைசூழ. (௯௭)
போனபினிதுவேகாலம்புகுந்தநின்சேனையெல்லாம்
கானவிர்மலர்த்தடத்திற்களிப்பொடுகுதித்துத்தங்கட்
கானகன்மணிகள்கொண்டபின்னரேயரசநீயும்
நானுமொண்மணிகள்கொள்வேமென்றதந்நாகந்தானே. (௯௮)
அப்படியாகவென்றேயரசனுஞ்சேனையோரைக்
குப்புறுகென்னவோதக்குதித்தலுமவரைப்பற்றித்
துப்புறுபூதந்தானுந்தொடர்ந்திழுத்துண்டதங்கே
தப்புறுவேந்தன்றானுந்தடத்திடைக்காத்திருந்தான். (௯௯)
நெடும்பொழுதங்குகாத்துநீரிடைக்குதித்தசேனை
அடங்கலும்வராமைகண்டேயரசனக்குரங்கைநோக்கித்
தடந்தனிற்குதித்தசேனைசார்ந்திலதென்னேயென்றான்
நடந்தொருமரத்தின்கொம்பினேகமுன்னேறிச்சொல்லும்: ()
கொழிபுகழ்வேந்தனேயெங்குலத்தையெல்லாநீகொன்ற
பழிதனைவாங்கவந்தேன்முடித்தனன்பண்டுநின்சோ
றழிபசிக்குண்டேனாதலாலுனைவிடுத்தேனென்று
மொழிநரவிரங்கிவேந்தன்முந்துதன்னகர்புக்கானே. (௧௦௧)
அத்தகுகருமஞ்செய்தாயாதலினினக்கித்துன்பம்
சித்தியாயினதென்றோதியுறைவிடஞ்செல்வேனென்றான்
பத்திநீத்தென்னைவிட்டுப்போகுதல்பண்போயான்சொல்
இத்தைநீகேட்டியென்றேயியம்புவான்சுவர்ணசித்தி. (௧௦௨)

### தூரங்துன்புற்றகதை.

பன்னுசீர்மதுரைவாழ்வோன்பத்திரசேனவேந்தன்
அன்னவன்புதல்விரத்தினாவதியழகின்மிக்காள்
தன்னையோரரக்கன்பற்றச்சார்ந்ததைத்தோழிக்கோதச்
சொன்னதையரக்கன்கேட்டுத்துணுக்கமுற்றெண்ணுவானால்.

நம்மினும்வலியோனிந்தநாட்டமுற்றிவணிருந்தால்
அம்மகாவென்செய்வேனென்றச்சமுற்றரசனில்வாழ்
செம்மைசேர்குதிரைப்பந்திசேர்ந்தொருகுதிரையாகி
விம்மலுற்றிருந்தானந்தவேலையோர்கள்வன்வந்தான். (௧௦௪)
அரக்கனுங்குதிரைதன்னைக்கவர்ந்ததன்மேலேயேறிச்
செருக்கொடுநடத்தநோசெல்லுறுமையினடிக்கத்
தருக்கழிந்தோடல்கண்டுதழைந்தவோராலின்வீழை
வெருக்கொடுபற்றியேறிமீதுசென்றனனக்கள்வன். (௧௦௫)
குதிரையும்வெருவியோடக்குரங்கொன்றுகூவிச்சொல்லும
பொருவிலாவரக்கனைபுரவியேமனிதனுசரு
வெருவுசலென்னேயென்னவிளம்பலுஞ்சோரன்கேட்டுப்
பரிவொடுகுரங்கின்வாலைப்பற்றியேவருத்தினனே. (௧௦௬)
நீடுறுகுரங்குவஞ்சமுடைத்தெனநினைந்தரக்கன்
ஏடினனக்குரங்குக்குறுதுயரொனக்குமெய்தும்
ஆடுறுசக்கரத்துக்கஞசினேனெனென்றோத
நாடிஆழ்க்கதையியானறோதுமிடருற்றோன்பொன்னுற்றோற்கே.

வேறு தருடன்மூநன்மூவர்துணைப்பட்டகதை.

மதுவூர்தனக்குக்காவலனுமதுசூதனற்குமும்மூலைப்பெண்
புதுமையாகபபிறநதிடலாற்புரைதீர்சோதிடனையழைத்து
முதுமையுடையீரிதற்குநான்முயலவதென்னேயென்னவவன்
இதுநன்காய்நதுசொலவேணடுமாராயாமலிசைத்திட்டால். ()
சண்டகருமன்செயலபோலாநதலைவவென்னவவன்யாது
பண்டுபுரிந்தானெனவவன்றான்பரவுந்தண்டகாரணியத்
தண்டியுறைவானரக்கனவனங்குற்றிடுமோர்பூசுரன்மேல்
மிண்டியேறிநடத்திவருநாளிலொருநாள்வேதியனும். (௧௦௯)
பாதமுனக்குமெல்லியவாயிருக்கும்பரிசுபுகலென்னப்
பேதவரக்கனீராடியீரமபுலர்ந்தபினசெல்வேன்
ஆதலாலிவ்வாறிருந்ததென்றானொருநாளவ்வரக்கன்
சீதநீரிற்குளிக்கும்போதோடினனச்செழுமறையோன். (௧௧௦)

அடியினீரம்புலர்வதன்முனப்பானடப்பதில்லையென்ற
படியாலன்றோகமைப்பிடிக்கமாட்டானென்றுபார்ப்பானும்
கொடியினைகன்றானெனவரக்கனுந்தங்கிருந்தானாதலால்
நெடிதாராய்ந்துசொல்லுதலேநீதியென்றான்சோதிடனும். ()
பன்னூலாய்ந்துபுரவலனைப்பார்த்துநீநின்மகளைதிரோ
துன்னலாகாமையின்வேறோர்துலங்குமாடந்தனில்வைப்பாய்
என்னவவ்வாறவன்வைத்தேயிருக்குநாளிலவ்வனிதை
உன்னுமங்கைப்பருவமதையுற்றாளெனக்கேட்டரசனுமே. ()
இந்தமாதுதனைக்கொள்வார்க்களவினிதியோடீவனென
அந்தமொழிகேட்டொருகுருடன்கூனன்மிசையூர்ந்தடுத்தரச
தந்திடென்னவக்கணமேதந்தான்குருடற்கவ்வூர்விட்
டெந்தநாட்டினாயினுநீபோகுமென்னவவர்போனார். (கக௩)
யற்றோர்நாட்டின்மூவருமபோய்வைகுநாளிற்கூனன்மிசை
உற்றவாசைமிகக்குருடனுயிரைப்போக்கவுபாயமிது
கற்றேறசெத்தபாம்பொன்றைக்கறியாக்கிடுதற்கடுப்பேற்றிச்
சற்றேதியூட்டெனக்குருடன்றானும்விறகிட்டெரித்திட்டான்.
வேகும்பாம்பினாவியவன்விழியின்மேலேதாக்குதலால்
போகும்விழிகடெரிந்தனதூரத்திற்போகிக்குலாவுமவர்
மோகங்கண்டுபோய்வளைந்தமுதுகன்றனையீர்த்தெடுத்தவள
தாகந்தன்னிலெழியநடுமூலையுமறைந்ததப்பொழுதே. (கக௫)
கூனன்கூனுநிமிர்ந்திட்டதாதலாலிக்குவலயத்தில்
ஆனதெய்வவருளுண்டேல்யாவுநலமாமென்றதன்பின்
நீநின்னகருக்கேகுநகானெறிக்குத்துணையோடேகெனமுன்
போனதுணையிற்பயன்கொள்கதைபுகலுவான்சக்கரதரனே.()

**வேறு.—நண்டின்வழித்துணையாற்பிழைத்தகதை.**

நாசிகதேயந்தன்னினண்ணியதத்தனென்பான்
தேசிகன்கருமமுற்றச்செல்வனானூர்க்கென்றேத
ஏகுறுவன்னைநீநற்றுணையொடுமேகுகென்றாள்
பேசுறுந்துணையின்றென்னப்பின்னுமவ்வன்னையெண்ணி. ()